விலை ரூபா 2-00

16 பக்கங்கள்

# ஈழநாடு

வார மலர் EELANADU VARAMALAR

மலர் 27 மார்கழி 14 ரபி-ஆகி 16 யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை (29—12—85) இதழ் 322

## மன்னாரில் பதற்றநிலை போக்குவரத்து தடை

(மன்னார்)

மன்னார் பரப்புக் கடந்தான் பகுதியில் நேற்று இடம் பெற்ற சம்பவத்தைத் தொடர்ந்து பதற்ற நிலை தோன்றியுள்ளது

மன்னார் நகரிலிருந்து சுமார் 15 மைலுக்கப்பால் பரப்புக் கடந்தான் பகுதி உள்ளது. நேற்று அதிகாலை பெருந்தொகையான ஆயுதப் படையினர் வாகனங்களில் இப் பகுதிக்குத் தேடுதல் நடவடி

(13 ம் பக்கம் பார்க்க)

### தீவிரவாதிகளைப் பிளவுபடுத்தும் திட்டம்

# மொசாட்’ யோசனைப்படி வெளிநாடுகளில் பிரசாரம்?

## இந்திய அரசு உன்னிப்பாக அவதானிப்பதாக ‘இந்து’ தகவல்

(புதுடில்லி)

**தமிழ் தீவிரவாத இயக்கம் ஒன்று இலங்கை அரசுடன் இரகசிய உடன்பாடு ஒன்றைச் செய்துகொண்டு பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டு வருகிறது என இலங்கை அதிகாரிகள் வெளிநாடுகளில் பொய்ப் பிரசாரங்களை மேற்கொண்டு வருவதாகவும் இதனை இந்திய அரசு உன்னிப்பாக அவதானித்துவருவதாகவும் சென்னையிலிருந்து வெளிவரும் ‘இந்து’ பத்திரிகை தெரிவித்துள்ளது.**

இதேவேளையில் ‘மொஸாட்’ போன்ற வெளிநாட்டு ஏஜென்சிகளின் ஆலோசனையின்படி தமிழ்த் தீவிரவாத இயக்கங்களுக்குள் பிளவை ஏற்படுத்தி சமாதானப் பேச்சுக்களுக்கு வாய்ப்பான சிறந்த சூழ்நிலை ஏற்படுவதைத் தடுக்கும் நடவடிக்கைகளிலும் இலங்கை அரசு தீவிரமாக ஈடுபட்டுவருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மிதவாதப் பிரிவு, மட்டுப்படுத்தப்பட்ட சுயாட்சியை ஏற்றுக் கொள்ள மறுக்கும் பிரிவு’ தனிஇராச்சியத்திற்காகப் போராடும் மார்க்ஸிய தீவிரவாதிகள் என தமிழ் தீவிரவாத இயக்கத்தினரை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கும் முயற்சியிலேயே அரசு ஈடுபட்டுள்ளதாம்.

தமிழ் தலைவர்களுக்கும்

[13-ம் பக்கம் பார்க்க]

## ஆர்ப்பாட்ட ஊர்வலம்

[அக்கரைப்பற்று]

அக்கரைப்பற்று தமிழ்ப் பகுதிகளில் நேற்று 5 ஆயிரத்துக்கு மேற்பட்ட தமிழ்மக்கள் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடத்தினர்.

[13-ம் பக்கம் பார்க்க]

## கண்காணிப்புகுழு 4,5ல் யாழ். விஜயம்

(யாழ்ப்பாணம்)

போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு ஜனவரி 4ம், 5ம் திகதிகளில் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யவுள்ளது.

சுதுமலை, அரியாலை, நெடுங்குளம், பொன்னாலை ஆகிய பகுதிகளில் உள்ள பிரஜைகள் குழுக்கள் நாளை திங்கட்கிழமை காலை பிரஜைகள் குழுத் தலைமை அலுவலகத்தில் சந்திக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (மா)

### தென்பகுதியைச் சேர்ந்த மூவரை

## வந்த ரயிலிலேயே திருப்பி அனுப்பினர்

(யாழ்ப்பாணம்)

யாழ் தேவி ரயிலில் நேற்று யாழ்ப்பாணம் வந்திறங்கிய தென்னிலங்கையைச் சேர்ந்த மூவர், அதே ரயிலிலேயே ஏற்றி திருப்பி அனுப்பி வைக்கப்பட்டனர்.

யாழ்தேவி ரயில் நேற்று 2-15க்கு யாழ். ரயில் நிலையம் வந்து, திரும்பவும் 2-46 க்கு கொழும்பு நோக்கிப் புறப்பட்டது.

யாழ். கச்சேரி ரயில் பாதை ஊடாக மூன்று நபர்கள் யாழ் கச்சேரிப்பக்கம் வந்துகொண்டிருந்தைக் கண்ட சில இளைஞர்கள் அம்மூன்று நபர்களையும் விசாரணை செய்தனர். அம்மூவரும் சிங்களத்தில் மாத்திரம் பதில் சொல்லவே விசாரணை செய்த இளைஞர்கள் அம் மூவரையும் அங்கிருந்து அழைத்துச்சென்று, யாழ். கச்சேரி ரயில்வே கடவையில் வந்துகொண்டிருந்த ரயிலை சிவப்புக்கொடிகாட்டி தடுத்து நிறுத்தி ரயிலில் வழி அனுப்பி வைத்தனர்,

சம்பந்தப்பட்ட மூவரும் எதற்காக யாழ்ப்பாணம் வந்திறங்கினுர்கள் என்பது தெரியவில்லை- (மா)

## 25 யுத்தமீறல் சம்பவங்களில் 44 படையினர் 11 பொதுமக்கள் 23 தீவிரவாதிகள் பலி!

### கண்காணிப்புக் குழு அறிக்கை

[கொழும்பு]

இரண்டுமாத காலத்தில் தீவிரவாதிகளினுல்மேற்கொள்ளப்பட்ட 25 யுத்தநிறுத்த மீறல் சம்பவங்களில் 44 ஆயுதப்படையினரும், பொதுமக்கள் 11 பேரும், 23 தீவிரவாதிகளும் கொல்லப்பட்டனர்.

போர் நிறுத்த கண்காணிப்புக்குழுவின் செயலாளர் திரு. டயஸ் அபயசிங்கா வெளியிட்டுள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

ஆயுதப்படைகளின் கூட்டு செயற்பாட்டுகுழு தெரிவித்த 25 யுத்தமீறல் சம்பவங்கள் குறித்து விசாரணை நடத்திய யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழு இவ்விசாரணை தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

(13-ம் பக்கம் பார்க்க)

## இரு பெண்களுக்கு மரண தண்டனை

[மட்டக்களப்பு]

மட்டக்களப்புப் பகுதியில் சமூகவிரோதிகள் எனக்கணிக்கப்பட்ட சுமார் 35 வயதுள்ள இரு பெண்கள் துப்பாக்கியால்

(13ம் பக்கம் பார்க்க)

### மட்டுநகர் கண்ணிவெடிச் சம்பவம்

## 9 சடலங்களும் அருகிலுள்ள புதருக்குள் கிடந்தன!

(கொழும்பு)

மட்டக்களப்புநகரில் கடந்த மாதம் 15ம் திகதி இடம் பெற்ற கண்ணிவெடிச் சம்பவத்தைஅடுத்து சம்பவம் நடைபெற்ற இடத்துக்கு அண்மையில் உள்ள புதருக்குள் ஒன்பதுசடலங்கள் கிடக்கக்காணப்பட்டன, சம்பவம் இடம் பெற்ற அரைமணிநேரத்திற்குப் பின்னர் இச்சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

மேற்படி சம்பவம் தொடர்பான பிரேத பரிசோதனை அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது,

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் விசாரணை நடத்திய 25சம்பவங்களில் ஒன்றான இச்சம்பவம் தொடர்பான பிரேதபரிசோதனை அறிக்கையும் மேற்படி குழுவினரின் அறிக்கையுடன் வெளியிடப்

(13-ம் பக்கம் பார்க்க)

# பத்திரிகையாளருடன் 10பேர் நள்ளிரவில் கைதாகி விடுதலை!

(வவனியா)

வவனியாவில் பத்திரிகையாளர் ஒருவர் உட்பட நடுத்தர வயதினர் 12 பேரை இராணுவத்தினர் கைது செய்துள்ளனர். நேற்றுமுன்தினம் நள்ளிரவுவேளை சுமார் ஒரு மணியளவில் கோயில்குளம் பகுதிக்குக் கால்நடையாகச் சென்ற இராணுவத்தினர் பத்திரிகையாளர (வீரகேசரி), அவரது இளைய சகோதரர் மற்றும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று சகோதரர்கள் உட்பட 10 பேரையும் நித்திரையில் வைத்துக் கைது செய்தனர். பத்திரிகையாளர் பொன்னையா மாணிக்கவாசகர்(40 வயது), பொன்னையா சந்திரசேகரம்(23 வயது),செல்வரத்தினம் யோகராசா(28-வயது), தம்பிராஜா தர்மபாலன்(18 வயது), செல்லமுத்து ஜெயசுப்பிரமணியம் (21 வயது), கெல்லமுத்து செல்வநாதன் (18 வயது) செல்முத்து ஜெயக்குமார் [15-வயது), கார்த்திகசு விக்னேஸ்வரன்(18 வயது) செல்லமுத்து அருமைராசா [34-வயது] சுப்பிரமணியம் மயில்வாகனம் [26 வயது] ஆகியோர் நித்திரையில் கைது செய்யப்பட்டனர்.

அதே தினத்தில் வவனியா நகரில் சலூன் ஒன்றில் முகச்சவரம் செய்துகொண்டிருந்த

(13-ம் பக்கம் பார்க்க)

### வவனியா, மன்னார் கிளிநொச்சியில்

## கைதானவர் விபரங்களை இ. தொ. கா. திரட்டுகிறது

[யாழ்ப்பாணம்]

வவுனியா, மன்னார், கிளிநொச்சி மாவட்டங் ளில் 84ம் 85ம் ஆண்டுகளில் பாதுகாப்புப் படையினரால் கைதுசெய்யப்பட்டவர்களின் விபரங்களை இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் வவனியா கிளை திரட்டி வருகிறது.

இம்மாவட்டங்களில் கைது செய்யப்பட்டு, விடுதலைசெய்யப்படாதவர்களின உறவினர்கள் பலர் வவனியா இ தொ கா. கிளையின் கவனத்திற்குக் கொண்டுவந்ததைதொடர்ந்து

(13ம் பக்கம் பார்க்க)

# அரி விளம்பரம்

## விற்பனைக்கு

பெரிகிரி கிறேடேன் 5கிழமை நாய்க்குட்டி ள் விற்பனைக்கு உண்டு. M. இராசநாயகம், பலாலி றோட், கோண்டாவில் கிழக்கு. [2675]

''நல்ல ஜாதி ஆண்–பெண் அல்ஷேஷன் நாய்க்குட்டிகள், சிங்கர் மெஷின், மின்சார ஸ்திரிகைப்பெட்டி விற்பனைக் குண்டு. விலாசம்: வீ ராஜ சிங்கம், இல. 50, ஸ்டேசன் வீதி, கோண்டாவில் மேற்கு (கோ/இ. ம. வித்தியாலயத் திற்கு சமீபமாக). (266')

Lister Genarator, Single Phase, 10 K.V. 1500 R.P.M., Lister Engine. 7. 2. H. P., 1500 R. P. M. விற்பனைக் குண்டு. நேரில் தொடர்பு கொள்ளவும்: 440 ஆஸ்பத் திரி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 23724, [2676]

நவாலி அரசடி சந்திக்கருகாமையில் சிறிய வீட்டுடன் கூடிய இரண்டுபரப்புக்காணி (நல்லதண்ணீர் கிணறு) உடன் விற்பனைக்குண்டு. உரிமையாளர் வெளிநாடு செல்லவிருப்பதால் விரைவில் தொடர்பு கொள்ளவும். விபரங்கட்கு:- 78. சிவன்கோவில் வடக்கு வீதி, யாழ்ப்பாணம் [2663]

டேவிட் பிறவுன் லோடர் 770, வீல்பரோ, பிக்அக்ஸ், பெரிய பெட்டகம். ஜேர்மன் பெற்றுேமக்ஸ், மசாற் பம் பாவித்தது திருத்தவேண்டிய நிலையில் உள்ள G. E. C. ரேடியோ, அலுமினியம் பால் கான், போட்டரக்: புறாடி ஒழுங்கை முன்பாக, 294, கண்டி வீதி, யாழ்ப்பாணம், [2651]

கைதடி நுணுவில், மட்டுவில் அம்மன் கோவில் வீதி, வாகையடிச் சந்தியில் வீட்டுடன் 3 பரப்புக்காணி மின்சார வசதியுடன் உள்ளபகுதியும் வீட்டுக்காணிக்கு அண்மையில் 35 பரப்பு நெற்காணியும் விற்பனைக்குண்டு. தொடர்பு:- குயிக் ரவல்ஸ், தேவாலய வீதி சாவகச்சேரி. [2660]

மரக்கறி விதைகளும், பயிர்களைக் காப்பாற்றும் கிருமிநாசினி ½ அவுன்ஸ் போத்தலுடன்விலைரூபா 3/50, 2அவுன்ஸ் போத்தலுடன் விலை ரூபா 13/00. எஸ். நடேசலிங்கம், ஸ்ரீ அம்பாள் ஸ்ரோஸ் மல்லாகம்றேட், சங்கானை வியாபாரிகளுக்கு கழிவு உண்டு. தொடர்புகொள்ளவும்:- வ. கந்தையா, [பொலிஸ் பென்சனியர்], கண்ணகை அம்மன் கோவிலடி, வட்டுக்கோட்டை மேற்கு, வட்டுக்கோட்டை. [2674]

அல்சேசன் நாய்க்குட்டிகள் (Pure bred), இயர்போன் (Ear Phone), குளிர்சாதனப் பெட்டி, மின் விசிறிகள், கமராக்கள், கசற் றேடியோக்கள், கம்பளங்கள், வெளிநாட்டுக் கிளாஸ் வகைகள், தட்டச்சு இயந்திரம், தையல் மெஷின், வெளிநாட்டுத் துணி வகைகள், வீட்டுத் தளபாடங்கள் இன்னும் பலதரப்பட்ட பொருள்கள் விற்பனைக்குண்டு. சி. பத்மநாதன், C/o திரு.அம்பலவாணர், திருநெல்வேலி வடக்கு. (திருநெல்வேலிச் சந்திக்கும் மருத்துவக் கல்லூரிக்கும் இடையில் உள்ளது) (2687)

## தேவை

பிரபல பார்மசிக்கு நல்ல அனுபவம் உள்ள பெண் விற்பனையாளர் தேவை. நல்ல அனுபவம் இருந்தால் மட்டும் உடன் விண்ணப்பிக்கவும். யாழ்நகருக்குள் இருப்பின் விரும்பத்தக்கது. C/o ஈழநாடு, விளம்பர இல 2640, யாழ்ப்பாணம் (2640)

பப்படம் தயாரிப்பதற்கு அனுபவமுள்ள ஆண்கள் தேவை. நேரில் வரவும். சிறீ கிருஷ்ணமில், 622, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். [2673]

பெண் விற்பனையாளர், லிகிதர் பயிற்சியாளர் தேவை. 8ம், 9ம் வகுப்புகள் படித்த, குறுகிய தூரத்திலிருப்போர் நேரில் சந்திக்கவும். பயிற்சிச் சம்பளம் முதலில் வழங்கப்படும். சத்தியதாஸன் [உரிமையாளர்], கமலா வாச் வேக்ஸ் றெக்கோடிங்[B] பார், மெயின் வீதி, காங்கேசன் துறை. [2662]

## வாடகைக்கு

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் (றெயில்வே கடவைக்கு அண்மையில்) நான்கு அறைகள், இரு சமையல் அறைகள். கார் கருச், நீர் மின்சார வசதிகளுடன் கூடிய நாற்சார் வீடு வாடகைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும். விளம்பர இல. 2655, C/o ஈழநாடு அல்லது தொலைபேசி இல: 22127. (2655)

## கல்வி

VISPA ENGINEERING AID HALL (ஸ்ரான்லி வீதி மக்கள் வங்கியின் அருகேயுள்ள ஒழுங்கையினுள்) 2, 3, 6 மாத வகுப்புகள். வெளிநாடுகளில் அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும். Wiring, Welding, ரேடியோ, ரி. வி., மோட்டார் மெக்கானிசம். ஆரம்பம்: 28-12-85 நத்தாரை முன்னிட்டு முதலில் சேருபவருக்கு கட்டணத்தில் சலுகை வழங்கப்படும். 2596

## மணப்பந்தல்

பள்ளர் சமூகத்தைச்சேர்ந்த 28 வயதுடைய A/L படித்த கிறிஸ்தவ பெண்ணுக்கு வங்கி உத்தியோகத்தர், பட்டதாரி ஆசிரியர், தொழில் நுட்ப உத்தியோகத்தர் போன்ற தரத்திலுள்ள அரசாங்க உத்தியோகத்தர், 35 வயதுக்குட்பட்ட கிறிஸ்த்தவ அல்லது R. C. மாப்பிள்ளை தேவை. 4லட்சம் பெறுமதியான வீடுவளவு, நகை ரொக்கம் சீதனமாக தரப்படும். விளம்பர இலக்கம் 2677, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். [2677]

## மேலும் இரு மின்நிலையங்கள்

[யாழ்ப்பாணம்]

கன்னுதிட்டியிலும், கனகரத்தினம் வீதியிலும் இரு உப-மின் நிலையங்கள் அமைக்கப்படவிருக்கின்றன.

யாழ். மின்சாரநிலையத்திலிருந்து பல பகுதிகளுக்கும் செல்வதற்கு, வாகனவசதி இல்லாததினுல் உப-மின் நிலையங்கள்அமைக்கப்பட்டுவருகிறது.

இரவு நேரத்திலும் நகரில் பதற்றம் நிலவும் நாட்களிலும் மக்கள் மின்சார நிலையத்திற்கு வர அஞ்சுவதால், இப்புதிய உப-நிலையக்கள் பயனளிக்கும் எனக் கூறப்படுகிறது. (க)

**WANTED**

Retired Government Accountant. over 30 years service seeks employment in executive capacity in leading Establishment in Jaffna. Please contact: Kandiah. 'Thirupathy', Uduvil, Chunnakam. (2669)

## தவறிவிட்டது

கணபதிப்பிள்ளை காளிதாஸன், முல்லைத்தீவு பெரிய போரதீவு என்பருடையஅடையாள அட்டை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்குறிப்பிட்டுள்ள விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். கணபதிப்பிள்ளை காளிதாஸன் 106/1, கன்னுதிட்டிவீதி, காளி கோயிலடி, யாழ்ப்பாணம். [2672]

**பண்டத்தரிப்பு பரிஷ் பல நோ. கூ. சங்கம்**

## மின்தறி இயந்திரங்களை குத்தகைக்கு விடுவதற்கான கேள்வி கோரல்

சங்க மின்தறி ஆலையில் 16 ஜப்பான் மட்சுகாவா [Matsukawa] மின்தறிகளும், 16 இந்தியன் பிறிமியர் [Premier] மின்தறிகளும் உள்ளன. இவைகளுக்குத் தாராளமாக ஊடை நூல் விநியோகிக்கக்கூடிய ஊடைநூல் இயந்திரங்களும் [Pirn Winder]பாவுஓடும் இயந்திரமும் [Warping Machine] நல்லநிலையில் இருக்கின்றன.

மேற்கூறப்பட்ட இயந்திரங்களைக் கொண்டு மாதாந்த குத்தகையில் புடவை தயாரிப்பதற்கான கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன. மேற்கூறப்பட்ட இயந்திரங்களை பார்வையிட விரும்புவோர் சங்க காரியாலய நேரங்களில் பார்வையிடலாம். கேள்விப்பத்திரங்களும் அதற்கான விதிமுறைகளும் சங்கத்தில் பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும். திரும்பப் பெறப்படும் வைப்பு ரூபா 1000/-வும், திரும்பப் பெறப்படாத வைப்பு ரூபா 25/-ம் கட்டி பற்றுச்சீட்டு வாங்கியவர்கட்கே விண்ணப்பப்பத்திரங்கள் வழங்கப்படும். விண்ணப்பப்படிவங்கள் பெறவேண்டிய கடைசித்திகதி 29-01-86. கேள்விப்பத்திரங்கள் யாவும் பொதுமுகாமையாளர், பண்டத்தரிப்புப் பரிஷ் ப. நோ. கூ. சங்கம், பண்டத்தரிப்பு என விலாசமிடப்பட்டு இலச்சினை பொறிக்கப்பட்டு பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும். கடிதஉறையின் இடதுபக்க மேல்மூலையில் ''மின்தறி இயந்திரங்களுக்கான குத்தகைக்கானகேள்வி'' எனக் குறிப்பிடப்பட்டு 31-01-86 நண்பகல் 12-00 மணிக்கு முன்னதாக எமக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

பொது முகாமையாளர்,
பண்டத்தரிப்பு பரிஷ்
பல நோ. கூ. சங்கம்

14-11-85.
[2622]

## உலக சமய தினம்

உலக சமய தினம் ஜனவரி மாதத்தின் மூன்ருது ஞாயிற்றுக்கிழமை இவ்வருடம் ஜனவரி மாதம் 19ம் திகதி (19-01-198 ) யாழ்ப்பாணத்திலும் அநுட்டிக்கப்படும். இது சம்பந்தமாக:

**சமாதானத்திற்கு சமயத்தின் பங்கு என்ன?**

என்ற பொருள்பற்றி

பேச்சுப் போட்டி, வாத்தியங்களுடன் கூடிய பாட்டுப்போட்டி, கட்டுரைப்போட்டி

என்பன நடைபெறும்.

பங்குபற்ற விரும்புவோர் தொடர்புகொள்ள வேண்டிய விலாசம்:-

**உலக சமயதினக் குழு**

**மே/பா ச. செ. சுவர்ணராஜ்**

நெல்லியடி, கரவெட்டி.

விண்ணப்ப முடிவுத்திகதி: 10-01-1986

2659

## நினைவஞ்சலி

**திரு. பெனடிக்ற் லோறன்ஸ்**

(ஆசிரியர், யாழ். சம்பத்திரிசியார் கல்லூரி)

மறைவு:

30-11-1985



எமது குடும்பத்தின் அகல் விளக்காய் திகழ்ந்து 30-11-1985 இல் அமரத்துவமடைந்த திரு. பெனடிக்ற் லோறன்ஸ் அவர்களின் பிரிவின் துயரத்தில் பங்குபற்றி இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டு உதவிய பத்திரிசியார் குடும்பத்தினர், மாணவ சமுதாயத்தினர், நண்பர்கள், உறவினர்கள், அயலவர்கள் அனைவருக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியோருக்கும் எமது மனமார்ந்த நன்றியை தெரிவிக்கின்றேம். அன்னரின் ஆத்மசாந்திக்காக 30-12-1985 திங்கள் காலை 6-15 மணிக்கு யாழ். அடைக்கல அன்னை ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

மனைவி, மக்கள்.

128, சப்பல் வீதி, யாழ்ப்பாணம். 2632

## 90-ம் நாள் நினைவஞ்சலி

**செல்வன் பாஸ்கரன்**

அன்னமடியில்:

09-01-1968



இறைவனடியில்:

29-09-1985

தாவடி தெற்கு திரு. இராசநாயகம் - பொன்னுபரணம் அவர்களின் மூத்த புதல்வன். கற்றவர் போற்றும் நற்றவப் புதல்வன்.

எமது அருமைப் பாஸ்கரா! அன்பும் பண்பும் நிறைந்த செல்வக் குழந்தாய்! எங்கள் அன்புப் ''பாஸ்கரா'' எம்மை ஆருத்துயரில் ஆழ்த்திவிட்டு இறைவனடி சேர்ந்த செல்வக் குழந்தாய். நீங்கள் எங்களை விட்டு திடீரென பிரிந்து சென்ருலும் உங்கள் நினைவுகள் எங்கள் நெஞ்சங்களில் என்றும் நிறைந்து நிற்கும். உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கிறேம்.

இங்ஙனம்,

தந்தை, தாய், சகோதரர்கள்.

''ராஜ்பவன்'' தாவடி தெற்கு,
கொக்குவில். 2642

### ரோமிலும் வியன்னாவிலும்

# இஸ்ரேலிய விமானசேவைப் பகுதிகளில் கெரில்லாக்கள் தாக்குதல்

## 16 பேர் மரணம்; 120 பேர் காயம்

(ரோம்)

**ரோமிலும், வியன்னாவிலும் சர்வதேச விமான நிலையங்களில் கெரில்லாக்கள் நடத்திய தாக்குதல்களில் பதினறு பேர் இறந்துள்ளதாகவும், நூற்றியிருபது பேர் வரையில் படுகாயமடைந்துள்ளதாகவும் தெரியவந்துள்ளது.**

இஸ்ரேலிய ஏயர்லைன்ஸின் பரிசோதனைப் பகுதிக்கருகே இந்தத் தாக்குதல்கள் நடைபெற்றன இந்தத் தாக்குதலை நடத்திய கெரில்லாக்களுக்கும், பயங்கரவாதத் தடுப்பு நடவடிக்கையில் விசேஷ பயிற்சிபெற்ற பொலிசாருக்குமிடையே நடைபெற்ற மோதலில் கெரில்லாக்கள் கைக்குண்டை வீசியதிலும், பொலிசார் சுட்டதிலும் 16 பேர் இறந்தும் பலர் காயமடைந்துமுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

உலகச் செய்திகள்

### பதிலுக்கு தாக்குவோம்

''மிருகத்தனமான இந்தச் செயல்களுக்குப் பொறுப்பானவர்கள்மீது பதில் தாக்குதல் நடத்தப்படும்'' என்று இஸ்ரேல் அறிவித்துள்ளது.

இதேவேளை இவ்விமான நிலையத் தாக்குதலுக்கும் தமக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லையென்று பாலஸ்தீன விடுதலை இயக்கம் அறிவித்துள்ளது.

பயங்கரவாதத் தொல்லைகளை ஒழிப்பதற்கு உலக நாடுகள் முன்வரவேண்டும் என்று வாஷிங்டனில் இது தொடர்பாக றேகன் நிர்வாகம்விடுத்த வேண்டுகோளில் தெரிவிக்கப்பட்டது. எகிப்தும்; மேற்கு ஐரோப்பிய நாடுகளும் இத் தாக்குதல்களைக் கண்டித்திருக்கின்றன.

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் ஜாவிய பெரஸ்டி சொய்லா இந்தத் தாக்குதல்கள் அதிர்ச்சியூட்டுவனவாக இருக்கின்றன என்று கூறியுள்ளார். [து]

## மின்துறையில் சோவியத்- இந்திய ஒத்துழைப்பு

[புதுடில்லி]

மின்சக்தித் துறையில் ஒத்துழைப்பை அதிகரிக்க இந்தியாவும், சோவியத் யூனியனும் நேற்று முன்தினம் ஒப்பந்தம் ஒன்று செய்துகொண்டன.

1986 முதல் 1990 ஆண்டுவரை இந்தஒத்துழைப்புச் செயற்திட்டம்அமுலிலிருக்கும். அனல் மற்றும் நீர் மின்சாரத் திட்டங்களைக் கூட்டாகச் செயற்படுத்துவது, இப்போதைய திட்டங்களை நவீனப்படுத்துவது, இந்திய திட்டங்களுக்குத் தேவையான முக்கிய உதிரிப்பாகங்களை விநியோகம் செய்வது ஆகியன இந்த ஒப்பந்தத்தில் அடங்கும்.

சோவியத் யூனியனின் உதவியுடனான 26 அனல் மின்சார நிலையங்களை நவீனப்படுத்துவதற்கு சோவியத் யூனியன் இணங்கியுள்ளது.

சாதனங்களை வடிவமைப்பது, அனுப்புவது, மூன்றும் உலக நாடுகளில் மின்சார நிலையங்களை அமைப்பது போன்றவற்றில் இருநாடுகளும் ஒத்துழைக்கும்.

சோவியத் - இந்திய கூட்டு அலுவற்குழு ஐந்து நாள் நடத்திய கூட்டத்தின் இறுதியில் நேற்று முன்தினம் இதற்கான ஒப்பந்தம் புதுடில்லியில் வைத்துச் செய்யப்பட்டது. [து]

## அஸாம் கணபரிஷத்தில் 5 பேர் சேர்ந்தனர்

[கௌஹாத்தி]

அஸாமில் மாநில சட்டப் பேரவையில் மேலும் ஐந்து உறுப்பினர்கள் அஸாம் கணபரிஷத்தில் சேர்ந்ததையடுத்து 126 உறுப்பினர்கள் கொண்ட சபையில் இக்கட்சியின் வலு 69 ஆக உயர்ந்துள்ளது. [து]

# அணு ஆயுத சோதனைகள் வெகுவாகக் குறையும்

## சோவியத் அதிபரின் நம்பிக்கை

[மாஸ்கோ]

1986-ம் ஆண்டில் அணு ஆயுத சோதனைகள் வெகுவாகக் குறையுமென்று சோவியத் தலைவர் திரு கொபச்சேவ் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

மாஸ்கோவில் ராஜ்ய தூதுவர்கள் முன்னிலையில் அவர் பேசும் பொழுதே இவ்வாறு தெரிவித்தார்.

மக்களது பகுத்தறிவு அவர்களது குறுகிய தன்னலத்திலும் மேலோங்கி நின்று அவர்கள் தாங்கள் வாழும் மண்ணைச் சேதமாக்குவதை நிறுத்தும்ஒரு ஆண்டாக அடுத்த ஆண்டு விளங்கவேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். [து]

### ஈரானிய

## எண்ணெய் நிலையம்மீது ஈராக் விமானத் தாக்குதல்

[தெஹ்ரான்]

ஹார்க் தீவுக்கு அருகிலுள்ள ஈரானிய எண்ணெய் நிலையத்திற்கு எதிராக மேலும் ஒரு தாக்குதலை ஈராக் நேற்றுமுன்தினம் நடத்தியிருப்பதாகத் தெரியவருகிறது.

இத்தாக்குதலின்போது ஒரு எண்ணெய்க் கப்பலும் தாக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இவ்விரு நாடுகளுக்குமிடையே நிலவிவரும் பதற்றமான சூழ்நிலையை முடிவுக்குக் கொண்டுவருவதற்காக ஐக்கிய அரபு ஓமெரேட்டுகளின் வெளியுறவு மந்திரி திரு ரஸீத் அப்தல்லா நேற்றுத் தெஹ்ரான் சென்றிருப்பதாகத் தெரியவருகிறது. [து]

### யாழ். மாநகரின்

## கழிவுகளை உரமாக மாற்றும் யந்திரம் தருவிக்க முயற்சி

[யாழ்ப்பாணம்]

யாழ். நகரில் மலகூட கழிவுகளை பசளையாக அல்லது உரமாக மாற்றுவதற்கு முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மலகூட குழிகளில் நிரம்பும் கழிவுகளை, வெட்டி புதைக்க வசதியில்லாததால், இதனை பசளையாக மாற்றுவதற்கு ஆலோசிக்கப்பட்டுள்ளது.

குழிகளிலிருந்து மலகூட கழிவுகளை அப்புறப்படுத்துவதற்கான ஒரு யந்திரத்தையும், அதனை காண்டுசெல்வதற்கு ஒரு வாகனத்தையும் 'யுனிசெவ்' யாழ். மாநகரசபைக்கு வழங்கவுள்ளது.

மலகூட கழிவுகளை பசளையாக மாற்றும் யந்திரமொன்றை சபை வாங்கவிருக்கிறது.

## முடிவுகள் கிடைத்தன

(யாழ்ப்பாணம்)

ஜி.சி.ஈ.(உயர்தரம்) பரீட்சையில் தோற்றிய தனிப்பட்ட பரீட்சார்திகளுக்கு நேற்றுமுன்தினம் பரீட்சை முடிவுகள் கிடைத்துள்ளன. (ஈ)

## நாய் பிடிக்க ஆளில்லை!

[யாழ்ப்பாணம்]

யாழ். நகரில் தற்போதுள்ள நிலைமை காரணமாக கட்டாக்காலி நாய்கள் பிடிப்பதற்கு எவரும் முன் வருவதில்லை என்று யாழ் மாநகரசபை ஆணையாளர் திரு. சி. வி. கே. சிவஞானம் தெரிவித்தார்

ஒரு நாய் பிடிப்பதற்கு 15 ரூபா வழங்க முன் வந்தபோதிலும், எவரும் வரத் தயங்குவதாகவும் அவர் தெரிவித்தார்.

நகரில் விசர்நாய் கடி மரணங்கள் அதிகரித்து வரும் இவ்வேளையில், நாய்களைப் பிடிப்பது பெரும் பிரச்னையாக இருப்பதாகவும் கூறினர்.

நாய்களை புதைப்பதற்கு நகரில் இடங்கள் பெறுவது கஷ்டமாக இருப்பதாகவும் கூறினர். [க]


கலர் பிலிம் சுருள்களை
PROCESSING + PRINTING
செய்வதற்கு
கொழும்பு ஸ்ருடியோ



லீடா
முழு ஆடை நிறைந்த பால்

★ உடனே கறந்த பசுப்பாலின் ருசி!
★ பால் வெண்ணெய் கூடுதலாக உள்ளது!
★ இணையற்ற சக்திமிக்க பால்!

• உலகில் மிகச் சிறந்த பால் பண்ணைகளை கொண்ட - ஒல்லாந்திலிருந்து ''லீடா'' கிடைக்கின்றது.
• பசுவினிடமிருந்து வாடிக்கையாளரை சேரும் வரை, கைபடாதது, அசலானது என உத்தரவாதமளிக்கப்படுகின்றது.
• டின்களில் முத்திரையிடப்பட்டு புதிதாகவே கிடைக்கின்றன




விற்பனையாளர்
மில்லர்ஸ் லிமிடெட்

# திருமலை அகதிகளில் பலர் திரும்பிச்செல்ல வில்லையாம்!

## இந்தியாவுக்குச் செல்ல அநேகர் விருப்பம்

[கா. யோகநாதன்]

வடக்குநோக்கி வந்த திருமலை அகதிகள், திரும்பிப் பழைய இடங்களுக்குச் செல்லாமல் யாழ்ப்பாணத்தில் பல பகுதிகளில் தெரிந்தவர்கள், உறவினர்கள், நண்பர்கள் வீடுகளிலும் அகதிகள் முகாம்களிலும் தொடர்ந்து தஞ்சமடைந்துள்ளனர்.

தமிழ் மகளிர் அவையினால் முதல்முதலாக யாழ்ப்பாணத்தில் அகதிகள் முகாம்ஒன்று ஆரம்பிக்கப்பட்டது.

எதிர்வரும் ஜனவரி 2-ம் திகதியுடன் இந்த முகாம் ஆரம்பிக்கப்பட்டு மூன்று மாதங்கள் பூர்த்தியடைகின்றன.

### மகாநாடும் ஊர்வலமும்

அகதிகளின் நிலைமையை உலகிற்கு எடுத்துக்காட்டுவதற்கு இம்முகாமிலுள்ள அகதிகள் யாழ். நகரில் இருமுறை ஊர்வலம் நடத்தினார்கள். அதுமட்டுமல்ல மூன்று தினங்கள் யாழ். நகரில் மாநாடு நடத்திப் பல தீர்மானங்கள் நிறைவேற்றினார்கள். இதுவரை எவ்வித பலனும் கிடைக்கவில்லை. எவரிடமிருந்தும் பதிலும் கிடைக்கவில்லை.

இம்முகாமில் தற்போது 320 அகதிகள் இருக்கின்றார்கள். இவர்களில் 90 பேர் குழந்தைகளாவர். இம்முகாமிலுள்ள சிறுவர்களுக்கு அயலிலுள்ள பாடசாலையில், விசேட வகுப்புகள் நடைபெற்று வருகின்றன.

இம்முகாமிற்கு திருமலையிலிருந்து தினமும் அகதிகள் வந்து கொண்டிருக்கின்றனர். நேற்றும் இரு குடும்பங்கள் வந்தன.

### நிலைமை சீரானால்

திருமலையில் ஊர்காவல் படையை வாபஸ்பெற்று ஆயுதப்படையினரை முகாம்களில் இருக்கச்செய்யும்வரை அகதிகள் எவரும் திரும்பிச்செல்ல முடியாதென்றும் தங்களுக்கு பாதுகாப்பு தேவை என்றும் தீர்வு ஏற்பட்டு நிலைமை சீரானால், திரும்பிச் செல்வதுபற்றி ஆலோசிக்கலாம் என்றும் அகதிமுகாமிலிருந்த வயோதிபர் ஒருவர் தெரிவித்தார்.

வீடுகள் எல்லாம் எரிக்கப்பட்டு, உடைக்கப்பட்டு விட்டதென்றும் எப்படி அங்கு சென்று வாழுவதென்றும்அவர் கூறினார்.

### திருமலை செல்ல விருப்பம்

திருமலையிலிருந்து வந்த அகதிகளில் மிகச் சிலருக்குகே அங்கு சொந்தக்காணியும் வீடும் உண்டு. சிலருக்கு 'பெர்மிட்' காணி இருக்கிறது. இவர்களே மீண்டும் நிலைமை சீரானால் திருமலை செல்ல விரும்புகிறார்கள்.

மற்றும் 90 வீதமானோர்திருமலைக்கு செல்ல விரும்பவில்லை, அவர்களுக்கு அங்கு காணியும் இல்லை. வீடும்இல்லை. இவர்கள் கடும் உழைப்பாளிகள். அவர்கள் எங்கிருந்தாலும் உழைத்துப்பிழைக்கக் கூடியவர்கள்.

இந்த அகதிகளுள் 70 வீதமானோர் இந்தியாவிற்கு செல்லவே விரும்புகின்றார்கள். மற்றும் 15 சத வீதமானோர் யாழ்ப்பாணத்தில் குடியேற விரும்புகின்றார்கள்.

தமிழ் மகளிர் அவைஅகதி முகாம் பேச்சாளர் இரா. முருகையாவிடம் இவர்களின்எதிர்காலம்பற்றி கேட்டபோது எதுவும் முடிவில்லாமல் இருப்பதாக கூறினார்.

### இரு குழந்தைகள்

இந்தமுகாமில் கடந்த மூன்று மாத காலத்தில் இரு தாய்மார்கள், இரு குழந்தைகளைப் பெற்றுள்ளனர். இக்குழந்தைகளுக்குத் தமிழ்செல்வன் தமிழ்செல்வி எனப் பெயரிடப்பட்டுள்ளது. மற்றொரு குழந்தை பிறந்து இரு நாட்களில் இறந்துவிட்டது.

இம்முகாமைச் சேர்ந்த வயோதிபர் ஒருவருக்கு 'கேணியா' ஒப்பரேஷன் நடைபெற்றுள்ளது. கடும் நோய்க்கு இதுவரை எவரும் பலியாகவில்லை. சுகாதாரம் நன்கு பேணப்படுகிறது.

அகதிகள் புனர்வாழ்வு கழகமும், புங்குடுதீவு ஒன்றியமும் இம்முகாமிற்கு துணிகள் வழங்கியுள்ளன, இத்துணிகளை ஆடைகளாகத் தைப்பதற்கு 5 இளம் விதவைகளுக்கு வேலைவாய்ப்புக் கொடுக்கப்பட்டுள்ளது. இவர்களின் கணவன்மார் சீருடையினரின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானவர்கள். வன்செயல்களினால் பாதிக்கப்பட்டு வடக்கு நோக்கி வந்த ஒருபெண் இவர்களுக்குமேற்பார்வையாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

### மேசன் பயிற்சி

முகாமிலுள்ள ஆண்கள் சிலருக்கு மேசன் தொழிலில் பயிற்சியளிக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுவருகிறது. அகதிகளில் அநேகர் 'சும்மா' அகதி முகாமில் இருப்பதற்கு விரும்பவில்லை. ஏதாவது ஒரு தொழில் செய்யவிரும்புகிறார்கள்.

வெளியில் தொழில் வாய்ப்புப் பெற்ற ஒருசில குடும்பங்கள் குடும்பத்துடன் வெளியேறியுள்ளார்கள். இதே சமயம் புதிதாக பலகுடும்பங்கள் முகாமிற்கு வந்துகொண்டிருக்கின்றன.

### சுகாதார சேவை

இம்முகாமிற்கு திங்கள்கள் புதன் வெள்ளிக் கிழமைகளில் யாழ். சுகாதார வைத்திய அதிகாரி நேரில் வந்து சுகாதார நடவடிக்கைகளை கவனித்து வருகிறார்.

அகதிகள் வருகை அதிகரித்ததைத் தொடர்ந்து இம்முகாமிற்கு அருகில் வேறு இதனோடு சேர்ந்த இரு முகாம்கள் திறக்கப்பட்டுள்ளன.

பொது ஸ்தாபனங்கள். பொதுமக்கள் அகதிகளுக்குத் தேவையான உதவிகளைச் செய்து வருகின்றனர்.

நிலைமை மாறும்; அமைதி ஏற்படும்; தீர்வு பிறக்கும் என்ற நம்பிக்கையில் இம்முகாமிலுள்ள அகதிகள் வாழ்ந்துகொண்டிருக்கின்றனர்.

(க)

---

## "பொதுஜன அபிப்பிராயத்தை உருவாக்குவது விமர்சனம்"

(யாழ்ப்பாணம்)

''சமூக நடத்தை- சமூக அவதானிப்புக்கு விமர்சனம் உதவும் அனுபவம், கற்பனை என்பவற்றினூடாகக் கலைப் படைப்புக்கள் உருவாக்கப்படுகின்றன. கலை இலக்கிய அறிவியல் ஈடுபாட்டிற்கு விமர்சனம் அவசியம். கலைஞனில் ஏற்படுத்தும் பாதிப்பு படைப்பாளுமையை விருத்திசெய்ய உதவும். பொதுஜன அபிப்பிராயத்தை உருவாக்குவது விமர்சனத்தின் இன்னொரு பணியாகும்''

இவ்வாறு இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் யாழ் கிளையினால் ஏற்படுத்தப்பட்ட முதலாவது கருத்தரங்கில் தொடக்கவுரை நிகழ்த்திய கலாநிதி சோ. கிருஷ்ணராஜா கூறினார்.

'இலக்கிய விமர்சனத்தின் இயல்பும் நோக்கும்' என்னும் தலைப்பில் நிகழ்ந்த இக் கருத்தரங்குக்கு திரு.சோமகாந்தன் தலைமை வகித்தார். [illegible]

பலஎழுத்தாளர்களும்,விமர்சகர்களும் கலந்துகொண்ட இக்கருத்தரங்கில் கலாநிதி சோ. கிருஷ்ணராஜா தொடர்ந்து பேசுகையில்: ''விமர்சனம் வாசகனிலும் தாக்கத்தை உண்டுபண்ணுகிறது. விமர்சனம் இந்திய மரபில், தமிழ் மரபில் புதியதொரு துறையல்ல, கிரேக்க, ஹோமர் தத்துவங்கள் போலவே சொல்லாட்சிக் கலையாகவிருந்த விமர்சனம் அரிஸ்டோட்டிலின் 'கலைக்கோட்பாடு' என்ற நூலின் பின்தமிழிலும் புதுமை பெற்றது.

பரதருடைய'நாட்டிய சாஸ்திரம்' அவிநவகுப்தரின் 'அவிநவபாரதி' என்பன விமர்னத்தின் உருவாக்கத்தில் பெரிதும் பயன்பட்டன.

நாட்டிய சாஸ்திரம், ரஸப்பிரம்ம வாதம், வஸ்துப்பிரம்ம வாதம் என்று முப்பெரும் பிரிவுகளாக உள்ளது. இப்போக்கு தத்துவத்தின் ஒரு பகுதியாகவே அமைந்ததே தவிர இலக்கியத்தில் ஆராயப்படவில்லை. ஆகவே இவ்வகையில் விமர்சனம் நல்வழிப்படுத்தும் விஷயங்களைக் கொண்டவையாக அமைந்தது.

விமர்சகன் இலக்கியவியலாளனாக இருக்க வேண்டுமென்றோ படைப்பாளியாக இருக்க வேண்டுமென்றோ இல்லை. ஆயினும் விமர்சகன் விஞ்ஞான பூர்வமான அணுகுமுறைகளைக்கொண்டு மதிப்பிடுகிறான்'' என்றார்.

இதைத் தொடர்ந்து கலந்துரையாடல்கள், காரசாரமான இலக்கியச் சர்ச்சைகள் இடம் பெற்றன.

ஒவ்வொரு பௌர்ணமித் தினத்திலும் தொடர்ச்சியாகக் கருத்தரங்குகள் ஒழுங்கு செய்யப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது.

சாந்தனின் நன்றியுரையுடன் கூட்டம் நிறைவுற்றது.

(நா)

---

## தேசியமாணவர்மன்றம் விடுத்துள்ள துண்டுப்பிரசுரம்

(யாழ்ப்பாணம்)

'யாழ், பல்கலைக்கழகம் மூடப்படும்! பின்னணியில் சதி அம்பலம்' என்ற தலைப்புடன் பிரசுரம் ஒன்று வெளியாகியுள்ளது. இதனை தேசிய மாணவர் மன்றம் வெளியிட்டுள்ளது. தனியார் மருத்துவக்கல்லூரி உதயமாவதற்கு எதிரான கருத்துக்கள் இப்பிரசுரத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

(ஐ

---

அரசாங்க அதிபருக்கு மகஜர்:

## "ஒரு கிராமத்து நிதியை மாற்றியமைப்பது தவறாகும்"

(வண்ணார்பண்ணை)

''ஒரு கிராமத்திற்கு ஒதுக்கப்பட்டநிதியை இன்னொரு கிராமத்தின் வேலைத்திட்டத்திற்கு மாற்றுவது மிகவும் தவறானதும். நிதி ஒதுக்கப்பட்டகிராமத்தின் மக்களைப் புறக்கணிப்பதுமாகும்'' என்று எழுவைதீவு மணிவாசகர் சனசமூகநிலையத்தலைவர் யாழ் மாவட்ட அரசாங்க அதிபருக்கு அனுப்பியுள்ள ஆட்சேபனை மகஜரில் தெரிவித்துள்ளார்.

எழுவைதீவுக் கிராமத்தின் அபிவிருத்திக்கென ஒதுக்கப்பட்ட நிதியை, நாரந்தனைக் கிராமத்தின் எல்லைக்குள் புதிய பாலம் அமைப்பதற்கு எழுவைதீவு அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் சம்மதம் தெரிவித்துள்ளதற்கு ஆட்சேபனை தெரிவித்து இக்கோரிக்கை விடப்பட்டுள்ளது.

எழுவை தீவுக் கிராமத்தில் மக்களுக்குப் பயன்படும் பிரதான பாலம், பிரதானவீதி, ஒழுங்கைகள் ஆகியன திருத்த வேலைகள் இருந்தும் ஒதுக்கப்பட்டநிதி வேறுகிராமத்தில் எல்லைக்குச் செல்வது முறையற்றதாகும். இக்கிராம மக்களின் ஏகோபித்த அபிப்பிராயத்தைப் பெற்றே இந்த நிதி மாற்றப்பட வேண்டுமென்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

---

## "ஐந்து லட்சம் பேருக்கு குடியுரிமை வேண்டும்"

[சென்னை]

சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தத்துக்குள் உட்படாத ஒரு லட்சம் பேருக்கும், ஏற்கனவே குடியுரிமை அற்றவர்களாயிருக்கும் நான்கு லட்சம் பேருக்கும் குடியுரிமை வழங்க இலங்கை அரசு முன்வரவேண்டும்'' என்று தாயகம் திரும்பியோர் ஐக்கிய முன்னணி தெரிவித்துள்ளது.

இலங்கை கிராமியக் கைத்தொழில் அமைச்சர் திரு. எஸ். தொண்டமானை மேற்படி அமைப்பு மதுரையில் சந்தித்து மகஜர் ஒன்றினைக் கையளித்தது. அந்த மகஜரிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

'இலங்கையில் நடைபெற்ற இனக்கலவரங்களில் உயிர், உடைமைகளை இழந்த இந்திய குடியுரிமைபெற்ற இலங்கைத் தமிழ்க் குடும்பங்களுக்கு நஷ்டஈடு வழங்கப்படல்வேண்டும்'' என்பது உட்பட ஏழு கோரிக்கைகள் அந்த மகஜரில் விடுக்கப்பட்டுள்ளன.

[ரா

---

## தாய் சேய் ஆரோக்கியமே ஆரோக்கிய சமுதாயம் உருவாவதற்கு வழி

[யாழ்ப்பாணம்]

தாயும் சேயும் நல்ல ஆரோக்கியத்துடன் வாழ்ந்தால்தான் எதிர்காலத்தில் நல்ல ஆரோக்கியமான சமுதாயம் உருவாக முடியும். எல்லாத் தாய்மாரும் போஷாக்குணவின் முக்கியத்துவத்தை அறிந்திருக்க வேண்டும். இதனை நோக்கமாகக் கொண்டே சுகாதார அமைச்சு கிராமங்கள் தோறும் தாய் சேய் நலன் கருத்தரங்குகளை நடாத்தி வருகிறது.

இவ்வாறு யாழ் மாவட்ட திட்டமிடல் பிரதிப்பணிப்பாளர் திரு. தி. கிருபைத்திலகன் தனங்கிளப்பு மறவன் புலோவில் நடைபெற்ற தாய் சேய் நலன் கருத்தரங்கில் பேசும் போது குறிப்பிட்டார்.

தனங்கிளப்பு இலங்கைக் குடும்பத்திட்டச்சங்க தலைவி திருமதி இ. இராசரத்தினம், திட்டமிடல் உதவிப்பணிப்பாளர் திரு. வி. சுவாமிநாதன், சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் சு. நடராசா குடும்பத்திட்டமிடல் அதிகாரி திரு. அ. ச. பூவேந்திரன், டாக்டர் க. செந்தில்நாதன், திரு. வி சுப்பிரமணிய ஐயர் குடும்பத் திட்டச்சங்க செயற்குழுத் தலைவி திருமதி சு. தர்மரட்ணம், செல்வி. ப. வல்லிபுரம், திருமதி செ. தயாபரநாதன் ஆகியோரும் கலந்து கொண்டு பேசினர். திருமதி த. அருளம்பலம் நன்றி கூறினார்.

---

## 33 ஆண்டின்பின் இளைப்பாறினார்

[வவனியா]

வவனியா மாவட்ட நீதிமன்றத்தில் முதலியாராக கடமையாற்றிய திரு. கே. சுப்பிரமணியம் இளைப்பாறினார்.

33 வருடம் இவர் நீதிமன்ற சேவையில் கடமையாற்றியுள்ள வட்டுககோட்டை இந்துக்கல்லூரியின் பழைய மாணவராவர்.

---

## பாவனையாளர் சங்க நிர்வாக சபை

(யாழ்ப்பாணம்)

நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவு பிரதேச பாவனையாளர் சங்கக் கூட்டம் அண்மையில் நல்லூர் உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். சிவகுருநாதன் தலைமையில் நடைபெற்றது.

பின்வருவோர் நிர்வாக சபை உறுப்பினர்களாத்தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் திரு. எஸ். சிவகுருநாதன், உப தலைவர் திரு. கலாநிதி எஸ். மோகனதாஸ், செயலாளர் திரு. எஸ் மாணிக்கவாசகர், இணைச் செயலாளர் திரு. எ. செல்லத்துரை, பொருளாளர் திரு. வி. என். செல்வரத்தினம். 6 உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

நல்லூர் வட்டாரத்தில் சட்டவிரோத செயல்களில் ஈடுபடும் வியாபாரிகள் மீது கடும் நடவடிக்கை எடுப்பதென நிர்வாக சபை தீர்மானம் நிறைவேற்றியது.

---

## ராஜீவின் கூற்று சர்வதேச சட்டமீறலாம்

[கொழும்பு]

'இலங்கை நிலைமை சீரடையும்வரை இலங்கையிலுள்ள இந்தியவம்சாவளி மக்களை இந்தியா ஏற்றுக் கொள்ளாது என்ற இந்தியப் பிரதமரின் கூற்று சர்வதேச சட்டத்தை மீறும் ஒருசெயலாகும்.'

என இலங்கை அரசின்உயர் அதிகாரிகள் கருத்து வெளியிட்டுள்ளார்கள்.

இந்திய அரசு தமதுசொந்த மக்களை ஏற்க மறுப்பது என்ற விஷயம் ஆச்சரியமாக இருப்பதாக ஒரு அமைச்சர் கூறியுள்ளார்.

[இ-பி]

ஈழநாடு
வாரமலர்
EELANADU VARA MALAR

## "வாழ்க செந்தமிழ் வாழ்க நற்றமிழர்"

வருட முடிவில் காணப்படும் இவ்வாழ்த்து தாழ்வுறும் தமிழ் மக்களுக்கு எவ்வாறு பொருந்துமென்ற கேள்வி எழும்.

இன்று எமது சமூகத்துக்கு ஏற்பட்டிருக்கும் சோதனை எத்தகையதென்பதை பத்திரிகைகள் விமர்சிக்கின்றன.

வடக்கிலும் கிழக்கிலும் பட்டாசுச்சத்தம் இம்முறையில்லை; ஆனல் கொழும்பிலும், ஏனைய இடங்களிலும் நத்தார் வெகுவிமரிசையாகக் கொண்டாடப் பட்டது என்பது புதுமைபோல் அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரிவினையும் பயங்கரவாதமும் இலங்கைத் தமிழ் மக்களுக்கு அரசு சூட்டியிருக்கும் பட்டங்கள்; அதனை விளக்குவதே வருடம் முழுவதிலும் எமக்கு நடைபெற்ற கொடுமைகள்.

''ஆதிசிவன் அருளாலும், அறிவறிந்த மக்கள் ஆர்வத்தாலும் வீறுபெற்று விளங்குவேன்'' என்று தமிழன்னை வாயிலாகப் பாரதியார் கூறும் வாய்மொழி இன்று புதுமொழி போல் ஒலிக்கிறது.

எத்திசையும் புகழ் மணக்க தமிழ் ஏற்றமுறும் காலம் அண்மையில் வருமென்று நம்புவதற்கே இன்று நாம் இத்துன்பங்களை அனுபவிக்கின்றோம்.

வாய்ப்பறை சாற்றி கழித்த காலம் முடிவடைந்தது. அச்சம் நீங்கியது. வேதனை நேரும் என்று வேதனைப் படுவதே அச்சம் என்றார் அமெரிக்க ஜனாதிபதி அமரர் ரூஸ்வெல்ட்; அந்த அச்சமும் நீங்கிவிட்டது. மெத்தையில் படுப்பவனே வீழ்வான். எனவே வீழுங்காலம் நீங்கி வாழுங்காலம் வருகிறது. வெறும் சோதிடமல்ல.

# நிலம் - நீர் - வானம்

# பேரழிவு தந்த '85

பா. அனந்தகிருஷ்ணன்

ஏனைய ஆண்டுகளைப்போல் அல்லாமல் இயற்கை அழிவுகளும், விடத்துக்களும் கணக்கின்றிமலிந்த 1985-ம் ஆண்டு இன்னும் இரு தினங்களில் விடைபெறுகிறதுகாலவரலாற்றில் நிலத்திலும்நீரிலும் வானிலுமாகப் பேரழிவுகளைத் தந்த இந்த எண்பத்தை ஒருசாதனை ஆண்டென்றே சொல்லலாம்,

பங்களாதேஷில் ஏற்பட்ட புயல் வெள்ளம், மெக்ஸிக்கோவில்இடம்பெற்றபூமிஅதிர்ச்சி, எதியோப்பியாவின் அகோர வறட்சி, கொலம்பியாவின் எரிமலை வெடிப்பு என்டன இந்த ஆண்டில் லட்சக்கணக்கான மக்களைப் பலியெடுத்திருந்தன. இயற்கையின் கோரப்டசிக்கு மக்கள் இவ்வாறு ஒரே ஆண்டில் பெருமளவு இரையானது அரிதிலும் அரிது என்றே கூறலாம்.

பங்களாதேஷின் புயல்வெள்ளத் தாக்கம் அந்நாட்டில் ‹0 ஆயிரம் மக்களைப்டலிகொண்டு பெரும் அவலத்தை ஏற்படுத்தியிருந்தது. ஆசியப் பிராந்தியத்திலுள்ள இந்தியா, இலங்கை, பாகிஸ்தான் ஆகிய மூன்று நாடுகளின் தலைவர்களும் ப்நரில் சென்று பங்களாதேஷ் வெள்ள அழிவை பார்வையிடுமளவுக்கு கொடூரம் மிக்கதாக இந்த ஆண்டில் அது அமைந்திருந்தது.

வெள்ளநீர் கட்டுமீறிப் பாய்ந்து யக்களைப் பந்தாடிய நிகழ்ச்சி டங்களாதேஷில்இடம் பெற, ஒரு துளிதானும் நீரில்லாமல் மக்கள் எலும்புகூடுகளாகி மடிந்த நிகழ்ச்சி ஆபிரிக்காவில் நிகழ்ந்தது.

எதியோப்பியாவில் என்றுமில்லாதவாறு வறட்சி டயிர் நிலங்களைப் பாழடித்து, மக்கள் வாயில் தூசிப்புயலை அள்ளி வீசியது. லட்சக்கணக்கான எதியோப்பிய வாசிகள் எலும்புக்கூடுகளாக, நடப்பதற்குக் கூட திராணி அற்றவர்களாக நிலத்துக்கு உரமாகினர்.

உலக சமூகம் இந்தக்கொடுமையைக் கண்டு பராமுகமாக இருந்துவிடவில்லை. உதவிகள் பல நாடுகளிலிருந்தும் எதியோப்பியா வந்து குவிந்தன. ஆயினும் இயற்கையின் அசுரப்பிடிக்கு முன்னல் அவை எம்மாத்திரம்?

### லவ் எயிட்

இந்த வறட்சி நிவாரணத்துக்கு அழிவு நிதி சேகரித்த ஒரு நிகழ்ச்சி உலகில் மனிதாபிமானம் முற்றிலும் அழிந்துவிடவில்லை என்பதை எடுத்துக்காட்டுவதாகவும் அமைந்திருந்தது.

பிலிப் கொலின்ஸ் என்ற பிரிட்டிஷ் பொப் இசைக்கலைஞர் மேற்கத்திய இசைக்கலைஞர்கள் எல்லோரையும் ஒன்று திரட்டினர். விளைவு? 'Live Aid'என்னும் மாபெரும் இசை நிகழ்ச்சி ஏக காலத்தில் லண்டனிலும், லாஸ் ஏஞ்சல்ஸிலும் இடம்பெற்றது.

லட்சக்கணக்கான பிரிட்டிஷ்காரர்களும், அமெரிக்கர்களும் இந்த நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டனர். இதன் மூலம் 35 கோடி அமெரிக்க டாலர்கள் எதியோப்பிய வறட்சி நிவாரணத்துக்கெனத் திரட்டப்பட்டது. உலகத் தலைவர்களும், தனவந்தர்களும் இதற்கு வாரி வழங்கினர்,

'நோபல்' சமாதானப் பரிசுக்குச் சிபார்சு செய்யுமளவுக்கு இந்த 'லவ் எயிட்' நிகழ்ச்சி மனிதாபிமான உள்ளங்களைத் தொட்டிருந்தது.

### பூமியதிர்ச்சி எரிமலை குமுறல்

வெள்ளமும், வறட்சியும் போட்டியிட்டுக் கொண்டு மனித உயிர்களை ஏப்பம்விட்ட இந்த நிகழ்வுகளுடன்,மேற்கே பூமியின்குமுறல்களும் சாமான்யமாக இருந்துவிடவில்லை.

மெக்ஸிக்கோ பூமியதிர்ச்சியும், கொலம்பிய எரிமலை வெடிப்பும் இந்த தூற்றுண்டில் இவ்விரு ரகமான அழிவுகளிலும் சாதனைபடைத்துள்ளன என்பதே புவியியல் நிபுணர்களின் முடிவாகும்.

மெக்ஸிக்கோ அடுத்த ஆண்டு [1986[ உலகக்கிண்ண உதைபந்தாட்டத்தை நடத்துவதற்கான ஏற்பாட்டில் முழுமூச்சாகஈடுபட்டிருந்தது.இந்த வேளையிலேயே இங்கு பூமியதிர்ச்சி கட்டிடங்களையும், வீதிகளையும், நகரங்களையும் அலங்கோலமாகச் சீரழித்தது. இச்சீரழிவில் சுமார் 16,000 பேர் உயிரிழந்தனர்.

இந்த பூமியதிர்ச்சியின் அமர்க்களம் ஓய்ந்திருந்த வேளையிலேயே தென் அமெரிக்காவில் கொலம்பிய நாட்டில் நெவாடோ டெல் ரூவிஸ் எனும் மலைகுமுறியது.டெரும் நதியாக எரிமலைக்குழம்பை இம்மலை கக்கிவிட்டிருந்தது. எதுவுமறியாத அப்பாவி மக்கள் இரவோடிரவாக அத்தீக்குழம்பு பாய்ந்தோடிய அமெரோ நகரில் பொசுங்கி மாண்டனர்,இங்குமரணமான மக்களின் எண்ணிக்கை 25ஆயிரத்தையும் தாண்டியிருந்தது.

இந்த இயற்கை அழிவுகளுடன் வானில் நிகழ்ந்த உயிர்ச்சேதங்களும் சாதனை அளவை எட்டியுள்ளன. இந்த ஆண்டிலேயே உலகில் கூடுதலானவர்கள் விமான விடத்துக்களில் கொல்லப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

குறுகிய காலத்தில் ஒரு சமாதானச்சிட்டு என்று பெயரெடுத்த காலஞ்சென்ற சோவியத் தலைவர் திரு. அந்தரபோவின் அமெரிக்கச் சிநேகிதியான சமந்தா ஸ்மித் [வயது 8] உட்பட இரண்டாயிரம் விமானப் பயணிகள் பல்வேறு விமான விபத்துக்களிலும் உயிரிழந்தனர்.

இவற்றில் இந்திய போயிங் 'கனிஷ்க்கா' விபத்து, ஜப்பானிய போயிங் விபத்து என்பன முக்கியமானவை.இவைஇரண்டும் தலா 400 பேரைக்கொன்றிருந்தன.

இத்துடன் கடந்த வாரம் அமெரிக்கத் துருப்புக்கள் 250 பேர் லெபனனிலிருந்து தாயகம் திரும்பும்போது விமான விபத்தில் பலியாதுனம் ஒரு கோரச்சம்பவமாகும். இவை தவிர ஆங்காங்கே சிறியதும் பெரியதுமாக இடம்பெற்ற விமானவிபத்துக்களில் இறந்தோர் தொகை மேற்குறிப்பிட்ட இரண்டாயிரம் மரணங்களை உள்ளடக்குகின்றது.

ஓர் ஆண்டில் இவ்வளவு விமானப் பயண மரணங்கள் ஏற்பட்டது இதுவே முதல் தடவையாகும் என்று சர்வதேச விமானப் போக்குவரத்துச் சங்கம் குறிப்பிடுகிறது.

### கப்பல் ஆண்டு

உலக அரசியலைப் பொறுத்தவரை இந்த ஆண்டை ஒரு 'கப்பல் ஆண்டு' என்று குறிப்பிடுவது மிகப் பொருத்மான தெனலாம்.

'அக்கோல எலாரோ'- 'றெயின்போ வேரியர்' என்ற இரு கப்பல்களும் உலக அரசியலில் இம்முறை சிறப்பிடம் பெற்றன.

'றெயின்போ வேரியர்' நியூஸிலாந்தைச் சேர்ந்த 'கிறீன் பீஸ்' என்ற சுற்றுடல் பாதுகாப்பு இயக்கத்தினரின் இக்கப்பல் பிரெஞ்சுக்காரர்களால் மூழ்கடிக்கப்பட்டது. அணுப் பரிசோதனைக்கு இக்கப்பல் எதிர்ப்பு வெளியிட்டமே இந்த மூழ்கடிப்புக்குக் காரணம். இதில் இந்த இயக்கப் பிரமுகர் ஒருவரும் கொல்லப்பட்டார்.

'கிறீன்பீஸ்' இயக்கக்காரர்கள் சும்மாவிடவில்லை. பிரான்ஸ் அரசாங்கம் கதிகலங்கும் விதத்தில் ஆட்சேபம் வெளியிட்டார்கள். இறுதியாக அந்த அரசிடமிருந்து நஷ்டத்தைப் பெறுமளவிற்கு தமது நடவடிக்கையில் கிறீன் பீஸ்காரர்கள் வெற்றி பெற்றுள்ளார்கள்.

'அக்கேலே எலாரோ' கப்பல் கடத்தல் நாடகக்கதையாக விளங்கியது. இக்கப்பலைக் கடத்தியவர்கள் மத்திய தரைக் கடலில் இதனைநங்கூரமிடச்செய்து உலகின் கவனத்தை இதன்பால் இழுத்தனர்.

அமெரிக்கா, இத்தாலி, எகிப்துஆகியவற்றைசர்ச்சைக்குள்ளாக்கினர்கள், இறுதியில் அக்கடத்தல்காரர்கள் சரணடைந்து தப்பிச் சென்ற வேளை அமெரிக்க விமானங்களிடம் சிக்குண்டு இன்று இத்தாலியில் சிறையிலடைபட்டுள்ளார்கள்.

(12ம் பக்கம் பார்க்க)

### ★ எந்த இனம்?

அகழ்வாராய்வில்
ஐந்தாறு எலும்புகள்
மண்டை ஓடுகள்
கிடைத்தன.
அவற்றை ஆய்ந்தவர்
ஆயிரம் ஆண்டுகளாயினும்
பழையன வென்று
கணக்கு முடித்தனர்.
அரசு சொன்னது:
"எந்த இனமென்று
கண்டு பிடிக்கவும்."

★ வண்ணன்

### ★ 2000!

இரண்டாயிரம் ஆண்டு பெப்ருவரி மாதம் 30ந் திகதி பிறக்கும், குழந்தைகள் தமது பிறந்தநாளை வாழ்நாளில் கொண்டாட முடியாது, காரணம் 100ஆண்டுகளுக்கு ஒருமுறைதான் பெப்ருவரியில் 30ந் திகதி வருகிறது.

—சச்சி

### எண்பத்தாறே நன்கு வா!

மூடிய இருள்கள் நீங்க
முழுக்கதிர் ஒளிதான் சேர
கேடுகள் இரத்தம் சிந்தும்
அவலங்கள் நீங்கயாவும்
கூடிய தென்றே நாங்கள்
இன்புற முன்போலன்றி
நாடிய அனைத்தும் நல்க
நன்குவா எண்பத்தாறே!

கிளிநொச்சி ஸி. ஆர். சலேஷியஸ்

# ஈழத்துப்பதினொருகவிஞர்கள்

**ஊ**ரெல்லாம் மழை பொழிந்த வெள்ளம் நிறைந்திருக்கிறது. வெள்ளநீர் காடு மேடு கரம்பை எல்லாம் ஓடும். ஒரு பகுதி நிலத்தினுள் ஊறி நன்னீராகும். அதைப் பருகுவதற்குக் கிணறு தோண்ட வேண்டும். அதுகூடச் சில வேளைகளில் உவர்நீராகலாம். கவிஞர்கள் கவிதை மழை பொழிகிறார்கள். கவிவெள்ளம் பெருக்கெடுத்தோடுகிறது. இதய பூமியிலும் சுவறுகிறது. பருகுவதற்கு ஒரு கவிதைக் கிணறு தோண்டுகிறார்கள். எம். ஏ. நுஃமானும், அ.யேசுராசாவும் தோண்டிய கிணற்றில் நற்கவிதை ஊறுகிறது. பதினொருவர் பகிர்ந்து சமைத்த பல்சுவை ஊற்று அது. இதனிடத்துள்ள கவிதைகளை பின்வரும் தலைப்புகளில் ஆராயலாம்.

### குடும்பவாழ்க்கை

குடும்பவாழ்க்கைபற்றி மஹாகவியின் அகலிகையும், இராமலிங்கத்தின் 'தூக்கட்டும், தூக்கட்டும்' இரண்டும் ஒரே கருவை அடிப்படையாகக் கொண்டவை. மனித உள்ளுணர்வுகள்புராணகாலத்திலும் இன்றும் ஒன்றுதான். விடியற்சாமம் 'அகலிகையின் கைகள் ஏதோ ஒரு நோக்குக்காக கௌதமரின் மார்பிற் படிகின்றன. முனிவரோ பொழுது புலர்ந்தது என்று எழுந்து போய்விடுகிறார். அவள் பரிதவிக்கிறாள். குப்புறப் படுத்து மணையை அணைத்தபடி வேதனையுடன் தவிக்கிறாள். தவித்த முயலை அடித்தவன்போல வேட்டைக்கு வருகிறான் இந்திரன். வேட்டையில் அவனுக்கு வெற்றிதான். இதனால் அவன் புண்ணானானோ? அல்லது இப்படிப்பட்ட கணவர்களுடன் வாழும் பெண்கள் நிலை பற்றி மனம் புண்ணானானோ? விஷயம் புரிந்துவிட்டது. அகலிகை தவறை உணர்ந்து கல்லானாள். சுடப்பட்ட பொன்போலப் பின்னர் தூய்மையடைகிறாள், முனிவரும் அவளை ஏற்றுக் கொண்டார். பிழைவிடுவது மனித இயல்புதானே.

இனி, 'தூக்கட்டும் தூக்கட்டும் கவிதையில் வரும் குடிகாரன்மனைவியிடமும் ஓர் இந்திரன் வந்தான். அவனும் தவித்த முயல் அடிப்பவனே. அகலிகையோ ஒரு முறையோடு தன் தவறை உணர்ந்தாள், ஒரு வேளை முனிபத்தினி என்பதாலோ என்னவோ? ஆனால் மற்றவளோ, பலமுறை தவறியும் உணரவில்லை. சமுதாயத்தில் குடிப்பது எவ்வளவு கொடிதோ அதேபோற்றான், கூத்தடிப்பதும் கொடிதே. எனவே கணவனும்மனைவியும் ஒரே தவறை விடுகிறார்கள். ஆனால் அவனோ மனைவியை விட்டுவிட்டு கள்ளுக்கொட்டிலில் உறங்கவில்லை. ஏதோ வீட்டிற்கு வருகிறான். ஆனால் இவளோ கணவனை விட்டுவிட்டு காதலனுடன் ஓடிவிடுகிறாள். இவள் தன் தவறை உணர்ந்து கல்லாகவில்லை பதிலுக்கே அணுகுண்டாகிவிடுகிறாள். இது பெண்மைக்கு மிக அதிகம் என்றுதான் கூறவேண்டும். புலியை முறத்தால் அடித்து விரட்டிய பெண்பற்றி இலக்கியம் சொல்கிறது. வெள்ளையனை எதிர்த்த ஜான்சி ராணிபற்றி சரித்திரம் சொல்கிறது. இது வீரம். ஏதோ ஒரு இலட்சியத்திற்காக மகவைக் காப்பாற்றிய, நாட்டுமக்களைக் காப்பாற்றிய வீரப்பெண்கள் இவர்கள். ஆனால் கதையிலே வரும் பெண்ணிடம் வீரம் இல்லை. பதிலுக்கு ஒருவகையான ஆவேசம், அதுவும்... எனவே பெண்மை என்பது இங்கு பிழைபடுகிறது தாய்மை என்பது தலை குனிகிறது. வீரப் பெண்களைப் படைக்கலாம். உணர்ச்சிக்கு அடிமைப்படும் பெண்களைப் படைத்து நம் முன் நடமாடவிடக்கூடாது என்பது என் கருத்து.

## புதிய புத்தகம்

### ஆய்வு: 'உதங்கா'

Nihilism is the Counterpart of atom boril என்று ஓர் அறிஞர் கூறியது கவனிக்கத்தக்கது. தத்தமது துணையைப் புறக்கணிப்போருக்கு இக் கவிதைகள் சமர்ப்பணம்.

### சமுதாயத்தின் காவலர்கள் எனப்படும் கயவர்கள்

எரிகின்ற வீட்டில் பிடுங்கித் தின்னும் பெரியோர்கூட்டம் சமுதாயத்தின் எந்த மூலை முடுக்கிலும் உள்ளது. நீலவாணனின் 'பாவம் வாத்தியார்' இப்பெரியோர்களை-அவர்களின் செயல்களை அணுவணுவாக விளக்குகிறது. வடலிகளை வளரவிட்டால் பெரும் பனைகளின் பெருமை குறைந்துவிடும் என்பதற்காக போடிமாரும், வண்ணக்கர்களும் இந்த வாத்தியாரால் ஊர் முன்னேறுவதை விரும்பவில்லை பெரும்பனை வடலிகளை வளரவிடா, வளர்க்க விரும்புவோரையும் அவர்தலையில் ஒரு குலை பனங்காய்களைப்போட்டு நசுக்கிக்கொன்றுவிடும். இதனை எளிய நடையில் நீலவாணன் எடுத்துக்காட்டுகிறார். அருமையான ஓட்டத்துடன் தெளிந்த நீர்போல் ஓடுகிறது கவிதை. இதே கருத்தை வைத்து வர்க்கபேதத்தை வளர்த்து வருவோரையும் கவிஞர் நுஃமான் தமது 'தாத்தா மாரும் பேரன்மாரும்' என்னும் கவிதையில் எடுத்துரைக்கிறார். வடலிகளை உறிஞ்சி வயிறு வளர்க்கும் பெரும் பனைகள் பாறிவிழும் நாள் வரவேண்டும்; அதற்காகச் சகோதரத்துவச் சாம்பலில் இருந்து வர்க்க உணர்வுடன் வருகஎன அழைக்கின்றார். அவரின் இலைக்கறிக்காரி என்ற கவிதையில் கஷ்டப்பட்டு இலைக்கறி எடுத்துத் தெருத்தெருவாய் அலையும் அவளிடம் கூடப் பேரம் பேசிச் சுரண்டுவோர் பற்றி எளிமையான நடையில் எழுதியுள்ளார். இப்பாடலின் மொழிநடை கிழக்கிலங்கைக் குரியது. அருமையான கொச்சைத் தமிழில் அதனைவாசிக்கும் போது இலைக்கறிக்காரி தெருவில் கூவிக்கொண்டு போவது போலத்தத்ரூபமாக எழுதியிருப்பது அருமை. இதனை நேரில் கேட்டவர்கள் தான் அதிகமாக ரசிக்க முடியும்.

### சாதிக்கொடுமையும் ஏற்றத்தாழ்வும்

ஏற்றத்தாழ்வையும் சாதிக் கொடுமையையும் சாடுவதில் மட்டுமல்ல அதனை உடைத்தெறியும் பாத்திரங்கள் சமைப்பதிலும் மஹாகவிக்கு நிகர் மஹாகவியே. சாதிக் கொடுமை பற்றித்தனது கண்மணியாள் காதையிலும், அதை உடைத்தெறியும் பாத்திரமான பஞ்சையரை, தனது கோடையிலும் உலவ விட்ட அவர் தேரும் திங்களிலும் சாதிக்கொடுமையைச் சாடுகிறார். அங்கு தேர் இழுப்பவர்களிலும் வலிமை மிக்கான் ஒருவன் தேர்வடத்தைத் தொட்டவுடன் நடந்த கொடுமை பற்றி இக்கவிதையில் தருகிறார். அவர் காலத்தில் ஆலயப்பிரவேசம் கொழுந்து விட்டெரிந்தது. இப்படிப்பட்ட மகான்களுடைய கவிதைகளாற்றான் என்னவோ இன்று மெல்ல மெல்ல அது மறைந்து வருகிறது.

இதே தராசில் தா. இராமலிங்கம் தனது ஆசைக்குச் சாதியில்லை என்ற கவிதையில் சாதி என்பதை விளக்கிவிட்டார். இரு கவிதைகளையும் ஒரே தராசில் போடும்போது சாதி என்பது சந்தர்ப்பத்தைப் பொறுத்தது என்பது தெளிவு. தேர்வடத்தைத் தொட்டபொழுது கொலை விழுந்தது. ஆனால் கள் குடிக்கப் போனவர் ஏதோ குடித்தற்குக் காலில் விழுந்ததும் சாதி சந்தர்ப்பத்தைப் பொறுத்தது என்பது தெளிவு. தொகுப்பில் இது ஒரு ரசிக்கக்கூடிய பொருத்தம் அ. யேசுராசாவின் ''அறியப்படாதோர் நினைவாக'' என்பது Thomas Gray என்னும் ஆங்கிலப் புலவரின் ''The Elegy written in the Country Church Yard'' என்பதன் தழுவல் போல் தொனித்தாலும், எங்கள் நாட்டிற்கேற்ப பேச்சுத்தமிழில் அலுப்பாந்தி போன்ற சொற்களை வைத்து வாழ்விலும், சாவிலும் வர்க்க பேதம் உண்டென்பதைக் காட்டிவிட்டார். ஒருபுதுமையான அருமையான சிந்தனை. சேரனின் மயான காண்டமும் சமுதாயத்தின் ஏற்றத்தாழ்வும் ஏழைமக்களது வாழும் இடமும் அருமையாகப்படைக்கப்பட்டுள்ளன. கம்பனின் அம்பிகாபதிதான் போங்கள். இவரின் கானல்வரிகூட மறைமுகமாகச் சாதிக்கொடுமையைத்தான் புலப்படுத்துகிறது. இன்ன இன்ன சாதியிற்றான் திருமணம் செய்யலாம் என்பதால் அல்லவோ மாப்பிள்ளைக்கு ஏலம் போடுகிறார்கள். கலப்பு மணங்கள் நிகழ்ந்தால் ஏலம் போடுதல் இல்லை.

### உலகின் நிலையும் விஞ்ஞானத்தால் அழிவும்

தற்காலகட்டத்தைப் பிரதிபலிக்கும் கண்ணாடிகளாகச் சண்முகம் சிவலிங்கம், சிவசேகரம், முருகையன், ஜெயபாலன் ஆகியோரின் கவிதைகள் உள்ளன. உலகின் மூலை முடுக்கெல்லாம் குண்டின் ஓசையும், குளறுவோர் ஓசையும், கெடுப்போர் ஓசையும், இடிப்போர் ஓசையும், எடுப்போர் ஓசையும் கவிதைகளில் ஒலிக்கின்றன. ஊரில் இருந்தாலென்ன வெளிநாட்டில் இருந்தால் என்ன மக்கள் மனநிம்மதியுடன் இருக்க முடியாது என்பதை இவர்களின் கவிதைகள் காட்டுகின்றன இவைபற்றி விரித்தெழுதினால் விரியும் என்பதற்காகவே சுருக்கமாகக் குறிப்பிடுகிறேன். இவை பற்றி எழுதப் புகுந்தால் அதுவே ஒருபுத்தகம்ஆகலாம். வல்லரசுகளின் விஞ்ஞானிகளின் ஆயுதக்குவிப்பு பற்றிக் கவிஞர் முருகையனின் கூற்றுவன்கொலு Charles Mackay என்ற ஆங்கிலக்கவிஞர் எழுதிய Tubal Cain என்றகவிதையில் வரும் பின்வரும் அடிகளை நினைவுறுத்துகிறது.

..............................

And he made them weapons
sharp and strong,
Till they shouted loud
for glee,
And gave him gifts to
pearl and gold.

..............................

And he saw that men with
rage and hate made war upon
their kind.
But a sudden change came
over his heart.

..............................

And Tubal Chain was filled
wih pain.

..............................

And he fashioned the first
plough share.

உறுதியான கூரான ஆயுதங்களைப் படைத்த அவனுக்கு மக்கள் பொன்னும் மணியும் கொடுத்தனர். ஆயுதங்களை வாங்கி ஆத்திரத்தோடும் வெறுப்போடும் தம்முள் பொருதினர். கெயினின் மனது புண்பட்டது. கொழுமுனைகளைச் செய்தான். உலகத்தின் முன்னே வைத்தான். மக்கள் உழுதனர், விதைத்தனர் அதனாலே உயர்ந்தனர்.

இதேபோற்றான் இன்றைய விஞ்ஞானிகளின், வல்லரசுகளின் மனம் திரும்பவேண்டும். அழிவுக்கல்ல ஆக்கத்திற்கே அறிவைப்பயன்படுத்த முன்வரவேண்டும் என்பதை சொல்லாமற் சொல்லி விடுகிறார் கூற்றுவன் கொலுவில் கவிஞர் முருகையன்.

நீலவாணனின் துயில் சாவின் இனிமையையும் பொதுவாகப் பார்க்குமிடத்து தத்துவக்கருத்தாக அகிலத்தின் மையங்கள் ஆணவ முனைப்பையும், தேர் இழுக்கும் போது அது தவிடுபொடியாவதையும் தரிசனம் என்னும் கவிதையில் மு. பொன்னம்பலம் நண்டுக்காரியின் பரிபக்குவநிலையையும் எளிதாக விளங்கவைத்து விடுகின்றனர். மஹாகவியின் நடையும் மனதைக் கவர்வதாயும் உள்ளத்தைத் தொடுவதாயும் அமைந்துள்ளன. மேலும் மு. பொன்னம்பலத்தின் மதிப்பீடும் இராமலிங்கத்தின் எதிர்காலமும் இளந்சலைமுறையினருக்கு பொக்கிஷங்கள்.

இதில் உள்ள அனைத்துக் கவிதைகளையும் மேற்கூறிய தலைப்புக்களில் அடக்க முயற்சித்தேன். கவிதைத் தொகுப்பில் உள்ள கவிதைகள் யாவும் நன்கு ஆராய்ந்து தொகுக்கப் பட்டுள்ளது. மஹாகவி முதல் சேரன்வரை கவிதைகளைத் தொகுத்துள்ளது ஒருசாதனை. போற்றுதற்குரிய முயற்சி.

இறுதியாக அட்டைப்படம் பற்றி ஒருசில வசனங்கள். வேலியினுள் ஒரு முதுமரம் அதனை வேலியே அரித்துக் கொண்டிருக்கிறது. நத்தைகளும் அல்லவா அரிக்கின்றன. அவை வேலியின் ஏவலர் போலும்.

'ஈழத்துப் பதினொரு கவிஞர்கள்'-ஒரு 'க்ரியா' வெளியீடு. பிரதி விலை ரூ. 20-00.

## மாணவர் ஆட்சி!

இந்திய அஸாம் மாநிலத்தின் ஆட்சியைக் கைப்பற்றியுள்ள கணபரிஷத் கட்சியின் எம். பி.க்கள் அனைவரும் மாணவர்கள்.

இக்கட்சியின் தலைவரும் முதலமைச்சருமான திரு. பிரபுல்லகுமார் முகுந்தாவுக்கு வயது 32. சட்டக் கல்லூரி மாணவர். மற்றையோர் 28 வயதுக்குக் குறைவானவர்கள். இவர்கள் 64 பேர்களில் 52 பேருக்கு இன்னும் திருமணமே நடக்கவில்லை. கடந்த ஆறுவருடங்களாக அஸாம் மாநிலத்தில் வெளியாரை அகற்ற வேண்டும் என மாணவர் இயக்கம் போராட்டம் நடாத்திவந்தது. இந்த இயக்கம் பின்னர் தேர்தலையொட்டி 68 நாட்களுக்கு முன்னர்கட்சியாக மாறியது. இது மாணவர் நடாத்தும் ஆட்சியாக உலகில் இருக்கிறது.

- சச்சி

## கப்பல் பிரயாணத்தில் தமிழ் படித்தார் அண்ணல் காந்தி



**1896-ம்** ஆண்டுபொங்கோலா என்ற கப்பலில் இந்தியாவுக்குப் புறப்பட்டேன். பிரயாணிகள் ஒருசிலரே இருந்தனர். அவர்களில் ஆங்கிலேய அதிகாரிகள் இருவர்- இவர்களுடன் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. தினமும் ஒருமணி நேரம் இவர்களில் ஒருவருடன் நான் சதுரங்கம் ஆடுவதுண்டு. கப்பல் வைத்தியர் எனக்கு 'தமிழ்-சுய ஆசான்' நூல் ஒன்றைவழங்கினார். இதன் உதவியுடன் தமிழ் கற்க ஆரம்பித்தேன். நாட்டலில்ஏற்பட்ட அனுபவத்தின்படி முசல்மான்களுடன் நெருங்கிப்பழக உருது மொழியும், மதராஸ் இந்தியர்களுடன் நெருங்கிப்பழக தமிழும் தெரிந்திருக்க வேண்டும் என்பதை அறிந்திருந்தேன்.

உருதைவிட தமிழில் நான் சற்றுமுன்னேற்றமடைந்தேன் உதவிக்கு ஒருவருமில்லாது போனாலும் தமிழ்-சுயஆசான் (Tamil Self Teacher) பெரிதும் உதவியது. அது நன்றாக எழுதப்பட்டதொரு நூல். எனவே வேறு உதவி அதிகமாக எனக்குத்தேவைப்படவில்லை.


இந்தியாவுக்குத் திரும்பிய பிறகும் இந்த மொழிப் பயிற்சிகளை தொடர விரும்பினேன். ஆனால் அது சாத்தியமில்லாமல் போய்விட்டது. 1883 ம் ஆண்டுக்குப் பின்னர் புத்தகம் வாசிப்பதென்பது ஜெயில் வாசத்தின் போதுதான் எனக்குச் சாத்தியமாயிற்று. தமிழைதென்னாபிரிக்கா ஜெயிலிலும், யேர்வாடா ஜெயிலில் உருதையும் வாசித்தேன். ஆனால் தமிழைப் பேசுவதற்கு என்னால் கற்க முடியவில்லை.

தமிழையும் தெலுங்கையும் அறியாமலிருப்பது எவ்வளவு சங்கடம் என்பதை இப்பொழுது காண்கிறேன். தென்னாபிரிக்காவில் திராவிடர்கள் காட்டிய அன்பு எப்பொழுதுமே என் நினைவில் இருந்து வருகின்றது. ஒரு தமிழ் அல்லது தெலுங்கு நண்பரை எப்பொழுதாகிலும் பார்க்கநேர்ந்தால், தென்னாபிரிக்காவில் அவரைச்சார்ந்தவர்களில் பலர் காட்டிவரும் நம்பிக்கை, விடாமுயற்சி தன்னலமற்ற தியாகம் முதலியவை என் நினைவில் தோன்றாமல் போவதில்லை. தென்னாபிரிக்காவில்நடந்தபோராட்டம் அப்படிப்பட்டது. கல்வியறிவு அற்ற வீரர்களால் அது நடத்தப்பட்டது.

ஏழைகளுக்காக அது நடைபெற்றது. ஏழைகள் அதில் முழுப்பங்கும் ஏற்றுக்கொண்டனர். இந்த எளிய, நல்லவர்

(12-ம் பக்கம் பார்க்க)

# கந்தவேள் கோட்டம்


'செங்கை ஆழியான்'

## கந்தவேளுக்கு ஒரு மடாலயம்

### பகுதி - 3 காத்தல்

**1734**, தை மாதத்து ஒரு காலைப்பொழுது.

தொன் யுவான் மாப்பாண முதலியாரின் வீட்டுவாசலில் கிருஷ்ணையர் சுப்டையர் ஏறி நின்றிருந்தார். அக்காலத்து நாற்சார வீடு. கச்சேரியில் உயர் உத்தியோகம் பார்க்கும் அதிகாரி ஒருவரின் வீடு. இயல்பான ஒரு தயக்கத்துடன் அவர் நின்றிருப்பது தெரிந்தது.

வாசலில் அவரைக் கச்சேரிக்கு ஏற்றிச்செல்வதற்கான வில் வண்டில் நின்றிருந்தது. கம்பீரமான காளைகளை அதில் பூட்டுவதற்கான ஆயத்தங்களை வண்டிற்சாரதி செய்து கொண்டிருந்தான்.

''இருங்கள் ஐயா... ஐயா வருவார்... என்றான் வண்டிற்சாரதி.

வெளிவிருந்தையில் கதிரைகள் இடப்பட்டிருந்தன. முற்றத்தில் ஒரு பக்கமாகப் போர்த்துக்கேயப் பறங்கிகளால் யாழ்ப்பாணத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட கொய்யா மரங்கள் இரண்டும், அன்னவுன்னா மரங்கள் சிலவும் நின்றிருந்தன. பறங்கி அன்னவுன்னாவில் சிவந்த நிறத்தில் சில காய்கள் தொங்கின. பச்சைக்கிளியொன்று தன் துணையுடன்அம்மரத்தில் வந்து அமர்ந்தது.

அவர் அவற்றைப்பார்த்துக் கொண்டு நிற்கும்போது, மாப்பாண முதலியார் வெளியில் வந்தார் கம்பீரமான தோற்றம். செக்கச்செவேலென்றிருந்தார். பார்த்ததும் மரியாதைகொள்ள வைக்கும் தோற்றம். தாராராக வேட்டிகட்டி அதன்மேல் கோட்டும் சால்வையும் அணிந்திருந்தார். தலையில் சிலுவைத் தலைப்பாகை தரித்திருந்தார்.

கழுத்தில் சிலுவையைத்தரிக்கத் தயங்கிய அக்காலத் தமிழ்க்கிறிஸ்தவர்கள், தலையில் தலைப்பாகையைச் சிலுவை வடிவில் கட்டிக்கொண்டனர்.

''நீங்கள் யார்? உங்களை நான் கண்டிருக்கின்றேன். யாரென நினைவில்லை... ''

''நான் ஒரு பிராமணன்... கிருஷ்ணையர்சுப்பையர் என்பர் அடியேனை. ஒரு நல்ல காரியமாகத் தங்களிடம் வந்தேன்''.

''அப்படி இருங்கள்'' என்றார் சிருப்பர் தொன் யுவான் மாப்பாண முதலியார்.

கிருஷ்ணையர் அவரை ஒரு கணம் ஏறிட்டுப்டார்த்தார். மாப்பாணரின் நெற்றியில் மெல்லிதாகத் தெரிந்த திருநீற்றுக்குறி அவருக்கு நம்பிக்கையைத் தந்தது. உள்ளத்தால் அவர் சைவராகத்தான் இருக்கிறாரோ?

''தயங்காமல் கூறுங்கள்... நானும் அவசரமாகக் கச்சேரிக்குச் செல்ல வேண்டும்.''

''போர்த்துக்கேயப்பறங்கிகளால் அழிக்கப்பட்ட கந்தசுவாமிகோயிலை மீண்டும் நிறுவுகின்ற முயற்சியில் ஈடுபட்டிருக்கின்றேன்.''

மாப்பாண முதலியார் ஏழைக் கிருஷ்ணையரை வியப்புடனும் மறுகணம் கவலையுடனும் பார்த்தார்.

''அக்கோயிலை நிறுவ உம்மால் முடியுமா?''

''நீங்கள் நினைப்பதுபோலப் பெரிய ஆலயமாகவல்ல. ஒரு சிறு மடாலயமாக. இந்த ஊரிலுள்ள சைவப்பெருமக்கள் பலரும் மனமுவந்து நன்கொடை வழங்கியிருக்கிறார்கள். ஒரு மடாலயம் நிறுவ அது போதுமானது. இன்னமும் தேவைப்பட்டால் வழங்கத் தயாராக இருக்கிறார்கள்.''

''அவர்கள் யார்?...''

''தங்கள் பெயர்களை வெளியிட அவர்கள் விரும்பவில்லை. அதற்கு இரண்டு காரணங்கள் இருக்கின்றன. ஒன்று ஐயனுக்கு அமைக்கும் கைங்கரியத்திற்குப் பெயர் எதற்கு என்பது, மற்றையது இன்றைய அரசுக்குப் பயந்து மடலாயம் அமைக்க உதவியவர்களில் பலர் புறத்தில் கிறிஸ்தவர்கள். உள்ளத்தில் சைவர்கள்''.

மாப்பாண முதலியார் தலையைக் குனிந்து சிந்தனையிழந்தார்.

''என்னிடமும் உதவிகேட்டு வந்தீர்களா?''

''இல்லை, ஐயா...''

''நாங்கள் அமைக்கப் போகின்ற மடாலயம் நல்லூர் கிறிஸ்தவ தேவாலயத்திற்கு அருகில் அமையவிருக்கிறது...''

மாப்பாண முதலியார் அவரைக்கவலையுடன் ஏறிட்டுப்பார்த்தார்.

''யமுனரிக்கும் கிறிஸ்தவ தேவாலயத்துக்கும் இடையில் அமைந்து வரும் கட்டிடம் அதுதானா?'' என்று வியப்புடன் கேட்டார்.

ஆமாம், ஐயா ''

''என்ன காரியம் செய்தீர்கள், ஐயரே... வேறிடம் உங்களுக்குக்கிடைக்கவில்லையா' அவர்களது தேவாலயத்திற்கு அருகில் மடாலயத்தை அமைப்பதா?''

''அவ்விடம் கந்தவேளின் கோட்டம், ஐயா என் அப்பன் அருள்விளக்கத்துடன் வீற்றிருந்த இடம் அவ்விடமே அவனை வணங்குவதற்கு ஏற்ற இடம். மடாலயம் அமையவிருக்கும் காணியைக் கூட, அதன் உரிமையாளர் மயில்வாகனம் நன்கொடையாக வழங்கியுள்ளார்...''

கிருஷ்ணையரின் விழிகளில் நன்றிப்பெருக்கும் பக்திப் பெருக்கும் பொங்கின. மாப்பாண முதலியாருக்கு அந்த உத்தம ஐயரின் நெஞ்சம் புரிந்தது.

'ஐயரே, அம்மடாலயத்திற்குக் கோபுரம், தூபி என்பன அமையுமா? கோபுரம் தூபி என்பன மடாலயத்திற்குரியனவல்ல, ஐயா. அவற்றினை மடாலயத்திற்கு அமைக்கில், மீண்டும் ஐயனின் ஆலயம் அழிவுற நேரிடலாம். உலாந்தாக்கள். அதனை விரும்ப மாட்டார்கள்.

''என்றாலும் நீங்கள் சிக்கலில் மாட்டிக்கொள்ளப் போகிறீர்கள். தங்கள் தேவாலயத்திற்கு அருகில், பரசமயக்கோயில் இருப்பதை உலாந்தாக்கள் விரும்டமாட்டார்கள் பறங்கிகளைப்போல, மக்கள் தங்கள் சமயத்தைக் கைக்கொள்வதை வெளிப்படையாக எதிர்ப்பவர்களல்லர். அதற்காக... இதில் பிரச்னை இருக்கிறது.''

''அதற்காகத்தான் உங்களிடம் வந்தேன்.''

''மடலாயத்தை நிறுவிக் கொண்டு என்னிடம் வந்ததில் அர்த்தமில்லை, ஐயரே...அதனை அகற்றும்படி மேலிடம் கட்டளையிட்டால்...?''

கிருஷ்ணையர் சற்று மௌனமாகவிருந்த பின்னர் சொன்னார். ''தன் ஆலயத்தைக் கட்டுவிப்பதும் அழிப்பிப்பதும் அவன் கையில் தான் இருக்கிறது. என்ன காரியத்திற்காக இப்படியெல்லாம் நடத்துவிக்கின்றானோ யார் அறிவார்? மடாலயத்தை அவ்விடத்தில் அமைப்பிப்பதற்கும் என்னை உங்களிடம் அனுப்பியதற்கும் ஏதாவது காரணம் இருக்கலாம். யார் அறிவார்.''

மாப்பாண முதலியார் ஐயரை ஏறிட்டுப்பார்த்தார்.

''என்னிடம் நீங்கள் எதனை எதிர்பார்க்கிறீர்கள்...?''

''அவ்விடத்தில் மடாலயம் இருப்பதற்கான உத்தரவினை, அனுமதியைத் தேசாதிபதியிடமிருந்து பெற்றுத்தர வேண்டும்.''

''அது இப்போது இயலக்கூடியதல்ல. பிரச்சினைக்குரியது. நீங்கள் வேறிடத்தில் அமைத்திருந்தால் அனுமதி பெறத்தேவையில்லை. நீங்கள் துணிச்சலாக அவர்களின் தேவாலயத்திற்கு அருகில் அமைத்துவிட்டீர்கள். இனி அனுமதி கேட்பின் அவர்கள் நிச்சயமாக அம்மடாலயத்தை அவ்விடத்திலிருந்து அகற்றும்படி கூறுவார்கள். அவ்விடத்தில் இரகசியமாக வழிபாடு செய்யுங்கள். தெரியவரும் போது தெரிய வரட்டும்.''

மாப்பாண முதலியார் எழுந்தார். கிருஷ்ணையரும் எழுந்தார். வண்டிலை நோக்கி மாப்பாண முதலியார் செல்ல அவர் பின்னால் ஐயரும் தொடர்ந்தார்.

வில்வண்டிலில் அவர் ஏறிக்கொண்டு, ஐயரைப்பார்த்தார்.

''ஐயரே, நல்லதொரு காரியத்தைச் செய்கின்றீர்கள். உங்கள் முயற்சி வெற்றியடையட்டும். எப்போது முருகனைப் பிரதிஷ்டை செய்யப்போகின்றீர்கள்?''

''ஆடி அமாவாசையின் இறுதிநாளன்று. நீங்களும் வருகை தர வேண்டும்.''

''அவன் சித்தம்'' என்ற மாப்பாணமுதலியார்..''சிலா விக்கிரமா?'' என வினவினார். ''இல்லை ஐயா, ஐயன்கை வேலினையே பிரதிஷ்டை செய்யப் போகின்றோம்.'' நல்லது. ''

அவர் வண்டில் வீதியில் ஏறி விரைந்தது.

கிருஷ்ணையர் சுப்பையர், அழிக்கப்பட்ட கந்தவேள் ஆலயத்தை சிறுமடாலயமாக புனருத்தாரணம் செய்தார். இதனை யாழ்ப்பாண வைபவம் பின்வருமாறு கூறும். ''நல்லூர்க் கந்தசுவாமி கோயில் பறங்கியரினால் இடிக்கப்பெற்றுச் சில காலஞ் சென்ற பின், கிருஷ்ணையர் சுப்பையர் என்னும் பிராமணோத்தமரின் முயற்சியினால் அக்காலவரசினரிடம் உத்தரவு பெற்றுக் கோயில் கட்டி மடாலயமாகப் பிரதிஷ்டை செய்தனர்.''

நல்லூர் கந்தசுவாமி கோயிலை மீண்டும் தாபித்தவர் கிருஷ்ணையர் சுப்பையரா? மாப்பாண முதலியாரா எனப் பிற்காலத்தில் பிரச்சினை கிளம்பப்போவதை அன்று எவரும் அறிந்திருக்கவில்லை. கிருஷ்ணையர் சுப்பையர் முதன் முதல் மடாலயத்தை 1734 இல் நல்லூர்க்கிறிஸ்தவ தேவாலயத்திற்கு அருகில் கட்டினார்.

நல்லூர் மடாலயத்திற்கு மக்களின் வருகை அதிகரித்தது. ஞாயிற்றுக்கிழமைகளில் கிறிஸ்தவ தேவாலயத்திற்கு வரும் மக்களில் ஒருசிலர் இந்த மடாலயத்திற்குள்ளும் சென்று மீண்டனர்.

ஒருநாள் அதிகாலை கிருஷ்ணையர் சுப்பையரை மாப்பாண முதலியார் ஆள் அனுப்பி அழைப்பித்தார். 1749 ஆம் ஆண்டின் ஆரம்ப காலத்தில் ஒரு நாள் அது.

பதினைந்து ஆண்டுசளுக்குப் பின்னர், கிருஷ்ணையர் சுப்பையர் மாப்பாண முதலியாரின் வீட்டிற்கு வந்தார்.

''ஐயரே, கந்தசுவாமி கோயிலைக்கட்டுவதற்கு அனுமதி தரும்படி நீர் ஒரு விண்ணப்பத்தை உலாந்தாத் தேசாதிபதிக்கு எழுத வேண்டும்.''

மாப்பாண முதலியாரை ஐயர் வியப்புடன் பார்த்தார்.

''இனி என்னத்திற்கு, ஐயா. மடாலயம் அமைத்துப் பதினைந்து ஆண்டுகள் கழிந்து விட்டன. இனி அவர்களின் அனுமதி தேவையா?''

''மடாலயத்தைப் பெரிய ஆலயமாக்குவோம் ... அதற்கு... ''

கிருஷ்ணையர் சுப்பையரின் முகம் சூரியப்பிரகாசமாகியது.

''பெரிய ஆலயமாகவா? ''

### அத்தியாயம் - 2

''ஆமாம், ஆனால் இன்று மடாலயம் இருக்குமிடத்திலல்ல.''

ஐயரின் மலர்ந்த முகம் சுருங்கியது.

''பிரச்னைகளைப் புரிந்து கொள்ளுங்கள். அவ்விடத்திலிருந்து அந்த மடாலயத்தை இடம் மாற்றியே தீரவேண்டும். தேவாலயப்பாதிரியார் மேலிடத்திற்கு முறையிட்டுள்ளார், தேவாலயத்திற்கு வருபவர்கள் மடாலயத்திற்குள்ளும் சென்று வணங்குகிறார்கள் என்று. அதனால் அவ்விடத்திலிருந்து மடாலயத்தைஅகற்றுமாறு கட்டளை வந்திருக்கின்றது. உமக்காக நான் வாதாடி வேறொரு முடிவு எடுத்திருக்கின்றோம்.,'

''என்ன முடிவு, ஐயா?'' என்று கலக்கத்துடன் கிருஷ்ணையர் கேட்டார். ''மடாலயத்தை அவ்விடத்திலிருந்து அகற்றுவோம். குருக்கள் வளவில் அதனை ஆலயமாக நிறுவுவோம்.''

''அவ்விடத்திலா?...''

''உண்மையில் கந்தசுவாமி ஆதிக்கோயில் இருந்தவிடம் அதுதான். சிங்கையாரியனின் மந்திரி புவனேகவாகு கட்டிய மூலக்கோயில் அவ்விடத்தில் தான் இருந்தது, ஐயரே சம்புமல் குமாரயா அதனை அழித்துவிட்டு அதற்குப் பரிகாரமாகப் புதுக்கோயிலை முத்திரைச் சந்தியில் அமைத்தான். அது பறங்கிகளால் அழிந்தது, எனவே குருக்கள் வளவு தான் ஏற்றவிடம்''.

கிருஷ்ணையர் மௌனமாகவிருநதார்.

''ஐயரே, நீர் ஒப்புக்கொண்டாலும் ஒப்புக்கொள்ளாவிட்டாலும் கிறிஸ்தவ தேவாலயத்திற்கு அருகில் இருக்கும் மடாலயம் அகற்றப்படும். இத் தருணத்தை நாங்கள் பயன்படுத்திக் குருக்கள் வளவில் கந்தசுவாமி கோயிலைத் தாபிப்பதற்கு அனுமதி பெற்றுவிட வேண்டும்.''

''அவ்விடத்தில் இன்று முகம்மது சமயத்தவர் உள்ளனரே ... ''

''அது வேறு விஷயம். முதலில் குருக்கள் வளவுக்குரிய தோம்பை எமக்குரியதாக எழுதுவிப்போம். பின்னர் ஆலயத்தைப் பழைய இடத்தில் நிறுவுவோம்.''

மாப்பாண முதலியார் கிருஷ்ணையரைச் சம்மதிக்க வைத்தார். ஐயருக்கும் வேறு மார்க்கம் தெரியவில்லை. புதிய ஆலயம்நிறுவுவதற்குத்தானும் பூரண ஆதரவு வழங்குவதாக மாப்பாண முதலியார் உறுதியளித்தார்.

கிருஷ்ணையர் சுப்பையர் கந்தசுவாமி கோயிலைக் குருக்கள் வளவில் நிறுவுவதற்கு அனுமதி கேட்டு, ஒல்லாந்தத் தேசாதிபதிக்கு விண்ணப்பம் எழுதித் தொன்யுவான் மாப்பாண முதலியாரிடம் கையளித்தார். [தொடரும்]

## கறுப்பு யேசுநாதர்

இயேசுவானவர்
ஒரு கறுப்பனாகத் திரும்பி வருவாரானால்
அது நல்ல தல்ல
அவர் சென்று பிரார்த்தனை செய்ய முடியாத
தேவாலயங்கள்
இங்கு ஏராளம் உள்ளன.
எவ்வளவு புனிதப்படுத்தப்பட்டாலும்
நீக்ரோக்சளுக்கு
அங்கே வாயில்கள் மறுக்கப்படும்
அங்கே இனம்தான் பெரிதே தவிர
சமயம் அல்ல.
ஆனால்
இதைமட்டும் உறுதியாகச் சொல்லலாம்
இயேசுவே!
நீர்
நிச்சயமாக
மீண்டும்
சிலுவையில் அறையப்படுவீர்!

**லாங்ஸ்டன் ஹ்யூக்ஸ் (அமெரிக்கா)**

நன்றி: அறைக்குள்வந்த ஆபிரிக்க வானம்
['தாயகம்' மாசிகையிலிருந்து]

# (1) வரமும் கொடையும்

ஒரு பக்தன் ஆண்டவனை நோக்கிக் கடும் தவம் ஆற்றினான்.

ஒரு நாள் ஆண்டவன் அவன் முன் காட்சி கொடுத்தார்.

''பக்தா, வேண்டியதைக் கேள்'' என்றார் ஆண்டவர்.

பக்தன் பேசத் தொடங்கினான்.

''ஆண்டவரே உங்களுக்கு ஒரு கணம் எங்களுக்கு ஒரு கோடி வருடமா?''

''ஆம், பக்தா!'' உங்களுக்கு ஒரு சதம் எங்களுக்கு பல கோடி ரூபாய்களா?'' ''ஆம், பக்தா!'' ''அப்படியானால் எனக்கு வேண்டியது ஒரு சதம், ஆண்டவரே''

''ஆகா...! அப்படியா...! சரி ஒரு கணம் பொறுத்துக் கொள்'' என்று சொல்லி, ஆண்டவர் மறைந்தார்.

குமார் தனபால்

# இரண்டு கதைகள்

## (2) சம்பளக் காசோலை

கனகம்மாவுக்கு இன்றைக்கு மிகவும் மகிழ்ச்சிக்குரிய நாள். கடந்த முப்பது நாட்களாகத் தான் போட்ட திட்டங்கள் எல்லாம் நிறைவேறப்போகிறது என்ற மன நிறைவுக்குரிய நாள். விசேஷம் வேறேதுமில்லை. இன்று கனகம்மாவின் கணவனுடைய சம்பள நாள்.

கச்சேரியிலே பெரிய உத்தியோகம் கனகம்மாவின் புருஷனுக்கு. மனுசன் பத்தொன்பது வயதிலேயே வேலைக்கெடுபட்டபடியால் நியாயமான காலம் ''சேர்விஸ்''. அதனாலே நாலு இலக்கத்திலே நல்ல கொழுத்த சம்பளம். ஆனால் இப்ப ஐந்தாறு மாதமாகத் தான் முழுச்சம்பளமும் கனகம்மாவின் கைக்குவருகிறது. வேலையிலே வெகு கெட்டிக்காரன்; ஐந்து சதம் கணக்கு பிசகாது. இவ்வளவு காலத்திலும், வேலையிலே பிழைசெய்தாரென்று மேலிடத்துக்கு ஒரு முறைப்பாடு போனது கிடையாது. அதனாலே அவர் வேலைசெய்த கச்சேரி எல்லாவற்றிலும் அரசாங்க அதிபர் தொடக்கம் சிற்றூழியர் வரைக்கும் அந்தாளிலே ஒரு மதிப்பு. ஆனால் கந்தோரை விட்டு வெளிய வந்தாரென்றால் கள்ளுக்கடை, சாராயக் கடை எல்லாம் தடவிக் கொண்டு நாலுகாலில்தான் வீடு போய்ச் சேருவார். கனகம்மாவும் சொல்லியே சொல்லிப்பார்த்தும் சரிவரவில்லை. சம்பளக்காசும் அரைகுறையாகத்தான் கனகம்மாவின் கையிலே கிடைக்கும். கடைசிக்காலத்துக்குச் சொந்த ஊரிலே வந்தும் தனது புருஷன் திருந்தாதது கனகம்மாவுக்குப் பெரும் மனக்குறை, ஊருலகம் பழிக்கும் என்பதற்காக எதையும் கனகம்மா வெளிக்காட்டிக் கொள்வதில்லை. சீதனக்காணியிலே இருந்து வரும்வருவாயையும் கணவன் மிச்சம் வைக்கும் சில்லறைகளையும் கொண்டு குடும்பத்தைக் கனகச்சிதமாக ஓட்டிக்கொண்டு வந்தாள்.

நாட்டிலே பிரச்சினை வந்து போராளிகளின் போராட்டம் முனைப்பெடுத்ததால் சம்பளக் காசெல்லாம்காசோலையாகச் சொல்லி 'ஓடர்' வந்த நாளில் இருந்துதான் கனகம்மாக்காவின் கையிலே கணவனின் சம்பளம் முழுதாகவந்தது. இதனால் கனகம்மா மனதுக்குள்ளே எப்போதும் 'பொடியளை' வாழ்த்திக் கொள்ளுவாள்,

யாரிடமும் எதற்கும் பல்லுக்காட்டிப் பழக்கமில்லாதவரானபடியால் அவர் சம்பள 'செக்' கைக்கொண்டு வந்து மனைவியிடம் கொடுத்துவிட்டுத் தினசரி தனது தேவைக்குக் காசை மனைவியிடம் வாங்குவார். கனகம்மா வாடிக்கையாகச் சாமான் வாங்கும் கடையிலே செக்கைக் கொடுத்து மிகுதியைவாங்கி இஷ்டப்பட்ட பொருள்களை வாங்கிச் சந்தோஷமாகச் சீவனம் நடத்தினாள். சம்பளம் வந்த மறுநாளில் இருந்து சம்பளம் வரும் நாள் வரைக்கும் மனத்துக்குள் திட்டம் தீட்டிவைத்திருந்து சம்பளச் ''செக்'' வந்தவுடனே 'ஷொப்பிங்' கிற்குப் புறப்பட்டுவிடுவாள். இதனால் இன்று சம்பளநாள் என்றபடியால் மகிழ்வோடு கணவனை எதிர்பார்த்திருக்கிறாள்.

கணவன் வரும் சத்தம் கேட்கிறது. வழமைபோலத் தள்ளாடியபடியே வருகிறார். வந்த மனுஷன் படலையடியிலே தடக்குப்பட்டு மதிலுக்குப்பக்கத்திலே கிடந்த வெள்ளத்துக்குள் விழுந்துவிட்டார். கனகம்மா ஓடிப்போய் ஆளைத்தூக்கி அணைத்துக் கொண்டுவந்து விருந்தாவில் கிடத்திவிட்டு ஒரு மாதிரி இழுத்துப்பறித்து உடுப்பை மாற்றினாள். மாற்றிய கால் சட்டைக்குள் கையைவிட்டு 'செக்'கை எடுத்தாள். 'செக்' தண்ணீரில் நனைந்து எழுத்தெல்லாம் அழிந்து மொட்டையாக இருந்தது.

'மிதிலைச்சிற்பி'

## 'காந்தம்'

ஆசிரியர்: கா. யோ. கிரிதரன்
விலை: ரூ. 3-00

மாதம் ஒருமுறை மாணவர்களின் மதிப்புக்குரிய பத்திரிகையாக. சென் ஜோன்ஸ் கல்லூரி மாணவன் க. யோ. கிரிதரனை ஆசிரியராகக் கொண்டு வெளிவரும் ''காந்தம்'' 12-வது இதழ் கிடைக்கப் பெற்றோம்.

எட்டுப் பக்கங்களில் ''ரோனியோப்'' பிரதியாக வந்திருக்கும் ''காந்தம்'' இலக்கிய ரசனையுள்ள எவரையும் காந்தம் போல் கவர்ந்திழுக்கும் திறன் உடையது.

பாடசாலை மாணவர்களின் கவிதைகள், கட்டுரைகள், துணுக்குகள் என்பவற்றைத் தாங்கி இந்த ''காந்தம்'' மலர்ந்துள்ளது.

சட்டவிரோத மின்பாவனை, மாணவ சமுதாயத்தின் இன்றையநிலை போன்ற கட்டுரைகளும் குறுக்கெழுத்துப் போட்டியும் வரவேற்கக் கூடிய விடயங்கள்.

ஒருவர்: ஏன் வீட்டைக் களிமண்ணால் கட்டியிருக்கிறீங்க?
மற்றவர் சிமென்ட்கிடைக்கேல்ல; அதுதான் என் மூளையைப் பாவிச்சுக் கட்டிட்டேன்.

வில்சன்

'காந்த'த்திலிருந்து

குறுக்கெழுத்துப் போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்கு பரிசு வழங்கும் திட்டம், ''காந்தம்'' மேலும் ஒருபடி முன்னேக்கி செல்வதைக் காட்டுகிறது.

— துரை

## பாலன் பிறக்கமாட்டான்

எங்கள் நாட்டில்
வழமைபோல் இம்முறை
பாலன் பிறக்கமாட்டான்
தப்பி, இம்முறை
பாலன் பிறக்கினும்
அவன் வாழ்வதற்குக்
காலன் விடமாட்டான்.

—ஆவூர்க்குமரன்

★

## வாத்தியார் சொல்லிய வழியில்....

செவியை முறுக்கி
'மடையா
ஐந்திலே எட்டு
அடங்காது அதனாலே
பக்கத்தில் ஒன்று
கடன் வாங்கிக்
கழியடா' என்றார் ஆசிரியர்!
பக்கத்தில் கடன்வாங்கிக்
கழிக்கின்ற
கல்வி வழி
தப்பாமல் வாழ்கின்றேன்
பக்கத்து வீட்டில்
பின்,
பக்கத்துப் பக்கத்தில்
கடன் வாங்கியே
என்காலம்
எப்போதும் கழியுது!

—நெடுந்தீவு லக்ஸ்மன்

★

## இயேசுவே நீ உயிர்த்து விடாதே

இயேசுவே மீண்டும்
உயிர்த்து விடாதே!
இயேசுவே மீண்டும்
உயிர்த்துவிடாதே!
அந்த பாவக் காரரை
மீட்கமுடியாது
உன் பயணத்தின்பலன்
பூஜ்யமாய்விடும்
இயேசுவே மீண்டும்
உயிர்த்து விடாதே!

இங்கே
தரையில் உருட்டப்பட்ட
தலைகள் எத்தனை?
எத்தனை உடல்கள்
தசையும் பிண்டங்களுமாய்
தனியாகப் போயின!!
ஒவ்வொரு இடத்திலும்
ஓடிய குருதியின்
விலைதான் என்ன?
இயேசுவே மீண்டும்
உயிர்த்து விடாதே!
இயேசுவே மீண்டும்
உயிர்த்து விடாதே!

சந்திக்கு சந்தி-
மூலைக்கு மூலை,
வீதிகள் வயல்கள்
வீடுகள் கடைகள்,
கடலிலும்

விழிகள் பிதுங்க
விழுந்து கிடந்த
ஜீவன்கள் புரிந்த
பாவங்கள் என்ன?
பாவத்தின் சம்பளம்
மரணம் என்றாயே!
ஏதும் அறியாத
அந்த
ஜீவன்கள் புரிந்த
பாவங்கள் என்ன?
நம்பிக்கைகள்..
எதிர்பார்ப்புகள்...
கனவுகள்
கற்பனைகள்...
ஆசைகள்...
எல்லாமே மண்ணுக்குள்
அவர்கள் புரிந்த
பாவங்கள் என்ன?
அவர்கள் புரிந்த
பாவங்கள் என்ன?.
இயேசுவே மீண்டும்
உயிர்த்து விடாதே!
இயேசுவே நீ
உயிர்த்து விடாதே!
அந்த பாவக்காரரை
மீட்க முடியாது
உன் பயணத்தின்பலன்
பூஜ்சியமாய்விடும்
இயேசுவே மீண்டும்
உயிர்த்து விடாதே!

—அ. தத்வசுதன்

## 9000 ஓட்டங்கள்

# சுனில் கவாஸ்கரின் அடிலெய்ட் சாதனை!

இந்திய - அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையே அடிலெய்ட் மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற டெஸ்ட் போட்டியில் இந்திய அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் சுனில் மனோகர் கவாஸ்கர், ஆட்டமிழக்காமல் 166 ஓட்டங்களைப் பெற்றதன் மூலம் டெஸ்ட் போட்டிகளில் ஒன்பதினாயிரம் ஓட்டங்களைப் பெற்று புதியதொரு உலக சாதனையை நிலைநாட்டியுள்ளார். உலகில் டெஸ்ட் போட்டிகளில் ஒன்பதினாயிரம் ஓட்டங்களுக்கு மேல் பெற்ற ஒரேயொரு ஆட்டக்காரர் இவரே. இவருக்கடுத்து அதிக ஓட்டங்கள் பெற்றுள்ள ஜெப் போய்கொட் பெற்றவை 8114 ஓட்டங்கள் தான். முதலாவது டெஸ்ட் முடிவில் கவாஸ்கரின் மொத்த ஓட்டங்கள் 9006 ஆகும்.

பல உலக சாதனைகளை ஏற்படுத்தி வரும் சுனில், தற்போது டெஸ்ட் போட்டிகளில் பங்கு பற்றும் எல்லா நாடுகளுக்கு எதிராகவும் செஞ்சரி பெற்றுள்ளார். இவரது முப்பத்தொரு செஞ்சரிகளில் பதின்மூன்று மேற்கு இந்திய வேகப்படைக்கு எதிரானதாகும். ஆறு செஞ்சரிகள் அவுஸ்ரேலியாவிற்கெதிராகவும் ஐந்து பாகிஸ்தானுக்கு எதிராகவும் நான்கு இங்கிலாந்திற்கெதிராகவும் இரண்டு நியூசிலாந்திற்கெதிராகவும் ஒன்று இலங்கைக்கெதிராகவும் பெறப்பட்டதாகும். இந்த முப்பத்தொரு செஞ்சரிகளில் நான்கு, இரட்டைச் செஞ்சரிகளும் அடங்கும்.

1949 ஆண்டு யூலை 10 ந் தேதி பிறந்த சுனில் கவாஸ்கர் 1971 ம் ஆண்டு மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிராகத் தனது டெஸ்ட் வாழ்வை ஆரம்பித்தார். முதல் சீரிஸிலேயே நான்கு டெஸ்ட் போட்டிகளில் மொத்தம் 774 ஓட்டங்கள் பெற்று சாதனை புரிந்தார். இதனுள் மூன்று செஞ்சரிகளும் ஒரு இரட்டைச் செஞ்சரியும் அடங்கும்.

அன்று தொடங்கிய கவாஸ்கரின் சாதனைப்பட்டியல் தொடர்கிறது. 1983 - ல் சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் ஆட்டமிழக்காமல் 236 ஓட்டங்களை மே. இந்தியத் தீவுகள் அணிக்கு எதிராகப் பெற்றதன் மூலம் அவுஸ்ரேலிய வீரர் டொனல்ட் பிராட்மனின் இருபத்தொன்பது செஞ்சரிகள் என்ற சாதனையினை முறியடித்தார். பிராட்மன், கவாஸ்கரைப் பற்றிக் குறிப்பிடும்போது ''அவர் ஒரு மகத்தான விளையாட்டு வீரர்; இந்த விளையாட்டிற்கு அவர் ஒரு ஆபரணம்'' எனக்குறிப்பிடுகிறார்.

கவாஸ்கர் மிக விரும்புகின்ற ஆட்டக்காரர் மே. இந்திய தீவுகளின் தற்போதைய தலைவரான விவியன் றிச்சட்ஸ் இவர் எங்கள் அணியில் இருக்க வேண்டியவர்; இந்தியாவில் இருக்கிறார்'' என கவாஸ்கரைப் பற்றிக் கூறினார்.

ஒரே டெஸ்டில் இருஇனிங்ஸிலும் இரு செஞ்சரிகளை மூன்று தடவை கவாஸ்கர் பெற்றுள்ளார். இது ஒரு உலக சாதனை தவிர, ஒரு கலண்டர் ஆண்டில் ஆயிரம் ஓட்டங்கள் என்ற சாதனையையும் இவர் நான்கு முறை நிலைநாட்டினார். ஒரு தொடரில் ஐந்நூறுக்கு மேற்பட்ட ஓட்டங்களை ஆறுமுறை பெற்றுள்ளார்.

மிகச் சிறந்த பந்து தடுப்பாளராகவும் விளங்கும் கவாஸ்கர் இதுவரை ஆடிய 110 டெஸ்ட் போட்டிகளில் தொண்ணூற்றாறு [96] Catch களையும் பிடித்துள்ளார். உலகில் இவரை விட அதிக டெஸ்ட் போட்டிகளில் ஆடியவர் இங்கிலாந்தின் கொலின் கௌட்ரி மாத்திரமே இவர் 114 டெஸ்டுகளில் ஆடியிருந்தார்.

மிகச் சிறந்த எழுத்தாளராக விளங்கும் சுனில் இதுவரை ''Sunny days'' ''Idols'' என்ற இரு நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார் இவை ஆயிரக்கணக்கில் விற்றுத் தீர்ந்துள்ளன. ''Indian Criketer'' என்ற சஞ்சிகையின் ஆசிரியராக இவர் இருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

''Little Master'' என அன்புடன் அழைக்கப்படும் கவாஸ்கர்' அவுஸ்ரேலியாவில் இடம் பெற்ற உலகக் கிண்ணப் போட்டியில் இந்திய அணியை வெற்றிப் பாதையில் வழி நடத்தியபின் தலைமைப் பதவியிலிருந்து விலகினார். அதுவரை 47 டெஸ்ட் போட்டிகளில் இவர் இந்திய அணிக்கு கப்டனாகக் கடமையாற்றியுள்ளார்.

கவாஸ்கரது மற்றொரு சிறப்பான சாதனை, தொடர்ச்சியாக மூன்று இனிங்சுகளிலும் செஞ்சரி அடித்தது ஆகும் இப்பெருமையை இவர் இருமுறை பெற்றிருக்கிறார். தொடர்ச்சியாக 87 டெஸ்ட் போட்டிகளில் ஆடி முன்னாள் இந்திய கிரிக்கெட் வீரர் குண்டப்பா விஸ்வநாத் [கவாஸ்கரின் மைத்துனர்] சாதனை புரிந்தார். கவாஸ்கர் அதனையும் முறியடித்து தற்போது 94 டெஸ்ட் போட்டிகளின் தொடர்ந்து ஆடியுள்ளார்.

இவ்வாறு சாதனை மேல் சாதனை புரிந்து வரும் சுனில் [இதுதான் இவரது உண்மையான பெயர் கவாஸ்கர் இவரது தந்தையின் பெயராகும்] பத்தாயிரம் ஓட்டங்களுக்கு மேல் குவித்து சாதனை புரிய வேண்டும் என்பதே கிரிக்கெட் ரசிகர்களின் விருப்பமாகும்.

தொகுப்பு:
வைத்தியநாதர் சிவநேசன்
யாழ். இந்துக் கல்லூரி

## பாலனைத் துதித்திடுவோம்

பாலன் பிறந்தான் பாரினிலே
பரிசு பெற்றது பெந்தலகேம்
யூதர் ராஜா இவரை நாமே
யேசு என்றே வணங்கிடுவோம்

★

உவமைகளாலே உண்மைகளை
உலகுனுக்கீந்த உத்தமனும்
நிலவை போல ஒளியுடையான்
— அந்த
நிமலன் பாதம் வணங்கிடுவோம்.


★

பாவிகள் மனதைப் பறிக்க வந்தார்
பெரும் பாடுகள் தனையே அனுபவித்தார்
பாரினில் மக்களின் மகிமை பெற்ற
பாலனைப்பாடித் துதித்திடுவோம் வாரீர்

— கேதீஸ்வரநாதன்

## எமது சிறுகதை

# முன்னிலவும் பின்னிரவும்




**மழை** சோனவாரியாகப் பெய்துகொண்டிருக்கிறது. உங்களுக்கு எப்படியோ தெரியாது, என்னால் மணிக்கணக்காக இந்த மழையை ரசிக்க முடியும்.

காற்றின் திசைக்கேற்ப ஒரு கணம் செங்குத்தாகவும் மறு கணம் இந்தப் பக்கம் நிலத்தில் அறுபது பாகை கோணத்திலும் மறுகணம் அந்தப்பக்கம் அறுபது பாகை கோணத்திலும் என்ன ஜோராய்ப் பெய்கிறது. இந்த மழை!

வறண்ட பூமி நீரை உறிஞ்சிப் புளகாங்கிதம் அடைந்து பூரிக்கிறது. மண்ணின் மேல் உள்ள நீரில் மழைத்துளிகள் விழுந்து பூக்குமிழிகளான கொப்பழங்களை உண்டாக்கி, அவை சிறிது தூரம் அசைந்து சென்று 'கொபுப்' என்று வெடிக்க வானத்தில் ஆயிரம் ஆயிரம் யானைகள் சேர்ந்தாற் போல் கருமேகங்கள் சாடிட அந்த யானைகளின் தும்பிக் கைகள் போன்று சில பகுதிகள் கீழிறங்கி - என்ன ஜோராய்ப் பெய்கிறது. இந்த மழை!

குளிருக்கு இதமாக கணப்பின் முன்னாலிருந்து இரு கைகளையும் குறுக்காகப் போட்டு தோளைப்பற்றியடி உட்கார்ந்து எவ்வளவு நேரமானாலும் இந்த மழையை அலுப்புச் சலிப்பில்லாமல் பார்த்து என்னால் ரசிக்க முடியும்.

மழை சற்று வெளித்தது. ஆனாலும்மழை தந்தஅந்த இதமான குளிர் இன்னமும் கிளுகிளுத்துக் கொண்டிருந்தது. 'இந்தக்குளிருக்கு ஒரு சிகரட் பத்தினால் என்ன இதமாக இருக்கும்' —நினைவைச் செயலாக்க சைக்கிளை எடுத்துக் கொண்டு புறப்பட்டேன்.

ஒழுங்கையில் வெள்ளம் வாரடித்துப் பாய்ந்தது. அந்தப் பாயும் வெள்ளத்தினூடு நீரைக் கிழித்தபடி சைக்கிளில் செல்லுவது ஒரு அலாதியான அனுபவம்தான்.

இங்கு தொலைவில் இருந்து பார்க்கும் போதே மடத்தில் சிலர் இருப்பது தெரிந்தது. மடத்தைத் தாண்டித்தான் கடைக்குப்போக வேண்டும். மடம் அண்மித்ததும் சைக்கிளைச்சிறிது 'ஸ்லோ' பண்ணினேன். அட நம்ம கூட்டம் தான். சிதம்பரி, தருமன், கிட்ணன், சின்னையாத்தாத்தா ஆகியோர் அங்கிருந்தனர்.

எனக்கு மகிழ்சி பீறிட்டது. இந்தக்குளிருக்கு சின்னையாத் தாத்தாவிடம் கதைத்துக் கொண்டிருப்பதென்றால் கணப்படுப்பருகே இருப்பது போன்ற இன்பம்.

'நீலமணி', 'பாசத்தின்விலை' ஆகிய எனது கதைகளைப்படித்த வாசகர்ளுக்கு; இந்த மடத்தையும் சின்னையாத் தாத்தாவையும் நன்கு நினைவிருக்குமென்று நம்புகிறேன்.

ஒரு பசுவின் பரிதாபத்திற்குரிய 'நீலமணி' என்ற எனது சிறுகதையைப் படித்தபின் பலர் தாம் சின்னையாத் தாத்தாதைச் சந்திக்க விரும்புவதாக எனக்கு எழுதினார்கள்.

தான் சொல்லும் கதைகளை எல்லாம் நான் பத்திரிகைகளில் எழுதுவதையிட்டு, சின்னையாத் தாத்தாவுக்கு வலு சந்தோஷம்.

''வா வா உன்னைத்தான் நைச்சுக் கொண்டிருந்தன். எங்கை இஞ்சாலிப்பக்கம் கன நாளாய்க் காணேல்லை'' என்று சின்னையாத் தாத்தா வரவேற்றார்.

''அண்டைக்கு நான் சொன்ன கதையை நீ பேப்பரிலை எழுதினியாம். பேரப்பெடியன் வாசிச்சுக் காட்டினான். நல்லாய்த்தான் எழுதியிருக்கிறாய். ஆனால் அதென்ன கதையிலை எனக்கு 'டோப்பு' எண்டு எழுதியிருக்கிறாய். அதுதான் எனக்கு விளங்கேல்லை. டோப்பெண்ட— அதென்ன எனக்கு ஒண்டுமாய் விளங்குதில்லை'' என்றார். சிதம்பரி கண்ணைச் சிமிட்டிச் சிரித்தான். தருமன் முகத்தை அப்புறமாகத்திருப்பி, சிரிப்பை அடக்க முயன்றான்.

'' 'டோப்பு' எண்டால் வலு சந்தோசத்திலை இருக்கிறார் எண்டு அர்த்தம் தாத்தா'' என்று கதை அளந்தேன்.

தாத்தா புரிந்தவர் போலவும் புரியாதவர் போலவும் தலையை ஆட்டினார்.

மடத்தைஇடித்துக்கொண்டு வளர்ந்திருந்த ஆலமர இலைகள் குளிர்காற்றில் சிலிர்ப்படைந்து சிலிர் நீரைச் சிந்தின. மழையில் நனைந்த காக்கை ஒன்று ஆலமரத்தில் அமர்ந்து சிறகுகளை உதறி நீரைச் சிலிர்த்துவிட்டு ஆறுதலாக இறகு கோத ஆரம்பித்தது.

இந்த மடமும் இந்த ஆலமரமும் எத்தனை தலைமுறைகளைக் கண்டிருக்கும். எத்தனை கதை கேட்டிருக்கும் - நான் வியந்து கொண்டேன்.

மடத்தை ஒட்டி வளைந்து போகும் கல்லொழுங்கையில் இருந்து செல்லன் தலையில் நார்க்கடகத்தோடு வந்தான்.

''செல்லா; உதென்னடா கொண்டுபோறாய்'' - தாத்தா

''மரவள்ளிக் கிழங்கையா''

''கொண்டா பாப்பம்...''

செல்லன் கடகத்தை சுமைதாங்கியில் இறக்கி வைத்தான் தாத்தா கிழங்குகளுக்கு மேல் இருந்த மரவள்ளி இலைகளை விலத்தி கிழங்குகளைப்புரட்டிப் புரட்டிப் பார்த்தார்- ''நல்ல உருப்பம் பெருப்பமாய்த்தான் விளைஞ்சிருக்கு ருத்தல் என்னவிலை?''

''என்னட்டா எங்கேய்யா தராசு இருக்கு....''

''இந்தாங்கோ, இவ்வளவும் அஞ்சு ரூபாய்'' - செல்லன் மூன்று பெரிய கிழங்குகளை எடுத்து வைத்தான்.

''எட, எட நான் வேண்டேல்லையடா நான் சும்மா கேட்டனான்'' - தாத்தா அவசரத்துடன் குறுக்கிட்டார்.

இதற்கிடையில் சிதம்பரியின் மூளையில் ஓர் மின்வெட்டு யோசனை பளீச்சிட்டிருக்க வேண்டும். அவனுக்கு இப்படித்தான் இருந்திருந்திட்டு அபார யோசனைகள் வரும். ஆனால் ஆள்தான் கொஞ்சம் அலட்டல்.

''செல்லன் இந்தா அஞ்சு ரூபாய்க்குக் கிழங்கு தா. வேரில்லாத நல்ல கிழங்காய் எடு'' - சிதம்பரி கடகத்தில் இருந்து பூனைக்குட்டி போன்று நன்கு உருண்டு திரண்ட மூன்று கிழங்குகளை எடுத்தான். தாத்தா வியப்போடு சிதம்பரியைப் பார்த்தார். பார்வை 'ஏன்' என்றது.

''சுடப்போறம்; இதிலையே சுட்டுத் திண்டால்; மழைக் குளிருக்குச் சோக்காய் இருக்கும்.''

எங்கள் எல்லோருக்கும் மகிழ்ச்சி குமிழியிட்டது. சிதம்பரி அலட்டலாய் இருந்தாலும் பலே ஆசாமிதான்.

தருமன் மடத்தின் பின்னால் போய் ஒன்றின் மேல் ஒன்றாக விழுந்து குவியலாய்க் கிடக்கும் காவோலைகளைக் கிளறிக் குவியலின் நடுப்பகுதியில் மழை படாதிருந்த இரு காவோலைகளை எடுத்து வந்தான். கிட்ணன் காவோலைகளைப் பிய்த்து அடுக்கினான். சிதம்பரி அதன்மேல் கிழங்குகளை அடுக்கினான் தாத்தா வழக்கமாய்த் தான் தீப்பெட்டி வைக்கும் பொந்திலிருந்து தீப்பெட்டியை எடுத்து வந்தார். ஆனால் மழை வாடைபட்டு தீப்பெட்டி 'நமுத்து'ப்போய் இருந்தது. நான் சைக்கிளை எடுத்துக் கொண்டு அருகில் இருந்த கடைக்குப் போய் தீப்பெட்டி வாங்கி வந்தேன்.

எரியும் நெருப்பில் கிழங்கு வேகத் தொடங்கியது. சிதம்பரி பதமாய்ப் புரட்டிப் புரட்டி விட்டான். கிழங்கு வேகும் மணமே மூக்கைத் துளைத்தது. கொழுந்துவிட்டு எரியும் அக்கினியின் செந்நாக்குகள் எல்லோர் முகத்திலும் சிறிது செம்மை பூசியது. ஈற்றில் எவ்வித சேதாரமுமின்றிக் கிழங்கு நல்ல பதத்திற்கு வெந்திருந்தது. வெந்த கிழங்கை பிரித்த போது மாப்பொருள்மணிகள் கண்ணாடிப் பொடிகள்போன்று மினுமினுத்தன.

கிழங்கைப் பிட்டு வாயில் போட்டதுமே வெண்ணெயாய் கரைந்தது,

''பசாககாய் கிளங்கு. கிராய்க் கிளங்கெண்டா உப்பி படித்தான். நல்ல மாப்பிடிப்பான கிளங்கு'' - தாத்தா கிழங்கைப்பிட்டு வாயில் போட்டபடி கூறினார்.

''உங்களுக்கு என்னெண்டு தாத்தா கிராய்க் கிளங்கெண்டு தெரியும்?'' - தருமன்.

தாத்தா ஒரு சிரிப்புச் சிரித்தார் - கேலி தெறித்து விழுந்தது.

'நீங்கள் எல்லாம் காற்சட்டை போட்ட உத்தியாககாறர்; மண்ணைப்பற்றி உங்களுக்கென்ன தெரியும்? கிளங்கின்ரை நிறத்திலை தெரியேல்லையோ, இது கிராய்க் கிளங்கெண்டு - கிராய்க் கிளங்கெண்டா அந்த மண்ணின்ரை நிறத்திலை கிளங்கும் கறுப்பாய் இருக்கும் செம்பாட்டுக் கிளங்கெண்டால் சிவப்பாய் இருக்கும். ...

''......அந்தக்காலத்திலைஎல்லாம் கிளங்குதானேடாப்பா எங்கட சாப்பாடு. கிளங்குக் கறியைச் சட்டி நிறையக் காச்சி வைச்சிட்டு அதுக்குள்ளை ஒரு கை புட்டைப் போட்டுக் குழைச்சுத் தின்ன வேணும்...ச்சாய் என்ன உருசை.''

தாத்தா சப்புக் கொட்டினார்.

''சில நேரம் மூண்டு நேரமும் கிளங்குதான் சாப்பாடு. காலமை அவிச்ச கிளங்கு. மத்தியானம் கிளங்குபோட்ட ஒடியற்கூழ், பேந்து இரவில் மரவள்ளி மா ரொட்டி... அந்தச் சாப்பாடுகளின்ரை உருசியையும் பெலத்தையும் சொல்லி உங்களுக்கு விளங்காது.... இப்ப எல்லோ பாணும் இடியப்பமும். அப்ப ஆற்றை வீட்டிலை இடியப்பம், மரவள்ளியும் குரக்கனும்தான் எல்லாற்றை சாப்பாடும்... ச்சாய் அந்தக் காலத்துச் சாப்பாடுகள்... இந்தப் பாணையும் பட்டரையும் திண்டு போட்டு நாற்பது வயது முடிய முன்னம் சுடலைக்குப் போடுங்கள்'' தாத்தா அந்தக் காலத்துச் சாப்பாடு பற்றி மேலும் சிலாகித்தார்.

உண்மைதான் இந்த எழுபத்தைந்து வயதிலும் தாத்தா என்ன கம்பீரமாய் - கருங்காலிக் கட்டை மாதிரி பற்கள் பளபள என்று ஒளி வீச என்ன மாதிரி இருக்கிறார்! அன்றைய குரக்கனும், சாமையும், இறுங்கும், மரவள்ளியும் இப்போதும் தாத்தாவின் இரத்தத்தில ஓடுகின்றன.

''டேய் சிதம்பரம் - அந்தக் காலத்திலை ஆருக்கடா உத்தியோகம், தன்ரை தன்ரை காணியைப் பாத்தாலேஅவனவன்ரை குடும்பத்துக்குப் போதும். வரியத்திலை ஆறு மாதத்துக்குத்தோட்டத்தில வேலை செய்வம்; ஆறுமாதத்துக்குப் பொதுத்தொண்டு.

''அந்தக்காலத்திலை உத்தியோகமொண்டுமில்லாமல் நாங்கள் கட்டிமுடிச்ச கோயில்களைப் பராமரிக்கிறதுக்கே உங்களிட்டை வசதி இல்லை கனக்க வேண்டாம்; கோயில் சுவருக்கு வெள்ளையடிச்சு எத்தனை வரியமாச்சு; கோயில் கேணி இறைச்சு எத்தினை வரியமாச்சு. ஏன் சோப்பாயிலை அப்படி ஒரு மனிசர் மனிசர் இலலையே?...... ஒருத்தரிட்டையும் கையில காசில்லை ...ஒருத்தரும் அக்கறையில்லை. கண்டறியாத உத்தியோகக் காறர்...

''பேப்பரிலை எல்லாம் எழுதுற நீ சொல்லு; அப்பத்தையான் காலம் போல இல்லை இப்பத்தையான்காலம்.. இப்ப சந்திரமண்டலத்துக்குக் கூடப் போவம்... எண்டு அடிக்கடி சொல்லுற நீ சொல்லு; சந்திரமண்டலத்துக்குப் போற நீங்கள்— அந்தக் காலத்திலை நாங்கள் வெட்டின தாமரைக் குளத்தைப் போலை ஒரு குளம் நீங்கள் ஏன் வெட்டேல்லை...

[10ம் பக்கம் பார்க்க]

## தேனைக்கண்ட நாய்

மருந்துண்ணத் தேன் அனுமானம் அவசியம். ஆனால் தேன் இயற்கைத் தேனாக - உண்மைத்தேனாகத் தேவைப் படுகிறது. நீங்கள் வாங்கும் தேன் அசல் தேன்தானா என்று கண்டுபிடிக்க இதோஒரு வழி.

சிலர் தேனை வாங்கிக் காகிதத்தில் வைத்து, காகிதம் ஊறாமலிருந்தால் உண்மைத் தேன்என்று முடிவுசெய்து விடுவார்கள். இது தவறு. உண்மையைக்காண ரசாயனக் கூடத்துக்குத்தான் போக வேண்டும். இம்முறையில் காலதாமதமாகும். அவசரத்துக்கு மருந்துண்ண முடியுமா? இதற்கு ஒரு சுருக்குவழி; தேனைக் கடையில் வாங்கிய அடுத்த நிமிடமே கண்டுபிடித்து விடலாம்.

அதாவது தேனை ஒரு காகிதத்தில் கொட்டி நாய் உண்ணக் கொடுங்கள். உண்மையிலேயே தேனாக இருந்தால் நாய் நாக்கை நீட்டாது; உண்ணாது. செயற்கைத் தேன்- பாகுத் தேனாக இருந்தால் நாக்கைநீட்டி வாலைக் குழைத்துச் சாப்பிட்டுவிடும்.

டாக்டர்
**கே. எம். ஏ. வஹாப்**

## நலங்காணச் சிரித்திடுவோம்

முதுகுவலி தாளாமல் முடமாடாய் வீழ்ந்து
முனகியழு தேனருகில் முத்தையர் அழுதார்!
நிதமுமொரு நெஞ்சுவலி நிமிடமொரு மயக்கம்
நிலைத்திட்ட தன்வலியை நினைந்துளறி அழுதார்!

வெள்ளத்தா லென்பயிர்கள் வீழ்ந்தழித்த துயர
வேதனையா லழுதேனென் அருகிலவர் அழுதார்!
பள்ளத்துக் குளக்காணி பலநூறு பெற்று
பாலனவன் ஏமாற்றி விற்றசெயற் கழுதார்!

சீதனமாய்ப் பலலட்சம் பெற்றமகள் கணவன்
சீட்டாடிக் குடித்தழித்த செயற்கழுதேன், அழுதார்!
பாதகனும் தன்மருகன் அன்புமகள் தன்னை
பாழிருட்டில் கொண்டுமணம் புரிந்த செயற் கழுதார்!

வேலையற்று வீதியிலே தூங்கியழும் எந்தன்
விவேகமகன் நிலைக்கழுதேன் விக்கிவிக்கி அழுதார்!
காலமொரு நீள்வருடம் கடந்துமொரு கடிதம்
கப்பலுக்குப் போனமகன் போடவில்லை, அழுதார்!

உள்ளத்தால் நல்லன்பால் ஊட்டியெனை வளர்த்த
உறுதுணையாள் என்பாட்டி உயிர்நீங்க அழுதேன்!
வெள்ளம்போற் கண்ணீரும் வீழ்ந்தோட என்றே
விண்ணுற்ற மனையன்பு வினைசொல்லி அழுதார்

போனதெலாம் வாராதிப் புவித்துயரம் அகலா [து]
பொய்யுலகில் எமதுதுயர்க் காரழுதார் அழுவார்!
நானழுதேன் அவரழுதார் நாளெல்லாம் துயரேன்?
நலங்காணச் சிரித்திடுவோம் நம்துயர்கள் வெல்வோம்.

— **செ. மகேந்திரன்**

# சிறுகதை

(9ம் பக்கத் தொடர்ச்சி)

அந்தக் காலத்திலே நாங்கள் கட்டின கோயிலேப்போல உங்களால் ஏன் ஒரு கோயில் கட்டேலாமல் கிடக்கு... கனக்க ஏன் அந்தக்காலத்தில் நாங்கள் கட்டின வாசிகசாலேயில் இப்ப நீங்கள் ஒழுங்கா ஒரு பேபபர் போடேலாமல் இருக்கிறியள் . .சந்திரமண்டலம் போயின மாம் சந்திரமண்டலம்.''

தூறலாகப் பெய்த மழை இப்போது பலத்தது. தாத்தாவைப் போல வானமும் குமுறிக் கொட்டியது. எங்கோ ஒரு மரம் 'சட சட' எனச் சரிந்த ஒலி. அந்த ஒலியினுல் கலவரப்பட்ட குயில் ஒன்றின் கூக்குரல்.

மரம் விழுந்த சத்தத்தைச் செவி மடுத்த தாத்தா''நொச்சியடி மூட்டிலே நிண்ட அந்தச் சதா பிடிச்ச தென்னே விழுந்திட்டு போல கிடக்கு'' என்ருர். பின்பு பழைய இடத்தில் இருந்து ஆரம்பித்தார்.

''உந்தத் தாமரைக் குளத்தைப் பாருங்கோ; கட்டெல்லாம் ஆமணக்கும் காரையும் வளந்து காடுபத்திப் போச்சு. எங்கடை காலத்திலே குளக்கட்டிலே ஒருபுல்லேக்காணேலுமே? குளம் என்ரையோ உன்ரையோ எண்டு நாங்கள் சண்டை பிடிக்கேல்லே. ஆரண்டா என்ன வரியத்திலே ஒருக்காக் குளக்கட்டைச் செதுக்கி துப்பரவாக்குவம் இப்பத்தய பெடியங்களுக்கு தாமரைக்குளம் எங்கை இருக்குதண்டே தெரியாது. படிப்பு- கண்டறியாத படிப்பு -படிச்சும் உத்தியோகம் இல்லே எண்டா பேந்தேன் டடிப்பு? டேய் சிதம்பரம்- வசதிக்குத் தக்கபடிதான்ரா மனிதன் வாழவேணும். வசதியளேப் பெருக்கிக் கொண்டு, வருமானம் பத்தேல்லே எண்டா; உதென்ன கதையெண்டு எனக்கு விளங்கேல்லே. வருமானும் வரவர அதுக்கு மேலாலே வசதியளேத் தேடிக் கொண்டு வருமானம் பத்தாது எண்டு குளறினுல் என்னசெய்யிறது..

''அந்தக் காலத்திலே ஒரு நாலு முளத் துண்டோடையும் ஒரு சல்வையோடையும் தான் நாங்கள் சீவிச்சனுங்கள் எட்டுப் பிள்ளேயளேப் பெத்தனுன். அவையளே வளர்த்து ஆளாக்கினன். பாணும், பிரிச்சும், பட்டரும் இல்லாம நாங்கள் செத்துப் போசேல்லே... மரவள்ளிக் கிளங்கோடையும், குரக்கனேடையும் இந்த ஒலே வீட்டிலே சீவிச்சனுங்க தானே...''

கடந்தகால நினேவில் மனம் லயித்து' இக்கால நிகழ்வுகளேக் கண்ட மனக் கொதிப்பில் சின்னேயாத் தாத்தா பேசிக் கொண்டே போனுர். அவரின் வாயிலிருந்து சிதறி விழும் தத்துவங்கள் என்னேத் திகைக்க வைத்தன. எழுபத்தைந்து வயது சென்ற இந்தப் பட்டிக் காட்டுக் கிழவர், படிப்புவாசனேயே அறியாத இந்தக் கிழவர், வாழ்வின் உண்மை நிகழ்வுகளே எவ்வளவு துல்லியமாகப் பிட்டு வைத்து விட்டார்.

'வருமானத்துக்கு மேலாலே வசதிகளேப் பெருக்கிக் கொண்டு போனுல் வருமானம் எப்படிப் போதும்—எவ்வளவு பெரிய உண்மையை வெகு சாதாரணமாகச் சொல்லியிருக்கிருர். நான் பிரமித்து நின்றேன்.

தாத்தா கிழங்கில் ஒரு துண்டைப் பிட்டு வாயில் போட்டுக் கொண்டு தம்மை சிறிது ஆசுவாசப்படுத்திக் கொண்டார்.

''இந்தச் சுட்ட கிளங்கைக் கண்டதும் எனக்குப் பழைய கதையெண்டு ஞாபசம் வருகுது'' கிழங்கை உமிஞ்சபடி தாத்தா கூறினுர்.

கதை என்றதும் நான் உஷாரானேன். புலன்களேத் தீட்டிக் கொண்டேன்.

தாத்தா மடியை அவிழ்த்துப் புகையிலே எடுத்து நெட்டறக் கிழித்து, சுருட்டத் தொடங்கினுர். சுருட்டை வாயில் வைத்து, நெருப்புக் குச்சியை உரசிச் சுருட்டு முனேயில் பிடித்தவாறே 'பக்குப் பக்கு' என்று பொச்சடித்துச் சுருட்டைப் பற்றிக் கொண்டார்.

தாத்தா சுருட்டை இந்தக் கடவாய்க்கும் அந்தக் கடவாய்க்கும் மாறிமாறிக் கடித்தபடி புகையின்பத்தில் இருக்கிருர் என்ருல் கடந்தகாலத்தை இரைமீட்கிருர் என்றுஅர்த்தம்.

தாத்தா திடீரென விழிப்புற்றவராக,

''உவன் கொக்கு வைத்தி இருக்கிருன் எல்லே, அவன்ரை தேப்பன் -விஞ்சி விறிசி விஞ்சி எண்டு சொல்லுறது - உலகத்திலே தன்னுலே ஏலாதது ஒன்டுமில்லே எண்டு விசாய்க் கதைப்பான் - அதாலே விறிசி விஞ்சி எண்டு சொல்லுறது. விறிசி விஞ்சியின்ரை தேப்பன் - கொக்கு வைத்தியின்ரை பேரன்... அந்தாளுக்கு என்னுமோரு பேர்... நெஞ்சுக்கை நிக்குது வருகுதில்லே... கந்தையா... கந்தையா கொக்குவில் கந்தையா எண்டு சொல்லுறது.

''கொக்குவில் கந்தையா ஒரு ஆயிரம் கண்டிலே மரவள்ளி நட்டிருந்தவர். பனேயோலே எல்லாம் தாட்டதாலே மண் நல்ல சொகுசு கண்டியோ; மரவள்ளிநல்லா வேர் ஓடித் திரணே திரணேயாய் கிளங்குகள் விழுந்திருந்தது. கிளங்கின்பெருப்பத்தாலே மண் பாளம்பாளமாய்வெடிச்சிருந்து தெண்டால் கிளங்கின்ரை பெருப்பத்தைப் பாரன்.

''அப்ப விஞ்சி நல்ல இளந்தாரி; நான், விஞ்சி, சின்னப்பு சரவணே, ராமு எல்லாப் ஒத்த வயதுக்காறர். கந்தையற்றைதோட்டத்திலே கிளங்கு களவுபோகத் தொடங்கீட்டுது. அப்ப கள்ளர்எண்ட களவு எடுக்க எண்டு எடுக்கிறேல்லே. விடலேப்பொடியள் சேந்து இரவிலே சும்மா வம்புக்கு ஆற்றேன் தோட்டத்துக்குள்ளே பூந்து கிளங்கைப் புடுங்கி அங்கையே சுட்டுத் திண்டுபோட்டுப் போடுவங்கள். கந்தையற்றை கிளங்கு நல்ல உருப்பம் பெருப்பம். அதோடை கிராய்க் கிளங்குகள் பொடியள் ருசி கண்டிட்டாங்கள்.

கந்தையர் தோட்டத்துக்கு காவல்போட யோசிச்சார். இரவிலே விஞ்சியைப் போய் தோட்டத்திலே படுக்கச் சொல்லிக் கேட்டார். விஞ்சியும் பார் இண்டைக்குக் கள்ளரைக் கட்டிக்கொண்டாறன் எண்டு பெரிய விறிசாய்க் கதைச்சுது.

''ராச்சாப்பாட்டையும்முடிச்சுக்கொண்டு அரிக்கன் விளக்கையும் எடுத்துக்கொண்டு தோட்டத்துக்குப் போனுன். மாட்டுக் குடிலுக்குள்ளே சாக்கொண்டை விரிச்சிக்கொண்டு ஒரு சாக்கை மடிச்சுத் தலேக்கு வைச்சுக்கொண்டுவிஞ்சி படுத்திட்டான்.

''பொடிப் புள்ளேயள் வழக்கம் போலே கிளங்கு புடுங்கவந்திருக்கினம், மாட்டுக் குடிலுக்குள்ளே விளக்கு எரியுறதைக் கண்டிட்டு மெதுவாய்க் கிட்டப்போய்ப் பாத்திருக்கினம். விஞ்சி குறட்டை விட்டுக் கொண்டு நல்ல நித்திரை. பொடியளுக்கும் ஆளிலே விசயமில்லே; விறிசுதான் எண்டு தெரியும்போலே. ஒருத்தன் காவலுக்கு நிக்க மற்றவர்சள் போய்க் கிளங்கைப் புடுங்கியிருக்கிருங்ச்ள். எடுத்துக் கொண்டு போக ஏதனம் ஒண்டும் இல்லே. காவலுக்கு நிண்டவன் மெதுவாய்ப் போய் விஞ்சி தலேக்குப் போட்டுப் படுத்திருந்த சாக்கை மெல்ல எடுத்திருக்கிருன். விஞ்சிடயத்திலே பேசாமல் கிடந்திட்டானே இல்லே உண்மையிலே நித்திரையோ தெரியாது.

''பொடியள் கிளங்கைச்சாக்கிலே கட்டிக்கொண்டு போனதுதான் தாமதம் 'ஐய்யோ, கள்ளன் கள்ளன்' எண்டு கத்தி இருச்கிருன். கள்ளர் சும்மா இருப்பாங்களே? வறுகித் தள்ளீட்டாங்சள். எப்படிக் காவலுக்குப் போனவர் செய்தகெட்டித்தனத்தை.

தாத்தா நிற்பாட்டினுர். வெளியே குமுறிப்பெய்த மழை ஓய்ந்திருந்தது. கரும் பூசமாய் இருள் விரைந்து கவிந்தது''.

''பேந்து கள்வரைப் பிடிக்கேல்லேயே'' — கிட்ணன் கேட்டான்.

''கள்ளரோ? ஆர் கள்ளர்... நாங்கள் தான். நான்தான் விஞ்சி படுத்திருந்த சாக்கை உருவினனுன்....... இந்தக் சதையை நாங்கள் பெடியளிட்டை எல்லாம் சொல்லிச் சிரிசிரி எண்டு சிரிச்சு... அதுக்குப் பிறகுதான் விஞ்சிக்கு விறிசி விஞ்சி எண்டு பட்டப் பேர் வந்தது,''

தாத்தா துவாயை எடுத்துக் கொண்டு எழுந்தார். 'ம்... மழை விட்டுட்டுது, விளக்கு வைக்கிற நேரமாச்சுது. எழும்புங்கோ —. மழையிருட்டு. அதோடை முன்னிருட்டுக் காலம். பாத்துக்கொண்டிருக்க 'சடக்கென' இருண்டு போம். இருளுக்கு முன்னம் வீட்டை போகவேணும்.''

ஒவ்வொருவர் ஒவ்வொருவராகக் கலேந்தோம். தாத்தா சொன்ன கதை நெஞ்சில் படமாக விழுந்தது. சதை கொஞ்சம் சின்னன் தான்.கொஞ்சம்தட்டி நிமித்தி எழுதிப் போடலாம். அதைக் கதையாக்கும் அவசாத்தில் சைக்கிளே ஊன்றிமிதித்தேன்.

[யாவும் கற்பனே]

# இவ்வாரம் எப்படி?

மாதம் — மார்கழி
திகதி-14[1985 12-29]
கிழமை - ஞாயிறு
திதி - த்ருதியை பி.ப.வரை
நக்ஷத்திரம்— புனர்பூசம் காலை 6-52மேல்பூசம்

## மேடம்

தொழில் துறையில் தொல்லேகள்தோன்றும் பயன் தரும் பிரயாணம் ஒன்றும் மேற்கொள்ளப்படலாம். வெளியிடத்துத் தொடர்புகள் பெருகும். கருத்து வேற்றுமைகள் மறைந்து நல்லமுடிவு ஏற்படும். கல்வித்துறையிலும் முன்னேற்றம் காணப்படும்.

## இடபம்

நீண்டநாள் கொடுக்கல் வாங்கல் நிவர்த்தியாகும். புதிய தொழில் மூலம் இலாடம் கிடைக்கும். புத்திரர்களுடைய செல்வாக்குப் பெருகும். புதுமையான எண்ணங்கள் மனதில் வட்டமிடும். பூமியாலும் முன்னேற்றமுண்டு.

## மிதுனம்

வேண்டாத உறவுகளேத் துண்டித்தல் நன்று, வெளியிடத்துப் பயணம் வேதனே தரலாம். பொருள் முடை தென்படும். கடன் படவும் நேரும். பெரியோரைப் பகைத்துக் கொள்ளாமல் பொறுமையைப் பேணிநடக்கவும்.

## கடகம்

நம்பிக்கையின்மூலம் பணப் விரயமாகும். எதிர்பார்த்த விடயத்தில் சோர்வு தென்படும். சொந்தத் தொழில் புரிவோர் அதிக விழிப்புடன் இருக்கவும். சிலருக்கு உடல் நலமும் பாதிக்கப்படலாம்.

## சிங்கம்

இதயப் படுதாவில் இன்பக் கூத்து வசதிகள் பெருகும். வாழ்க்கையும் வளமாகும். தொழில் துறையில் புதிய வெற்றி கிடைக்கும். ஆரம்பத்தில் எதிர்த்தவர்கள் ஆதரவு கொடுப்பதற்கு முன்வருவார்கள்.

## கன்னி

உடல்நலம் சிறிது பாதிக்கப்படும். வைத்திய வழிகளில் பணம் செலவாகும். சகோதரவழியால் சஞ்சலத்திற்கு இடமுண்டு. எண்ணிய கருமத்தில் தடையேற்படும். ஓய்வு விரும்பத்தக்கது. இவ்வாரம் அமைதி வேண்டும்.

## துலாம்

மாதுரு வழிப்பெருமை கிட்டும். மனம்போல் யாவும் நடக்கும். கல்வியில் சிறப்பும் உறவினர் கொண்டாட்டமும் உண்டு. இதயத்தைத் தொடும் சம்பவங்கள் இடம் பெறும். சிலருக்குப் புதிய வாகனத்தில் முதலீடு செய்யும் சந்தர்ப்பமும் ஏற்படலாம்.

## விருச்சிகம்

சூழ்நிலேயில் நல்ல மாறுதல்கள் தென்படும். அமைதியான வாழ்வுடன் தெய்வத்தின் அருளும் கிடைக்கும். தொழில் துறையிலும் பாராட்டுச் சேரும். புத்திரர்களால் மகிழ்ச்சிக்கு இடமுண்டு.

## தனுசு

எதிர்பார்த்த விஷயத்தில் ஏமாற்றம் தென்படும். கொடுத்த வாக்கைக் காப்பாற்ற முடியாமல் திண்டாடுவீர்கள். சிலருக்கு ஆயுதபீடைக்கு இடமேற்படும். குடும்பத்தில் குறைகேட்க நேரிடும். எவ்விடயத்திலும் இவ்வாரம் பொறுமையைக் கடைப்பிடிப்பது நன்று.

## மகரம்

வாழ்க்கையில் தென்றல் வீசும். காதல் சிட்டுக்களுக்குச் சிறப்பான வாரம். கணவன் மனேவி உறவு இறுக்கமாக இருக்கும். குடும்பத்தில் குதூகலம் தென்படும். உறவினர்களின் ஆதரவும் பெற்ருேரின் ஆசியும் கிட்டும்.

## கும்பம்

எண்ணிய விஷயத்தில்தடைகள் தோன்றும். ஏமாற்றம் தாக்கும். நண்பர்களும் காலே வாரிவிடக்கூடும். நிதானம் வேண்டும். பணமுடை வேதனே தரும். மனத்தளர்ச்சிக்கு இடங்கொடதீர்.

## மீனம்

உங்கள் நடவடிக்கைகளில் தனிச்சிறப்புத் தென்படும். பெரியவர் ஒருவர் உங்களுக்குக் கைகொடுத்து உதவுவார். குடும்பம் வளம் நிறைந்ததாகக் காணப்படும். பயன் தரும் பிரயாணம் ஒன்றும் மேற்கொள்ளப்படலாம்.

திருமலை
க.வே.ரவீந்திரன்

# ஜனனியின் கணக்கு — 2

ஒன்றுமுதல் எட்டுவரை உள்ளடக்கிய எட்டு இலக்க எண்ணே ஒன்பதால் பெருக்கினேன். என்ன ஆச்சரியம்! ஒன்பது இலக்க எண்ணுடைய அந்த விடையிலும் ஒன்றுமுதல் ஒன்பதுவரை ஒன்பது இலக்கங்களும் இருக்கின்றன.

நான் ஒன்பதால் பெருக்கிய எண் என்ன தெரியுமா?

—புஷ்பஜனனி

விடை:

58132764
9
————
523194876

- புஷ்பஜனனி

# எங்கள் நாய்க்குட்டி

எங்கள் வீட்டு நாய்க் குட்டி
எங்கள் வீட்டி லோர் அங்கம்
எங்கள் வீட்டைக் நிதம் காக்கும்
இரவு நேரக் காவல் அதுவேதான்

★

மங்க லான பழுப்பு நிறம்
மற்றும் வெள்ளே கலந்த நிறம்
''தங்கன்'' என்றே யழைப் போமே
தகுதி யான பெயரி ட்டோம்

★

அப்பா வாங்கி வந்திட் டார்
அம்மா ஊட்டி வளர்த்திடு வாள்
எப்போ தும்மே சேர்ந்திருக்கும்
எவரும் நெருங்க முடி யாது

★

பள்ளி செல்லும் வேளே யிலும்
பின் தொடர்ந்து துணேக்கு வரும்
துள்ளிப் பாய்ந்து சுற்றி ஓடும்
தூரத்தி நின்று குரைத் திடுமே

★

அடுத்த வீட்டு 'ஜிம்மி' தான்
அஞ்சி நடுங்குந் தங்க னுக்கு
வெடுக் கெனவே பாயும் கை
விரல சைத்தால் வாலா ட்டும்

★

எனது நண்பன் நாய்க் குட்டி
எனது துணேயும் நாய்க் குட்டி
என்னேக் காக்க ஆவி யையும்
இழக்கத் துணியு மறி வீரே!

— மணிமன்றன்

# இஸ்லாத்தின் அடிப்படை அம்சங்கள்: ஈமான்-விசுவாசம்

இஸ்லாம் விசுவாசத்தையும், செயற்பாடுகளையும் மனித வாழ்க்கையை நெறிப்படுத்துவதற்கு முன் வைத்துள்ளது. நம்பிக்கை ஆறு அம்சங்களை உள்ளடக்கியதாகவும், செயற்பாடுகள் ஐந்து கிரியைகளைக் கொண்டதாகவும் உள்ளன. இஸ்லாத்தைப் பின்பற்றும் ஒருவர் ஆரம்பத்தில் ''ஈமான்'' என்னும்விசுவாசத்தில் உறுதிபெறல் வேண்டும்.

ஏக இறைவனை அல்லாஹ்வையும், அல்லாஹ்வின் படைப்புக்களில் ஒருவகையினரான மலக்குகள் என அழைக்கப்படும் அமரர்களையும், அல்லாஹ்வினால் உலகிற்கு அருளப்பட்ட வேதங்களையும், அவ்வேதங்களைப் போதனை செய்த நபிமார்கள் என்னும் தீர்க்கதரிசிகளையும், மறுமை நாள் என அழைக்கப்படும், ஆத்மாக்கள் அனைத்தும் ஒன்று கூட்டப்படும் நாளையும், நன்மை, தீமைகள் இறைவனின் சக்திக்குட்பட்டவை என்பனவான ஆறு அம்சங்களையும் ஒரு முஸ்லிம் பூரணமாக சந்தேகமின்றி விசுவாசம் கொள்ளல்வேண்டும். அவ்வாறு விசுவாசம் கொள்பவர்கள் ''முஃமின்கள்'' என அழைக்கப்படுகிறார்கள்.

இஸ்லாமியக் கிரியைகள் ஐந்து வகையாகச் செயற்படுத்தப்படுகின்றன. ''கலிமா'' அவற்றில் முதலாவதாகும். கலிமா என்பது தமிழில் ''சொல்'' என்ற பொருள்படும். இறைவன் ஒருவனை விசுவாசிப்பதுடன் நாவாலும் மொழிதலையே அது குறிக்கின்றது. ''லாயிலாக இல்லல்லாஹு'' வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை. ''முஹம்மதுர் ரஸூலுல்லாஹ்'' முகம்மது நபி [ஸல்] அவர்கள் அல்லாஹ்வின் திருத்தூதர் என மொழிதலாகும். கிரியைகளில் இரண்டாவது இடம்பெறுவது, ''தொழுகை'' ஆகும். ஒரு நாளைக்கு ஐவேளை [அதிகாலை, மதியம், மாலை, இரவின் ஆரம்பம், இரவின் முற்பகுதி] கூட்டாகவோ, தனிமையாகவோ தொழுகையை நிறைவேற்றுவதாகும். கூட்டுத் தொழுகை தனித்துத் தொழுவதைவிட இருபத்தேழு மடங்கு நன்மையுடையது என்பது நபி [ஸல்] அவர்களின் பொன்மொழியாகும். மூன்றாவது கிரியை ''ஸகாத்'' என அழைக்கப்படும் பொருளில் தூய்மையை ஏற்படுத்துவதற்கு, குறிப்பிட்ட வர்க்கத்தினருக்குக் கட்டாய ஏழை வரி வழங்குதலாகும். நூற்றுக்கு இரண்டரை வீதம் இவ்வரி வழங்கப்படல்வேண்டும்.

கிரியைகளில் நான்காவது அம்சம், வருடத்தில் குறிப்பிட்ட ஒருமாதத்தில் நோன்பு நோற்றலாகும். காலை முதல் சூரியன் மறையும் வரை எப்பொருளையும் தன் உடலினுள் செலுத்தாமல் விரதம் அனுஷ்டிப்பதாகும். ஐந்தாவது கிரியை வசதியுள்ளவர்கள், பிரயாணம்செய்யச் சக்தியுள்ளவர்கள் வாழ்க்கையில் ஒரு முறையாவது புனித ''ஹஜ்'' என்னும் புனித யாத்திரை மேற்கொள்ளும் கடமையை நிறைவேற்றுவதாகும். விசுவாசத்தை உறுதியுடன் ஏற்று இஸ்லாத்தின் ஐந்து கிரியைகளையும் ஒழுங்காக நிறைவேற்றுபவர்கள் முஸ்லிம்கள் என அழைக்கப்படுகின்றனர்.

விசுவாசத்தின் [ஈமான்]ஆறு அம்சங்களையும் சுருக்கமாக நாம் தருகிறோம் இறைவனை அல்லாஹ்வை ஏகநாயகனாக விசுவாசிப்பது ஒரு முஸ்லிமுக்கு முக்கிய கடமையாகும். அல்லாஹ்வைப் பற்றிய விளக்கங்களும், வர்ணனைகளும் அல்குர்ஆனில் இரண்டாயிரத்து அறுநூற்றுத் தொண்ணூற்று எட்டு இடங்களில் குறிப்பிடப்படுகின்றன. ''மனிதர்களே! நீங்கள் உங்களையும், உங்களுக்கு முன்னிருந்தோர்களையும் படைத்த உங்கள் இறைவனையே வணங்குங்கள். [அதனால்] நீங்கள் பரிசுத்தவான்களாகலாம். [அல்குர்ஆன் அத்: 2, வச: 21] ''தூய வழிபாடு அல்லாஹ்வுக்கே சொந்தமானது என்பதை அறிந்து கொள்வீராக! எவர்கள் [ஏக இறைவனை] அல்லாஹ் அல்லாதவைகளை [தங்களுக்கு]ப் பாதுகாவலாக எடுத்துக் கொண்டிருக்கிறார்களோ அவர்கள், ''அத்தெய்வங்கள் எங்களை அல்லாஹ்வுக்கு மிக்க சமீபமாக்கிவைக்கும் என்பதற்காகவேயன்றி இவைகளை நாம் வணங்கவில்லை'' [என்று கூறுகின்றனர்] அவர்கள் வேறுபட்டுத் [தர்க்கித்துக்] கொண்டிருக்கும் இவ்விஷயத்தைப் பற்றி நிச்சயமாக அல்லாஹ் [மறுமையில்] அவர்களுக்கிடையில் தீர்ப்பளிப்பான். [உண்மையை] மறுத்துப் பொய் கூறுபவர்களை நிச்சயமாக அல்லாஹ் நேரானவழியில் செலுத்துவதில்லை''. [அல்குர்ஆன் அத்: 39, வச: 3] [அவனை] நீங்கள் நிராகரித்துவிட்ட போதிலும் [அவனுக்கு நஷ்டமில்லை] ஏனெனில் நிச்சயமாக அல்லாஹ் உங்களுடைய தேவையற்றவனாக இருக்கின்றான். எனினும், தன் அடியார்கள் [தன்னை] நிராகரிப்பதை விரும்புவதேயில்லை. நீங்கள் [அவனுக்கு] நன்றி செலுத்துவீர்களாயின் உங்களைப்பற்றி அவன் திருப்தியடைவான். ஒருவனின் [பாபச்] சுமையை மற்றொருவன் சுமக்க முடியாது. இனி நீங்கள் செல்லவேண்டியது உங்கள் இறைவனிடம் தான். அச்சமயம் நீங்கள் செய்து கொண்டிருந்தவைகளை அவன் உங்களுக்கு அறிவிப்பான். இருதயங்களில் உள்ளவைகளையும் நிச்சயமாக அவன் நன்கறிகின்றான். [அத்: 39, வச: 7]

''உங்களில் எவர் செயல்களில் மிக்க அழகானவர் என்பதனைச் சோதிக்கும் பொருட்டே அவன் [அல்லாஹ்] வாழ்வையும், மரணத்தையும் படைத்திருக்கின்றான். அவன் [யாரையும்] மிகைத்தோன். மிக்க மன்னிப்புடையோன்- [அத்: 67, வச: 2] ''அல்லாஹ்வே விசுவாசிகளின் பாதுகாவலன். அவன் அவர்களை இருள்களிலிருந்து [வெளியேற்றி] பேரொளியின் பால் செலுத்துகின்றான். ஆனால் நிராகரிப்பவர்களுக்கோ அவர்களின் பாதுகாவலர்கள் ஷைத்தான்கள்தாம் [சாத்தான்கள்]. அவைகள் அவர்களைப் பேரொளியிலிருந்து [நீக்கி] இருள்களின்பால் செலுத்துகின்றன. [அன்றி] அவர்கள் நரகவாசிகள்; [மேலும்] அவர்கள் அதில் எந்நாளும் தங்கி விடுவார்கள். [அத்:2, வச:257] அல்லாஹ்வே வானங்களினதும், பூமியினதும் ஒளியாக இருக்கின்றான் என்பன போன்ற ஏகத்துவத்தை வலியுறுத்தும் அதிகமான வசனங்கள் அல்குர்ஆனில் குறிப்பிடப்படுகின்றன.

இஸ்லாத்தை ஏற்றுக்கொள்ளும் ஒரு முஸ்லிம் இறைவனுக்கு இணையாக எதையும் கற்டனை செய்யமுடியாது. ஏனெனில் ''இணைவைப்பது பெரும் பாவம்'' என அல்குர்ஆன் எச்சரித்துள்ளது. ஏகத்துவத்தை ஏற்கும் ஒருவர் இறைவனுக்குத் துணையாகவோ, சந்ததியாகவோ எதையும் ஒப்பிடவும் முடியாது. விசுவாசத்தின் பிரதான அம்சமும் இதுவேயாகும். ''இறைவனிடமிருந்து வந்த நாம் மீண்டும் அவனிடமே செல்லவேண்டும்'' என்பதை ஞாபகமூட்டுமாறும் அல்குர்ஆன் பணிக்கின்றது.

ஏகத்துவத்தை உறுதியாக ஏற்று, இறைவனின் அடியார்களாக நாம் செயற்படும் போது எம்மிடையே ஐக்கியம் வலுப்படுத்தப்படுகின்றது.

இறைவன் முன் அனைவரும் சமமே என்ற நிலை உருவாகின்றது. பிரிவினைக்கு வழியில்லை. மரணத்தின் பின்னுள்ள வாழ்க்கைபற்றிச் சிந்திப்பதனால் மனிதனின் உள்ளம் அச்சம் அடைகின்றது. பாபக் கறைகளிலிருந்து மீள்வதற்கு வாய்ப்புஉருவாகின்றது. ஆத்ம பரிசுத்தம் ஏற்பட்டு, உள்ளத்தில் அமைதியும், ஏனைய மக்கள் மீது அருள்கொண்ட பார்வையும் நிலைபெற வழிபிறக்கின்றது. குறிப்பாகக் கூறுவதாயின் மனிதகுல ஐக்கியத்திற்கு ஏகத்துவம் வழியமைக்கின்றது என்பதை நடைமுறை அனுபவத்தில் இருந்து உறுதியாக நாம் குறிப்பிடலாம்.

அல்ஹாஜ் மௌலவி
கே. எம். எச். காலிதீன்

---

## நத்தார்-விசனம்

எங்கள் இனத்தவரின்
ஈரலிலே கேக்கடிப்போர்
தங்கள் இனத்தவரா ஏசு
நாதா?
உங்கள் பிறப்பால்
உலகெங்கும்
கொண்டாட்டம்.
எங்களுக்கேன்
திண்டாட்டம் ஏசுநாதா?

★

ஆயர் பாடியைச்
சொர்க்கம் ஆக்கிய
மாயக் குழந்தையே!
எமது மனைகள்
மாட்டுக் கொட்டில்கள்
ஆக மாறுதே.
மாட்டுக் கொட்டிலை
மனைகள் ஆக்கிடும்
தேவ ஆட்டுக் குட்டியாய்த்
திரும்பவும் சுதந்திர
தேவனே' வருக

★

உன்னைச் சிலுவையில்
அறைந்து கொன்றவர்
நத்தார்ப் பூசை
காண என்னுடன்
அத்தார் வருவதற்கு
அஞ்சினர் ஏனெனில்
கெரில்லாப் பயிற்சி
எடுத்தவர் தான், எம்
தெருக்களிற் போகலாம்
தேவகுமாரா.

★

ஒரு நாள் இந்த
உலகம் முடியும்
அந்நாள்,
அல்லைப்பிட்டி
மட்டுமா? அந்த
அமெரிக்காவுந்
தானே அழியும்!
உலகம் ஒரு நாள்
ஒழியும் பொழுது
பொதுத் தீர்வைக்கு
நானும் போவேன்
உலக பிதா அங்கு
ஓங்கி நிற்பார்
அலகில் சோதியன்
அம்பலத்தாங்கண்
அடியேன் துணிவுடன்
நிற்கும் பொழுது
அமெரிக்காவின்
ஆகப் பெரும் ஆள்
அஞ்சி அஞ்சி நிற்பதை
விஞ்சருடனே
விடுப்பும் பார்ப்பேன்!

'சத்திய வசனம்'

---

# இலக்கியச்சந்தி

இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் 'ஜாம் ஜாம்' என்று செய்தி ஏடொன்றை வெளியிட்டுள்ளது. இ.மு.எ.ச. செய்திக்கதிர் என்பது இதன் பெயர். இ.மு.எ.ச. பல ஆண்டு இடைவெளிக்குப் பின் புனரமைக்சப்பட்டுச் செயற்படத்தொடங்கி ஆரம்ப கட்டத்திலேயே செய்திக்கதிர் நல்ல அமைப்புடன் வெளியிட்டுள்ளமை பாரட்டிற்குரியது. இப்பணி தடங்கலின்றித் தொடருமென்றே நம்பலாம்.

யாழ்.இலக்கியவட்டம்வெளியிட்ட இலக்கியச்செய்திமடல் இரண்டு இதழ்களுடன் தொடர்ந்து வெளிவராது போயிற்று. நாட்டின் அமைதியற்ற சூழ்நிலை இதற்கு முக்கிய காரணியாக இருப்பதாக வட்டத்தினர் தெரிவிக்கின்றனர். ஆனல் இ.மு.எ.ச. செய்திக்கதிர் கொழும்பில் இருந்து வெளிவருவதனால் தொடர்ந்தும் வெளிவரும் என எதிர்பார்க்கலாம். முதல் இதழில் தரப்பட்டுள்ள சில செய்திகள் வருமாறு:

### புதுமை இலக்கியம்

''இ. மு. எ. ச. செய்திக் கதிர் மாதாந்தம் வெளிவருவதுடன் புதுமை இலக்கிய வெளியீட்டையும் ஆரம்பத்தில் மூன்றுமாதங்களுக்கொரு தடவை பிரசுரிக்க ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. மாதாந்தக்கருத்தரங்கு உரைகளையும், மற்றும் கலை-இலக்கியம் பற்றிய ஆய்வுக்கட்டுரைகளையும் பிற அம்சங்களையும் 'புதுமை இலக்கியம்' தாங்கி வெளிவரும்.

''முற்போக்கு இலக்கியம் புதிய பரிமாணங்களைப் பெற்று வருவதாலும், இலக்கிய சமுதாயப் பெறுமானங்கள், நிலைப்பாடுகள், கருதுகோள்கள் பற்றிப் பல்வேறு சிந்தனைப் போக்குகளும், அணுகுமுறைகளும் தோற்றம் பெற்றுவருவதாலும் இவற்றை இயக்கவியல், அறிவியல், சமுதாயவியல் ரீதியில் ஒருங்கிணைத்து அமைதிகாணும் தேவைப்பாட்டை நிறைவு செய்ய 'புதுமை இலக்கியம்' தொடர்ச்சியாக வெளியிடப்படுவது அவசியம் என உணரப்படுகின்றது.

### சகோதர அமைப்புக்கள்

''அமைதியற்ற சூழ்நிலை நிலவிய போதிலும் சகோதர இலக்கிய அமைப்புக்கள் நாட்டில் ஆங்காங்கே தமது பணிகளை ஆக்கபூர்வமானமுறையில் மேற்கொண்டு வருவது ஆரோக்கியத்திற்கான அறிகுறியாகும்.

### யாழ். இலக்கிய வட்டம்

''யாழ். இலக்கிய வட்டம், நீண்டகாலத்தின் பின்னர் உத்வேகத்துடன் செயற்படத் தொடங்கியுள்ளது. இந்த அமைப்பின் வரலாறு ஈழத்து இலக்கிய வளர்ச்சியை நன்கு அறிந்தவர்களுக்குத் தெரியும்.

''யாழ். இலக்கிய வட்டம் சமீபகாலத்தில் இரண்டு செய்திமடல்களை வெளியிட்டதோடு, சில நூல்களையும் பதிப்பித்தள்ளது. அத்துடன் 'இலங்கைஇலக்கியப்பேரவை' என்ற துணைஅமைப்பையும் உருவாக்கி 1984ம் ஆண்டு வரையில் இலங்கையில் வெளியான தமிழ் நூல்களை மதிப்பாய்வு செய்து சான்றுரைக்கும் அறிஞர்களைக் கொண்டு பரிசுக்கெனத் தெரிவு செய்துள்ளது.

### தேசிய கலை இலக்கியப் பேரவை

''யாழ். நகரில் இயங்கும் தேசிய கலை இலக்கியப் பேரவை'' 'பாரதி பன்முகப் பார்வை' என்ற நூலைச் சமீபத்தில் வெளியிட்டது. பாரதி நூற்றாண்டு கால கட்டத்தில் நடத்திய ஆய்வரங்குகளில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுகளின் தொகுப்பாக இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது.

### வலம்புரி கவிதா வட்டம் (வகவம்)

''கொழும்பில் வசிக்கும் துடிப்புள்ள இளம் கவிஞர்கள் பலரைக் கொண்டு இயங்கும் வலம்புரி கவிதா வட்டம் தொடர்ந்து ஒவ்வொரு மாதமும் நோன்புத் தினத்தில் கவியரங்குகளை நடத்தி வருகின்றது. விரைவில் அமைப்பின் உறுப்பினர் திரு. எம். பாலகிருஷ்ணனின் ''நிசப்தமாய்த் தூங்குவதேன்'' என்ற புதுக் கவிதை நூலின் வெளியீட்டு விழாவினைக் கொழும்பில் நடத்தவிருக்கிறது.

### தமிழ்க் கதைஞர் வட்டம் (தகவம்)

''தமிழ்நாட்டு இலக்கியச் சிந்தனை என்ற அமைப்பினைப் போன்று இலங்கையின் தமிழ்ச் சிறுகதைகளை மதிப்பீடுசெய்து தகுதியான தரமானவற்றிற்குப் பரிசும் வழங்கிவரும் தமிழ்க் கதைஞர் வட்டம் அமைதியான முறையில் தனது பணியைத் தொடர்கிறது.

முன்போன்று கருத்தரங்குகளையோ, இலக்கியக் கூட்டங்களையோ தகவத்தினல் நடத்தமுடியாது போனலும் காலாண்டு அடிப்படையில் இலங்கையில் வெளியாகும் தமிழ்ச் சிறுகதைகளைத் தெரிவுசெய்யும் பணியிலிருந்து ஒதுங்கிவிடவில்லை.

தகவம் இதுவரை காலமும் மதிப்பீட்டின் மூலம் தெரிவு செய்த சிறுகதைகளைத் தொகுத்து நூலுருவாக்கினல் இலங்கைத் தமிழ்ச் சிறுகதை வளர்ச்சியினைத் தரநிர்ணயம் செய்ய முடியுமென இலக்கிய ரசிகர்கள் எதிர்பார்க்கின்றனர்.''

★

மொத்தத்தில் நல்ல முயற்சி. இ. மு. எ. ச. செய்திக் கதிர் மூலம் இலக்கியச் சுவைஞர்கள் பல்வேறு இலக்கிய அமைப்புக்கள்பற்றியும், செயற்பாடுகள்பற்றியும் அறிந்துகொள்ள வாய்ப்பளித்த இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கச் செயற்திட்ட உறுப்பினர்கள் பாராட்டுக்குரியவர்கள். அவர்கள் பணி தொடர வாழ்த்துவோம்.

இவை செய்திக்கதிர் தரும் தகவல்கள்.

யாழ்வாணன்

[12ம் பக்கம் பார்க்க]

## திருவருகைக்கால 5வது ஞாயிறு



# திருக்குடும்பம்

நத்தார் ஒரு கொடுக்கும் விழா. இறைவன் உலகுக்குத் தன் மகனைக் கொடுத்த விழா. கிறிஸ்துவின் வாழ்க்கையைச் சுருக்கமாக, பொருளோடு கூற வேண்டுமானால், 'அவர் அயலவருக்காகவே வாழ்ந்தவர்' என்றுதான் கூறவேண்டும். அவர் தன்னை முழுமையாகக் கொடுத்தார்.

''ஒருவன் தன் நண்பர்களுக்காகத் தன்னை முழுமையாகக் கொடுப்பதைவிட மேலான அன்பு வேறில்லை'' என்று அவர் அன்பிற்கு முழுமையாகப் பொருள் கொடுத்தார். இது தான் நத்தார் விழா.

இந்தக் கொடுத்தல் - அதாவது ஒருவரை ஒருவருக்குக் கொடுத்தல் ஆழமாக நடைபெறுவது முதலில் குடும்ப வாழ்வில். கணவன் தன்னை முழுமையாக மனைவிக்கும், மனைவி தன்னை முழுமையாகக் கணவனுக்கும் கொடுப்பது தான் திருமணம்.

குடும்பவாழ்வு வெறும் ஒப்பந்தமல்ல. வெறும் சட்டரீதியான அமைப்புமல்ல; சமூக அமைப்புமல்ல. ஆனால் அன்பில் ஒருவரை ஒருவர் அதாவது கணவன், மனைவி ஏற்றுக்கொள்ளும் ஓர் கூட்டுச் சேர்க்கை.

அன்பில் ஒன்றுசேர வேண்டிய இருவரை இன்றைய சமுதாயம் சந்தையில் விற்பதில்லையா? ஏலம் போட்டுக் கேவலமாக்கலாமா? சீதனம் கொடுப்போரும் வாங்குவோரும் மாப்பிள்ளையை மாடாக்கி விற்போரும் வாங்குவோரும் சிந்திப்பார்களா?

குடும்ப வாழ்வில் தாலியல்ல, கணையாழியல்ல, கூறையல்ல முக்கியம்; திருமணம் செய்துகொள்ளப்போகும் ஆள் தான் முக்கியம். கணவனும் மனைவியும்தான் வெளியடையாளங்கள். அவர்கள் ஒருவரை ஒருவர் ஏற்றுக்கொள்ளும் போது, அன்பில் ஏற்றுக்கொள்ளும்போது குடும்பத்தில் அருள் பிறக்கிறது. அங்கு கிறிஸ்து பிறக்கின்றார். திருமணச் சேர்க்கையில் பிறக்கும் இவ்வன்பு வளரவேண்டும்-நித்தமும் வளரவேண்டும்.

குடும்பத் தியாகங்களினால், கொடுத்தல்களினால் இந்த அன்பு மேலும்மேலும் வளர்கின்றது. இன்பத்திலும் துன்பத்திலும், நோயிலும் சுகத்திலும், நிறையிலும் குறையிலும் ஒருவரை ஒருவர் ஏற்றுக்கொள்வதினால் இந்தத் திருமண அன்பு மேலும் மேலும் ஆழமாகின்றது; அருள் சுரக்கின்றது.

ஆனால் இன்று குடும்ப வாழ்வில் வெளிக் கவர்ச்சிகளுக்கும், பணத்திற்கும், பதவிக்கும் போலிக் கௌரவங்களுக்கும், சுயநலங்களுக்கும், சுய இச்சைகளுக்கும் மண ஒப்பந்தங்கள் செய்யப்படும்போது குடும்பத்தில் அன்புக்கு இடமேது? மதிப்பேது?

அன்பும் அருளும் அமையக் குடும்ப வாழ்வை இலட்சியக் குடும்பமாக வாழ்ந்து காட்டியது திருக்குடும்பம். அக்குடும்பத்தில் சூசை, மரியாள், யேசு மூவரும் தங்களை முழுமையாக ஒருவருக்கொருவர் கொடுத்தனர். ஆனால் அக்குடும்பத்தில் அன்பு இருந்தது; அமைதி இருந்தது; ஒற்றுமை இருந்தது. எங்கள் குடும்ப வாழ்வும் அந்த அன்பில் மலரட்டும்; ஒருவரை ஒருவர் ஏற்பதில் மலரட்டும்.

**வண. எஸ். டேமியன் அ. ம. தி.**

# அலைப்பாற் கடலும் முலைப்பாற் கடலும்

தமிழில் ஒன்று, பத்து, நூறு......இலட்சம் பத்திலட்சம், கோடி.. என்றும் ஆங்கிலத்தில் மில்லியன், பில்லியன், ட்ரில்லியன், எனவும், எண்ணிக்கொண்டே போனால் மேலே எண்ணமுடியாமல் அமைகின்ற இடம் அனந்தம் எனப்படும். அனந்தம் - கணித சங்கேத மற்றது. இதனை ஆங்கிலத்தில் இன்ஃபினிட்டி (Infinity) என்று கூறுவர். இராமாயணத்திலும் பாரதத்திலும் வெள்ளம் அக்குரோணி என்றபதம் இடம் பெறுகிறது. சேனையின் அளவை வரையறை செய்ய சங்கம், சலஞ்சலமென்ற சொற்களும் இதிகாசங்களில் பயின்று வருவதைப் படிப்போர் அவதானிக்கலாம், 'அருள் ஞானம் பெற்றோர்க்கு அனந்தம் விழியாமெனறறி' என ஔவையும் 'ஊரனந்தம் பேரனந்தம்' எனத்தாயுமானாரும் பாடியுள்ளனர். இஃதே போன்று எண்ணியபிறவியின் வரம்பு கடந்த நிலையை வெளிப்படுத்தப் பல உத்திகளை கையாண்டனர் கலைஞானிகள். அவை வருமாறு;

'எழுகடல் மணலை அளவிடினதிகம் எமதிடர்பிறவி அவதாரம்'

'ஒரு தாய் பல தாய் பல கோடிய தாய் உடனே அவமாயுழலாதே'

— அருணகிரியார்

'நான் எடுத்த ஜனனமோ கணக்கெழுதித் தொலையாது'

— கோபாலகிருஷ்ண பாரதியார்.

'அன்னையெத்தனை எத்தனையோ, எண்ணரிய தாயாரும் இளைப்பாற'

— பட்டினத்தார்.

'தொல்லையெம்பிறவி எண்ணில் தொழுகடல் மணலுமாற்று'

— திருத்தக்கதேவர்.

திருவருட் செல்வர்கள் கண்ட பிறவிகளின், வரம்பிகந்த பான்மையை வேறொரு கோணத்தில் நின்றுபாடுகிறார் திவ்வியகவி பிள்ளைப் பெருமாளையங்கார். இவரோ அரங்கனையே பாடிப் பரவசமான பக்தர். ஸ்ரீரங்கநாதா, நீயோ வசிப்பது பாற்கடலிலே. அப்பாலாழியின் அலைகள், உனது திவ்விய பாதபங்கயங்ளில் வெண்மையான சிறந்த முத்துக்களைச் சுமந்துவந்து முட்டிமோதுகின்றன. ஆதிமுதல் இத்தேதி வரை பல பிறப்புகளிலும் பல தாய்மார்கள் ஏந்திக் கொடுத்த முலைப்பாலினது வெள்ளம், உன் பாற் கடலுக்கு ஒப்பானதென்று அளவானதென்று சொல்லப்போனால் அதுவும் ஒப்பாக மாட்டாது பகவானே. ஆம், ஒப்பாகவேமாட்டாது. ஏனெனின் என்னைப்பெற்ற தாயர் தந்த முலைப்பாற்கடலோ, தங்கள் அலைப்பாற் கடலையும் விஞ்சிவிட்டது. எனவே பொன்னரங்கப் புயல் வண்ணனே, துளசியந்தாமனே, சிற்றின்பக் கடலிலே மூழ்கி மூச்சுத்தடுமாறும் எனது தலையின்மீது நினது திருவடிகளை வைத்தருள்வாய். அப்போதான் மறுபடியும் கருவடையும் குழியிலிருந்து விடுபட்டு நித்த முத்தனாய் வாழலாம். முன்னும் பிறந்த பிறப்போ முடிவில்லை, இன்னம் பிறப்பிக்க எண்ணுதேயென்று, திருமாலை வேண்டுகிறது இப்பாசுரம்.

''வலைப்பால் விடம்பிணைக் கண்ணியர் போகத்தில்
மாலுறும் என்
தலைப் பால் கழல் அருள் -
தார் அரங்கா! பல
தாயர் தந்த
முலைப்பாற்கடல், உன்திருக்
கழல் ஆணி வெண்
முத்து எறியும்
அலைப்பாற் கடலின் அளவு
ஆம் எனின், மற்று
அதுவும் அன்றே.''

-திருவரங்கத்துமாலை
[அஷ்டப்பிரபந்தம்]

**-முருகவே. பரமநாதன்**

# இலக்கியச் சந்தி

(11ம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் மலையகத்து எழுத்து இயக்கங்கள்பற்றிய தகவல்கள் கதிரில் நிறைய இடம்பெற்றுள்ளன.

மலைநாட்டு எழுத்தாளர் மன்றம், மலையகக்கலை, இலக்கியப் பேரவை இவற்றின் இலக்கியச் சேவைகள் கதிரில் விரிவாகத் தரப்பட்டுள்ளன. மலையக எழுத்தாளர் மன்றத்தின் சார்பில் 'குறிஞ்சி மலர்' என்ற பெயரில் செய்தி மடலும் வெளிவந்துள்ளதாம்.

தமிழ்க் கதைஞர் வட்டம் [தகவம்] அமைப்பினைப் பழைய நிலைக்குச் செயற்பட வைப்பதற்கான வழிவகைகள் பற்றி அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற பொதுச்சபைக் கூட்டத்தில் ஆராயப்பட்டன. அத்துடன் நடப்பாண்டிற்கான தலைவராக திரு. வ. இராசையாவும், பொதுச் செயலாளராக பொ. இராஜதுரையும், பொருளாளராக ம. குலமணியும் தெரிவு செய்யப்பட்டனர்.

புத்தாண்டில் தகவம் புதுப் பொலிவுடன் செயலாற்ற வேண்டுமென இலக்கிய ரசிகர்கள் எதிர்பார்க்கின்றனர்.

★

கலை இலக்கிய விமர்சகரும், கவிஞருமான பேராசிரியர் சி. சிவசேகரம் அவர்களின் அன்னையார் கடந்த மாதம் லண்டன் மாநகரில் இயற்கை எய்தினார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் அங்கேயே இடம்பெற்றன.

★

மறுமலர்ச்சி எழுத்தாளரும், பிரபல நூல் வெளியீட்டாளருமான திரு. ச. வரதராசன் [வரதர்] அடிக்கடி புதிய இலக்கிய முயற்சிகளை ஆரம்பித்துப் பரிசோதனைக் களத்தில் இறங்குபவர். 'வரதர் பலகுறிப்பு', 'புதினம்', 'வெள்ளி' போன்ற பல வெளியீடுகளை வெளியிட்ட அவர், தற்போது சிறு நூல்களை இலக்கிய உலகிற்கு அளிக்க முன்வந்துள்ளார். திரு. கா. யோகநாதன் எழுதிய 'திருமலைக் கொடுமைகள்' நூலை வெளியிட்ட கையோடு கவிஞர் காரை. செ. சுந்தரம்பிள்ளை எழுதியுள்ள 'ஒரு போராளி உருவாகின்றான்' என்ற காவிய நூலையும் வெளியிடவுள்ளார்.

### முதற்பரிசு பெற்ற யாழ்ப்பாணக் கவிஞர்

அண்மையில் மதுரை கண்ணதாசன் மன்றம் நடத்திய கவியரங்கப் போட்டியில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சுதாகர் சண்முகநாதன் முதற்பரிசினைப் பெற்றுக்கொண்டார். மேற்படி கவியரங்கத்திற்கு மதுரை தமிழ்ச் சங்கத்தின் செந்தமிழ்க் கல்லூரிப் பேராசிரியர் மு. உலகநாதன் நடுவராகக் கடமையாற்றினார். செல்வன் சுதாகர் யாழ். பல்கலைக்கழக மாணவராகவிருந்து தற்போது சென்னைப் பல்கலைக்கழகத்தில் படித்துக்கொண்டிருக்கிறார். இங்கு 'அன்பு நெஞ்சன்' என்ற புனை பெயரில் கவிதை, கட்டுரை, சிறுகதைகளை எழுதியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

★

யாழ்ப்பாணத்திலிருந்து 'அமிர்தகங்கை' என்ற இலக்கியத் திங்கள் இதழ் மலரவுள்ளது. இம்மாசிகை தமிழர் திருநாளாம் தைப்பொங்கல் நன்னாளில் வெளிவரும். இவ்விதழின் கௌரவ ஆசிரியராக நாடறிந்த எழுத்தாளர் செம்பியன் செல்வன் பணியாற்றுகிறார்.

பத்திரிகைத்துறையில் மட்டுமல்லாது பிரசுரத் துறையின் நுணுக்கங்களையும் நன்கறிந்தவர் செம்பியன். அவரது கைவண்ணத்தில் உருவாகும் 'அமிர்த கங்கை' இலக்கியச் சுவைஞர்களுக்கு நல்விருந்தாக அமையும் என்பதில் ஐயமில்லை.

★

தேசிய கலை இலக்கியப் பேரவையினரால் வெளியிடப்படும் 'தாயகம்' பதின்மூன்றுவது இதழ் வெளிவந்துள்ளது. இவ்விதழில் க. கலாசபதி, சொக்கன், முருகையன், சி. சிவசேகரம் மற்றும் பலரது ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளன.

## பேரழிவு

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த இரு அரசியல்சம்பவங்களுடன் அமெரிக்க அதிபர் றீகன் சோவியத் தலைவர் கொர்பச்சேவ் ஆகியோரின் சந்திப்பு, இந்தியாவில் பஞ்சாப்-அஸாம் பிரச்னைகளுக்குப் பிரதமர் ராஜீவ் காந்தி ஏற்படுத்திய தீர்வு, தென்னாபிரிக்காவில் என்றுமில்லாதவாறு அதிகரித்துள்ள இன ஒடுக்கல் கலவரம் என்பன குறிப்பிடத்தக்க அம்சங்களாகும்.

இவற்றுடன் இஸ்ரேல் தனது அடாவடித்தனங்களில் ஒன்றாக இரு நாடுகளைக் கடந்து சென்று டுனீஸியாவில் குண்டுவீசி அப்பாவி மக்களான 60 பேரைக் கொன்றிருந்ததும் இந்த ஆண்டின் நடுப் பகுதியிலேயே.

இவ்வாறு அழிவுகளும், அவலங்களும் நிறைந்த 'இந்த 85ம் ஆண்டு' வழமைபோன்றே யேசு கிறிஸ்து உலகில் உதித்த கிறிஸ்மஸ் பண்டிகை தரும் குதூகலத்துடன் விடைபெறுகின்றது.

மீண்டும் பழையபல்லவி என்று புதிய ஆண்டு [86] மலராமல் மனித குலத்தை உய்விக்கும் ஒன்றாக அது விளங்க வேண்டும்.

## காக்கை கற்பிக்கும் பாடம்

காலைமலர்ந்ததும் காக்கைகள் கூட்டமாய்க்
களிப்பில் கரைகின்றன
சோலைநிழல்களில் சூழ்ந்து கொண்டாடித்தம்
சொந்தம் பகிர்ன்றன

கூட்டமாய்க் கூடிக் குலவித் திரிந்துமே
குசலம் அறிகின்றன.
ஒட்டமாய்ஓடி உலகை வலம்வந்து
உவகை புரிகின்றன.

உண்டிபெறுதற்கு உயர்ந்த உழைப்பினை
உன்னிய நிற்கின்றன
அண்டியேவந்திடும் அன்பர் அனைவர்க்கும்
அமுது படைக்கின்றன.

பகுத்துண்டுபல்லுயிர் ஓம்பிடும் காக்கையின்
பாங்குறு பண்பதனை
வகுத்திந்தமானிடர் வையத்து வாழ்வாங்கு
வாழ்ந்திடல் வேண்டுமன்றோ?

**--தா. தேவமதுரம்**

## கப்பல்

[6ம் பக்கத் தொடர்ச்சி]

களான உள்நாட்டவர்களின் மனங்களைத் திருடிக்கொள்வதில் அவர்களின் மொழி தெரியாமலிருந்தது ஒருகுறையாகவிருக்கவில்லை.

அவர்கள் கொச்சையாக இந்துஸ்தானி அல்லது ஆங்கிலம் பேசினார்கள். எனவே எமது பணிகளை நாம் இலகுவாகத் தொடர்ந்தோம். ஆனால் தமிழையும், தெலுங்கையும் படித்து அவர்களின் அன்பைப்பெற நான் விரும்பினேன். தமிழில் ஓரளவு முன்னேற முடிந்தது ஆனால் தெலுங்கில் அரிச்சுவடிக்குமேல் போகமுடியவில்லை''

[அண்ணல் காந்தியின் சுய சரிதையிலிருந்து] (பெ)

## மட்டுநகர்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டது. எஸ். சிறிதரன் (மாணவர்), கே. ரவிராஜன் (பதில் தபாலதிபர்), எஸ். வசந்தகுமார் (அகதி). எஸ். கனகராஜன் (வேலை இல்லை), பி வசீகரன் (வேலை இல்லை), என்.செல்வராஜன் (விவசாயி) பி.மனோஜ்குமார் (மாணவர்), எஸ். துஷார் (மாணவர்), கே. றொபேர்ட் [விபரம் தெரியவில்லை] ஆகியோரே கண்ணிவெடிச்சம்பவத்தை அடுத்துக் கொல்லப்பட்டனர்.

இவர்களில் 6 பேருக்கு பின்புறத்திலும், இருவருக்கு பக்கவாட்டிலும் ஒருவருக்கு முன்புறத்திலும் காயங்கள் காணப்பட்டன என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மன்னார்,...

(1ம்பக்க தொடர்ச்சி)

க்கைக்குச் சென்றிருந்தனர். அங்கு இரு பிரிவினருக்குமிடையே நேரடி மோதல்இடம் பெற்றதாகக் கூறப்படுகிறது. இரு பகுதியினரிலும் உயிர்ச்சேதம் ஏற்பட்டிருக்கலாமெனத் தெரியவருகிறது.

ஆயுதப் படையினர் தங்கள் முகாமுக்குத் திரும்பும்பொழுது 3 வாகனங்களை கட்டி இழுத்துக் கொண்டு சென்றதாகத் தெரிவிக்கப் படுகிறது.

பதற்ற நிலையால் நேற்று முழு நாளும் வாகனப் போக்குவரத்துக்கள் இடம் பெறவில்லை. (மா)

## வவனியா...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

செல்லையா செல்வரத்தினம் [26 வயது] என்பவரையும், மேலும் இருதயராசா என்பவரையும் இராணுவத்தினர் கைது செய்தனர்.

இதுதொடர்பாக வவனியா அரசாங்க அதிபர் திரு. கே. சி. லோகேஸ்வரனுக்கும், பிரஜைகள் குழுவுக்கும் புகார் செய்யப்பட்டுள்ளது.

### 10 பேர் விடுதலை

பத்திரிலகயாளர் உட்பட 10 பேர் நேற்றுக்காலை விடுவிக்கப்பட்டனர். இருவர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

## பலி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த அக்டோபர் மாதம் 16ம் திகதி முதல் இம்மாதம் 10ம் திகதிவரை இடம்பெற்ற இந்த 25 சம்பவங்களும் யுத்த நிறுத்த மீறல்களே என்றும் இக்குழு முடிவுக்கு வந்துள்ளதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மொசாட்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

இலங்கை அரசுக்கும் இடையே சமாதான பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாவதற்கு முன்பு விடுதலை இயக்கங்களிடையே பிளவை ஏற்படுத்துவதற்கு தீவிரமுயர்சி மேற்கொள்ளப் படுகிறது என்றும் அப்பத்திரிகை தெரிவித்துள்ளது.

### ஆதாரங்கள் எதுவும் இல்லை

இதேவேளையில் இந்த இரகசிய உறவுக்கான எதுவித ஆதாரங்களும் இல்லை என இந்திய அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## "உள்ளூர் உற்பத்திகளைப் பெருக்க சகலரும் முன்வரவேண்டும்"

(யாழ்ப்பாணம்)

"வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு வெளியே சென்று உத்தியோகம் பார்க்கமுடியாத நிலைமைக்கு வடக்கு கிழக்குப் பகுதி வாழ் தமிழ்மக்கள் உந்தப்பட்டுள்ளனர். இந்நிலையில் உத்தியோக மாயையை விடுத்து உள்ளூர் மூலப்பொருட்களைப் பாவித்து உள்ளூர் உற்பத்திகளைப் பெருக்க நாம்முன் வரவேண்டும்:"

இவ்வாறு அரியாலை மகளிர் கிராம அபிவிருத்திச்சங்கத்தின், "கைத்தொழில் அபிவிருத்தி' அங்குரார்ப்பண வைபவத்தில் உரையாற்றும் போது தமிழ் மகளிர் அவைப் பேச்சாளர் திரு. இரா. முருகையா கூறினார்.

சங்கத் தலைவி திருமதி பா. வேல்முருகு தலைமையில் மாம்பழம் சந்தியில் உள்ள சங்க மண்டபத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் நல்லூர் உதவி அரசாங்க அதிபர் திரு. இ. சிவகுருநாதன் இச்சங்கத்துக்கு பத்தாயிரம் ரூபாவுக்கான காசோலையைச் சங்கத் தலைவியிடம் கையளித்தார்.

திரு. சிவகுருநாதன் தமது உரையில், "அரியாலை மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கம் மிகவும் நல்லமுறையில் செயற்படுகிறது. இதனால்தான் இச்சங்கத்திற்கு ரூபா பத்தாயிரம் அளிக்க நான் முன்வந்தேன். இப்பணம் அப்பளம் தயாரிப்பதற்கு ஊக்கம் கொடுக்கவே வழங்கப்பட்டுள்ளது" என்றார்.

பனை அபிவிருத்திச் சபையைச் சேர்ந்த டாக்டர் எஸ் மோகனதாஸ் தமது உரையில், " பனை அபிவிருத்திச் சபை உள்ளூர் உற்பத்திப் பொருட்களையும் வாங்கி மக்களுக்கு விற்பனைசெய்ய என்றுமே தயாராயுள்ளது. நல்லெண்ணெய், இடியப்ப உரல், அப்பளம், ஊறுகாய், வடகம் போன்ற யாழ்ப்பாணத்தின் சிறந்த உற்பத்திப் பொருட்கள் மூலம் எமது மக்கள் நல்ல வருவாயைப் பெறமுடியும்".

வண. பிதா யோசப், திருவாளர்கள்: ந. சோமசுந்தர ஐயர் உதவி அரசாங்க அதிபர் எஸ். கோபாலரத்தினம், எஸ். கருணைநாதன் ஜே பி., ஆ. கனகசபாபதி உட்படப் பலர் உரையாற்றினர்.

தமிழ் மகளிர் அவையினரால் அரியாலைப் பகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட திருமதிகள்: தே. அல்போன்ஸா, பெனிற்ரு அன்ரன், பீரிஸ் அந்தோனிப்பிள்ளை, றொபின்ஸன் அனுஷியாதேவி ஆகிய நால்வருக்கும் தையற் பயிற்சி அளிக்கவும், நாளாந்தம் இருபது ரூபா சம்பளமாக வழங்கவும் கிராம அபிவிருத்திச் சங்கம் முன்வந்துள்ளது. [ஐ]

## இரு பெண்களுக்கு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சுட்டுக்கொல்லப்பட்டு, மின் கம்பங்களில் கட்டிவைக்கப் பட்டனர்.

நேற்றுக்காலை இருபெண்களுக்கும் இத்தண்டனை நிறைவேற்றப்பட்டிருந்தது.

மட்டக்களப்பு இ. போ. ச. டிப்போவுக்கருகிலும், செங்கலடியிலும் இருபெண்களின் சடலங்களும் காணப்பட்டன. (மா)

## வவனியா....

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

இந்த நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

வவுனியா இ. தொ. கா. பொறுப்பதிகாரி திரு.பி.மதுரபிள்ளை, இ.தொ.கா.பொதுச் செயலாளருடன் தொடர்பு கொண்டு, விபரத்தை எடுத்துக் கூறினார். இதனை தொடர்ந்து ஆயுதப்படையினரால் கைதாகியவர்களின் விபரங்களை அறிய ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது,

பாதுகாப்பு படையினரால் கைதுசெய்யப்பட்டவர்கள் பற்றிய முழுவிபரங்களையும், வவனியா, இ. தொ. கா. காரியாலயத்திற்கு உடன் அறிவிக்குமாறு திரு. மதுரப்பிள்ளை தெரிவித்துள்ளார் (க)

## ஆர்ப்பாட்ட...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் முன்னிலையில் காலை 10 மணிக்கு இந்த ஊர்வலம் ஆரம்பமானது.

இந்த ஊர்வலத்துக்கு முன்னும் பின்னும் ஆயுதப்படையினர் சென்றுகொண்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

"கைது செய்யப்பட்டவர்களை விடுதலை செய்" என்ற சுலோக அட்டைகளை ஊர்வலத்தினர் தாங்கிச் சென்றனர். (மா)

## சாதனை!

(யாழ்ப்பாணம்)

அராலி சில்வஸ்ரார் விளையாட்டுக்கழகம் நடாத்தி வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் கடந்த வியாழக்கிழமைவட்டுக்கோட்டை விளையாட்டுக்கழகமும் அராலி வடக்கு பாரதி விளையாட்டுக் கழகமும் மோதின.

இப் போட்டியில் வட்டுக்கோட்டை விளையாட்டுக் கழகம் பாரதி விளையாட்டுக் கழகத்தை 4-0 என்ற கோல்களால் தோற்கடித்தது. இதன் மூலம் வட்டுக்கோட்டை விளையாட்டுக் கழகம் இரண்டு சுற்றுக்களில் வெற்றி பெற்றது குறிப்பிடத் தக்கது.

இதற்கு முன்பாக நடைபெற்ற போட்டியில் நவாலி சென் பீற்றஸ் கழகம் யாழ். முஸ்லிம் பிறன்ஸ் கழகத்தை 4-1 என்றகோல்களால் தோற்கடித்தது குறிப்பிடத் தக்கது. (ச)

## சனசமூக நிலையத்தின் புதிய பெண்கள் அமைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்-மடம்வீதி திருவள்ளுவர் சனசமூக நிலையம் பெண்களின் புதிய அமைப்பு ஒன்றினை அண்மையில் அங்குரார்ப்பணம் செய்து வைத்தது. நிலையத் தலைவர் திரு. க.சி. கிருஷ்ணன் தலைமையில் அமைக்கப்பட்ட மாதர் முன்னேற்றக் கழகத்தின் நிர்வாகிகள் விபரம் வருமாறு: தலைவி திருமதி. பாக்கியவதி அந்தோணிமுத்து, செயலாளர் திருமதி கலாதேவி கந்தசாமி, பொருளாளர் செல்வி. சரஸ்வதி ஐயம்பிள்ளை, உபதலைவி திருமதி. ரஞ்சினி பஞ்சலிங்கம், உபசெயலாளர் செல்வி. இன்பராணி, கணக்குப் பரிசோதகர் செல்வி. சந்திரா துரைசிங்கம். மேலும் பத்துப் பேர்கொண்ட நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (ஐ)

## போட்டியின்றி தெரிவு

[சுழிபுரம்]

சங்கானை பல நோக்கு கூட்டுறவுச்சங்க ஐந்தாவது கிளையின் நிர்வாக உறுப்பினர்களாக போட்டியின்றி பின்வரும் ஒன்பது உறுப்பினர் ஏகமனதாக தெரிவு செய்யப் பட்டுள்ளனர். திருவாளர்கள் மா. பாக்கியநாதன், செ. வைத்தியலிங்கம், இ. ஆறுமுகம், அ. தியாகராசா, அ. நடராசா, ஆ. கதிரமலைநாதன், க. வாமதேவன். சி. சந்திர சேகரம், ம. சற்குணசிங்கம்.

## கடைசி நேர வரிவிளம்பரம்

### காணவில்லை


முல்லைத்தீவிலிருந்து கைதடி வழியாக யாழ்ப்பாணம் வந்த மினி வானிலிருந்து ஒரு சூட்கேஸ் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியில் தொடர்பு கொள்ளவும். அருள் முருகன் ஜுவலறி, கன்னாதிட்டி. சன்மானம் வழங்கப்படும். (2687)

எனது தேசிய அடையாள அட்டை இல. 300851452x யும், இரண்டு இன்றசிற்றி ரெயிலுக்கான ரிக்கற்றுகளும் அச்சுவேலி சந்தைக்கு அண்மையில் தவறி விட்டது கண்டெடுத்தவர்கள் ஒப்படைத்தால் சன்மானம் வழங்கப் படும். டாக்டர். என். கனகசபை, பிராந்திய சுகாதார அத்தியட்சகர், (RDHS) 100, ஐயனார் வீதி, யாழ்ப்பாணம். (2685)

**எம்பயர்**

7 அடித்திரையில்

10-30, 2-30, 6-30, 9-15

விஜய்காந்—அம்பிகா

**"புதிய தீர்ப்பு"**

**லிடோ சினிமா**

10-30, 2-30, 4-30, 6-30

சுறு மீனின் சாகஷங்கள் நிறைந்த

**JAWS III**

[புதிய வெளியீடு]

**வெலிங்டன்**

10-30, 2-30, 6-30

M. G. R. - ஜெயலலிதா நம்பியார் - மனோகர் நடித்த

**அன்னமிட்டகை**

31 முதல்

TEN BROTHERS OF SHAOLIN

(New Release)

**வின்சர்**

10-30, 2-30, 6-15

கயவர்கூட்டத்தின் மத்தியில் அகப்பட்டுத் தத்தளிக்கும் ஓர் ஆரணங்கின் அவலம்நிறைந்த காதல் கதையை இன்றே கண்டுகளியுங்கள்.

நடிப்புக்கோர் மாமன்னன் நடிகர்திலகம்!

அத் திலகத்தின் இளம் தென்றல் பிரபு!

கனவுலகக் கன்னி ராதா, சரிதா, ராதா ரவி நடித்த

**இரு மேதைகள்**

**PHARMED ACADEMY**

PHARMACIST [EXTERNAL] EXAMINATION 1987

The Pharmacist [EX] Examination classes will be start on the 2 nd week of January 1986.

Those who wish interested to follow this course can inquire from,

MR. S. SIVAKUMAR,
NUNAVIL EAST,
KALVYAAL ROAD,
CHAVAKACHCHERI.

Course Director,
Dr. Siva Gnanapandithan. [2680]

**பிரயாண ஒழுங்கு**

அபுதாபிக்கு உடனடி பிரயாணங்கட்கும், இத்தாலி, ஜேர்மன், பிரான்ஸ், பெர்லின், லண்டன் ஆகிய நாடுகளுக்கான பிரயாண ஒழுங்குகட்கும்,

இத்தாலி. ஜேர்மன், பிரான்ஸ், பெர்லின் ஆகிய நாடுகளுக்குமான பிரயாண ஒழுங்குகட்கும், பாஸ்போட், பொன்ட், விசா ஆகியவற்றிற்கும் உடன் தொடர்பு:

**குறாப் அட்லாண்டிக்,**
**163, ஆஸ்பத்திரி வீதி,**
**யாழ்ப்பாணம்.**


## 1ம் வருட நினைவு அஞ்சலி

ப. இராசநாயகம்



மலர்வு:
15-12-1910

உதிர்வு:
29-12-1984

செடிநாட்டி மரமாக்கி
கொடிகாத்த தந்தையே!
காயாகி கனியாகி
ருசிபார்க்கும் நாளில்
தனியாக தெய்வமாக
ஏன் ஐயா சென்றாய்.
எம்வாழ்வின் வீட்டுக்கு
வழியும் ஒளியும்
காட்டிய தந்தையே!
சொல்லாமல் கொள்ளாமல்
திடீரென்று ஏன் ஐயா
சென்றாய்!

இன்பமான இரவுகளும் பகல்களும்
ஒருவருடமாய் இசை இழந்து போனதைய்யா
இழந்த இன்பங்களை ஈடுசெய்ய
இன்னொரு பிறவி எம் மத்தியில் நீ எடுக்க
இறைவனை என்றும் இறஞ்சுகிறோம் தந்தையே!

பிரிவால் துயருறும்.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள், உற்றார், உறவினர், நண்பர்கள்.

"இந்து வாசா"
உயரப்புலம்,
ஆனைக்கோட்டை. (2678)

# யாழ். முஸ்லிம்களின் கல்வியில்

## பின்தங்கியமைக்கு காரணம்?

### பழைய மாணவர் விழாவில் விளக்கம்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாண முஸ்லிம்கள் கல்வியில் பின்னடைந்துள்ளமையினுல் அவர்களின் உயர் கல்வி பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. ஏனைய சமுதாயத்தினருடன் ஒப்பிடுகையில் முஸ்லிம் மக்களின் கல்வி பின்தங்கியே உள்ளது. இதற்குக் காரணம் உரியவயதில் பிள்ளைகளை ஆரம்ப பாடசாலைகளுக்கு அனுப்பிவைக்காமையே ஆகும் இந்த நிலைமை எமது சமூகத்திலிருந்து உடனடியாக நீக்கப்படவேண்டும். இது தொடர்பாக பழைய மாணவர்களும், அவர்களது சங்கங்களும் இதில் மிகவும் அக்கறையுடன் செயல்படவேண்டும்.

இவ்வாறு யாழ். ஒஸ்மானியா கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் முதலாவது வருடாந்த பொதுச் சபைக் கூட்டமும், விருந்துபசாரமும் நடைபெற்றபோது மேற்படி கல்லூரி அதிபர் ஜனுப் ஏ. ஆ. எம். காமீம் பேசும்போது குறிப்பிட்டார்.

ஒஸ்மானியா கல்லூரி 'மஹ்மூத்' மண்டபத்தில் மௌலவி அப்துல் றசாக் ஜமாலி அவர்களின் 'கிருஅத்' ஓதலுடன் வைபவங்கள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

சங்கச் செயலாளர் ஜனுப் எம். புவாத், ஜனுப் எம். இஸ்ஸதீன் ஆகியோரும் உரையாற்றினர்கள்.

கல்லூரியின் வளர்ச்சிக்கான பல பயனுள்ள தீர்மானங்கள் ஆலோசிக்கப்பட்டன. சங்கத்தின் யாப்பு விதிகளும் பரிசீலிக்கப்பட்டு ஏகமனதாக ஏற்கப்பட்டன.

இராப்போசன விருந்து மிகவும் சிறப்பானமுறையில் அமைந்திருந்தது. இறுதியில் 'ஸலவாத்'ஓதலுடன் நிகழ்ச்சிகள் இனிது நிறைவேறின,

[ஐ]


## மலிவு விற்பனை

தரமான உடுபிடவைகளையும் Ford Suitcase வகைகளையும் தேர்ந்தெடுத்து வரும் பண்டிகைக்காலத்தை சிறப்பாக ஒருபடி முன்னேற்றத்துடன் கொண்டாடுங்கள். மலிவு விலையில் உடுபிடவைகளைப்பெற:

**லேடன் இண்டஸ்ரியஸ் லிமிட்டெட்**

தயாரிப்புகளைப்பெற இன்றே விரையுங்கள்:
ஞாயிற்றுக்கிழமைகளிலும் விற்பனை நடைபெறும்.

**லேடன் காமன்ஸ்,**

86, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
(2485) தொலைபேசி: 22330


## நன்றி நவிலல்

எங்கள் குடும்பத் தலைவர் கந்தையா துரைசாமி (மலாயன் பென்சனர்) அவர்கள் அகாலமறைவு எய்தியவேளை அன்னாரது இறுதிக்கிரியை இறுதியாத்திரைகளில் பங்குபற்றியவர்களுக்கும் மலர்வளையங்கள் மாலைகள்சாத்தி அஞ்சலி செய்தோருக்கும்; தந்தி, அஞ்சலிப்பிரசுரங்கள் மூலமும் நேரிலும் அஞ்சலி செலுத்தி ஆறுதல் கூறியோருக்கும்; இறுதியாத்திரைக்கு வேண்டிய ஒழுங்குகளைச் செய்துதவியவர்களுக்கும்; கலந்துகொண்ட பொதுமக்கள் எல்லோருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பொன்னுலை றேட்,
மானிப்பாய்.

திருமதி
சரஸ்வதி துரைசாமியும்,
பிள்ளைகளும்.

2670


யாழ் மக்களுக்கு

## ஓர் நற்செய்தி

வெளிநாட்டுப் பயணத்திற்கான விமான டிக்கட்டுகள், பாஸ்போட், விசா, பிரயாணிகள் காசோலைகள் மற்றும் பிரயாணங்களுக்குத் தேவையான சகல ஒழுங்குகளும் செய்துதரப்படும்.

தொடர்பு கொள்ளுங்கள்:

**விஜயமாலா ரவல்ஸ்,**

213, 215, செட்டியார்தெரு, கொழும்பு 11.
தொலைபேசி: 547205

நேரில் தொடர்பு கொள்ள முடியாதவர்கள் யாழ்ப்பாணத்தில் தொடர்பு கொள்ளவேண்டிய விலாசம்:

திருமதி சி. கஜமுகலிங்கம்,
ரஜனி நிலையம், ஊரியாட்டி, சுன்னுகம்.
(9315)


## மின் இணைப்புக் கோரிக்கை

(புங்குடுதீவு)

புங்குடுதீவின் நுழைவாயிலான பழைய துறைப்பகுதிக்கு இன்னும் மின்னிணைப்பு வழங்கப்படாதிருப்பது குறித்து அப்பகுதி மக்கள் மிகவும் அதிருப்தி தெரிவிக்கின்றனர்.

புங்குடுதீவின் வடபாகத்திலுள்ள ஊரைதீவு, மடத்துவெளிக் கிராமங்களிலுள்ள பெத்தப்பு கோயில் ஒழுங்கை மின்னியம் வாய்க்கால் ஒழுங்கை, திக்கிலி ஒழுங்கை, வரைதீவு ஒழுங்கை, கம்பிலியன் ஒழுங்கை ஆகிய இடங்களுக்கும் மின்சாரம் இதுவரை வழங்கப்படவில்லை.

இப்பகுதிகளுக்கூடாக மின்னிணைப்பை வழங்கி புங்குடுதீவு பாணவிடை சிவன் தேவஸ்தானம்வரை இணைப்பை நீடிக்குமாறு ஊரைதீவு கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் யாழ்ப்பாணப்பகுதி மின்சாரப் பொறியியலாளரைக் கோரியுள்ளனர். இதே போன்ற வேண்டுகோள்கள் யாழ்ப்பாண அரசாங்க அதிபருக்கும், வேலணை உதவி அரசாங்க அதிபருக்கும் விடுக்கப்பட்டுள்ளன.


# கோல் 2 ஈ·

கோல் 2ஈ களைநாசினியை பாவித்து நெற்பயிரின் வளர்ச்சியை பாதிக்கும் நெற்சப்பி, கோழிச்சூடான் போன்ற சகல களைகளையும், வெங்காயம், உழுந்து போன்ற பயிர்களுடன்

போட்டியிட்டு வளரும் பசளி, போன்ற சகல களைகளையும் முற்றுக அழித்து அதிக விளைச்சலைப் பெறுங்கள்.

கோல் 2ஈ களைகள் முளைக்க முன் கட்டுப்படுத்தும் ஒரு சிறந்த களைநாசினியாகும்.




CIC
கெமிக்கல் இண்டஸ்ட்ரீஸ் (கொழும்பு) லிமிட்டெட்
த.பெ. எண் 352, கொழும்பு. 100 மி.லி. - ரூ. 80/- 200 மி.லி. - ரூ. 150/-
TAL



சுத்தமான

## விளைவு கற்பூரம்

சீனுவின் தொழில்நுட்ப வல்லுநர்களின் உதவியுடனும், சீனுவின் தரத்திற்கு அமையவும் முதன் முதலாக இலங்கையில் தயாரிக்கப்பட்டது.

இப்பொழுது தாராளமாக கிடைக்கும்
மொத்த வியாபாரிகளுக்கு விசேஷ கழிவுண்டு-

தொடர்பு கொள்ளவும்,

விநியோகஸ்தர்:

**பிரபா ட்ரேடிங் கம்பெனி,**

31-31A, கபோஸ் லேன், கொழும்பு - 11.
Phone: 29426



## TOEFL

Test of English as a Foreign Language

America, Canada, Norway போன்ற நாடுகளின் Colleges and Universitesகளில் Higher Studiesஐத் தொடரவிரும்புவோருக்கும். அந்நாடுகளில் Employment Opportunitesகளை எதிர்பார்ப்பவர்களுக்கும் இப் பரீட்சையில் திறமைச்சித்தி அவசியம்.

அடுத்த பரீட்சை 8-3-86ல்
கொழும்பில் நடைபெறும்.

Our Lectures are Commencing on: 11-1-86.
(Weekends Only)

By

பிரபல ஆங்கில விரிவுரையாளர்
கந்தையா நவரேந்திரன்

முழுக்கட்டணம்: ரூ. 250/-

**CANTABIA INSTITUTE**

(Shoort of Oxonia, Colombo)
21, MAIN STREET, JAFFNA.
Phone: 24201.

## ஆசிரியர் வெற்றிடம்

கருணைநிலையம் கிளிநொச்சியில் பெண்களுக்கான தொழிற்பயிற்சி நிலையத்தில் மனையியல், கைவேலை, கணிதம், ஆங்கிலம் ஆகிய பாடங்களை கற்பிக்க பகுதி நேர ஆசிரியர்கள் தேவை; யாழ்ப்பாணத்தில் இருந்து சென்று கிழமைக்கு இருநாள் தங்கி வேலைசெய்யக் கூடியவர்களும்விண்ணப்பிக்கலாம். தகைமையுடன் ஒரு மணித்தியாலத்துக்கு எதிர்பார்க்கும் வேதனத்தையும் குறிப்பிடவும். விண்ணப்பங்களை அனுப்பவேண்டிய முகவரி: மிஸ் L. R. நவரட்ணசிங்கம், ஆசீர்வாதம் லேன், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 2656


## இன்று கவிதா நிகழ்வு

[தெல்லிப்பழை]

கிராமியக் கலைக்குழு வழங்கும் 'நாங்கள் இணைகிறோம்' கவிதா நிகழ்வும் 'சிந்திக்கத் தொடங்கி விட்டார்கள்' நாடகமும் தெல்லிப்பழையில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணியளவில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்ச்சிகள் நெல்லியடியிலும் இன்று காலை நடைபெறவுள்ளது.

[மா]

## கருத்தரங்கு

[கொழும்பு]

இலங்கைச் சட்டத்துறை மற்றும் சமூக நம்பிக்கைப் பொறுப்பு நிறுவனமும் இந்தியாவின் சட்டத்துறை நிறுவனமும் இணைந்து ஏற்பாடு செய்த கருத்தரங்கு இன்றும் நாளையும் கொழும்பு கலதாரி ஹோட்டலில் நடைபெறவுள்ளது.

தொழில்நுட்பம் மற்றும் கைத்தொழில் நடவடிக்கைகளால் ஏற்படும் தீயவிளைவுகளும் அதனால் சட்டத்துறைக்கும் சமூகத்திற்கும் ஏற்படக் கூடிய சவால்களும் பற்றி இந்தக் கருத்தரங்கில் ஆராயப்படும்.

இலங்கை. இந்திய பிரதிநிதிகளோடு மலேசியா, ஜப்பான், பிரிட்டன், அமெரிக்கா ஆகிய நாடுகளின் பிரதிநிதிகளும் இக்கருத்தரங்கில் கலந்து கொள்கிறார்கள்.

[ச]


# 1-வது ஆண்டு நினைவஞ்சலி

## பிஸ்கால் இராமலிங்கம்

தோற்றம்: 14-03-1908



மறைவு: 08-01-1985

எங்கள் அன்புத் தெய்வமே ஐயா!
அன்பினால் உயர்ந்தோய் என்றும் ஆர்க்குமே
உதவி செய்தோய்
பண்பொடும் குடும்பம் தன்னைப் பார்த்திட்ட
பாசம் கொண்டோய்
நண்புசேர் உள்ளம் கொண்டோய் நல்லவர்
இதயத்துள்ளோய்
என்றுமே மறவோம் நின்னை நினைவுடன்
கலந்தமேலோய்.

எம்மைவிட்டுப் பிரிந்து ஓராண்டு கழிந்தாலும் உங்களது நினைவுகள் என்றும் எம்மைவிட்டகலாது. உமது ஆத்மாசாந்தியடைய அன்றுடம் பிராத்திக்கும்:

மனைவி, மக்கள், பேரப்பிள்ளை

2665



# 2-வது ஆண்டு நினைவஞ்சலி

## செல்வன் தேவதாசன் கணரூபன்

மலர்வு: 06-06-1969



உதிர்வு: 22-12-1983

திதி: 29-12-1985

ஈராண்டு கழிந்திட்டாலும் எம்மவர் நெஞ்சில் நீங்காத நின் நினைவு நிழலாடுதையா! தங்கத் திருவுருவாய் தவக்கொழுந்தாய் தருமசீலனாய் பார் போற்ற வாழ்ந்த நீ எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி மீளாத் துயில் கொண்டாய். கணரூபா! கணப்பொழுதும் நினை மறவாது கலங்கிநிற்கின்றோம். உங்கள்ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:

அன்பு அப்பா, அம்மா, அருமை அக்கா,
மற்றும் துயருறும் குடும்பத்தினர்.

டச்சு றோட், அளவெட்டி. 2618


## தொலைக்காட்சி

மாலை:

3-30 மேடை நாடகம்
4-00 சிறுவர் நிகழ்ச்சி
4-50 கார்ட்டூன்
5-00 செய்திகள்
5-05 கார்ட்டூன்
5-30 சிறுமியும் டொல் பின்னும் [விவரணச் சித்திரம்]
6-00 சிறுவர் நிகழ்ச்சி
6-30 செய்திகள் [தமிழ்]
6-55 இசை நிகழ்ச்சி
7-30 வாராந்த விளையாட்டு
8-00 செய்திகள் [சிங்களம்]
8-30 பப்பற்ஸ் நிகழ்ச்சி
9-00 செய்திகள் [ஆங்கிலம்]
9-20 அதிஸ்ட சக்கரம்
9-40 இளைஞர் நிகழ்ச்சி
10-05 மிக் மிலன் அன்ட் வைப்
11-20 ஒளிபரப்பு முடிவு

## லியோ கழகம் முன்மாதிரி!

### ஆஸ்பத்திரியில் சிரமதானம்

(யாழ்ப்பாணம்)

யாழ். லியோ கழகத்தினர் யாழ். ஆஸ்பத்திரியின் 1 ம், 2 ம், 3 ம் வார்டுகளை பத்தாயிரம் ரூபாவுக்கு மேல் சிரமதானமூலம் திருத்தி அமைத்துள்ளனர்.

கடந்த 8 நாட்களில் லியோ கழகத்தைச் சேர்ந்த 25 க்கு மேற்பட்ட ஆண்களும் பெண்களும் இச் சிரமதான வேலைகளில் ஈடுபட்டிருந்தனர்.

நோயாளரின் பாவனையிலிருக்கும் கட்டில்கள், தளபாடங்களைப் புதுப்பித்தும் வார்டுகளின் சுவர்களுக்கு வர்ணம் பூசியும் துப்பரவாக்கியும் உள்ளது குறிப்பிடத்தக்கது.

ஆஸ்பத்திரியிலுள்ள மற்றும் வார்டுகளும் சிரமதானம் மூலம் திருத்தி அமைக்க ஆலோசனை நடத்தி வருவதாக லியோ கழகம் தெரிவித்துள்ளது. [மா]


# PATRICIAN INSTITUTE OF HIGHER STUDIES

## COMPUTER Programming Courses

for Professionals and School leavers

(6 MONTHS COURSE)

Classes Commence on 18th January, 1986

WEEK-END COURSES

Lectures by:

Mr. N. S. RAJAH,
B. Sc. (Eng.) Hons. (Lond.) A.M.I.C.E.

G. C. E. O/L பரீட்சை முடித்துக்கொண்டு இருக்கும் மாணவர்களுக்கு

ஓர் அரிய சந்தர்ப்பம்

1. வீட்டு மின் இணைப்பு (ELECTRICAL HOUSE WIRING)
2. கடைச்சல் யந்திர இயக்குநர் (LATHE OPERATOR)
3. மின்·ஒட்டு வேலை (ARC WELDING)

மூன்று மாத காலப் பயிற்சி
3-1-86 வெள்ளிக்கிழமை ஆரம்பமாகிறது.

மோட்டார் வாகனங்கள் பரிசோதித்தல் எல்லா நாட்களிலும் நடைபெறும்.

பதிவாளர்.
REGISTRAR.
59, சென். பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணம்.



### பழைய லான்ட்மாஸ்ரர்

எங்கள் வாடிக்கை நிறுவனமொன்றுக்காக பழைய ''லான்ட்மாஸ்ரர்'' இருசக்கர உழவுயந்திரங்கள் கொள்வனவு செய்யப்படுகின்றன. முற்றாகப் பழுதடைந்தோ அல்லது பாகங்கள் குறைவுற்றோ இருப்பினும் ஏற்கப்படும். விவரங்களையும், எதிர்பார்க்கும் விலையையும் குறிப்பிட்டு தொடர்பு கொள்க.

### வீட்டு அலங்காரம்

PLASTER GRIT: உங்கள் வீட்டுச் சுவர்களையும், சீலிங்குகளையும் கவர்ச்சிகரமாக அலங்கரிக்க. மிகச் சிறந்த மாபிள் துகள்கள் பல வர்ணங்களில்) TVயில் நீங்கள் பார்த்த இந்த அலங்காரத்தை உங்கள் வீடுகளில் செய்துகொள்ள யாழ்ப்பாணத்தில் தொடர்புகொள்ள வேண்டிய இடம்: Stanley Furnishing Palace (ஸ்ரான்லி வீதி) அல்லது டைனமிக் என்ஜினியரிங் லிமிற்றெட் (சுண்டுக்குளி). இறக்குமதியாளர்கள்: KEY GROUP THREE (PVT.) LTD.

### வீடுகள், கட்டிடங்கள்

Building Plans, Estimation, Construction: இவற்றுக்கு டைனமிக் என்ஜினியரிங் லிமிற்றெட்டின் அனுபவமிக்க பொறியியலாளர்களின் சேவையினைப் பெறுங்கள்.

### எரிவாயுச் சாதனம்

சமைக்க, விளக்கெரிக்க, நீரிறைக்க, மின்சாரம் உற்பத்தி செய்ய எரிவாயுச் சாதனத்தை அமைத்துக் கொள்ளுங்கள். வாழ்நாள் முழுவதும் பயன்படத்தக்க நல்ல முதலீடு. அமைத்துத் தருபவர்கள்: டைனமிக் என்ஜினியரிங் லிமிற்றெட்.

### WANTED FOR FOOD INDUSTRY:

A client of ours engaged in the manufacture of food items and beverages is looking for a person knowledgeable in this field to take charge of an expansion programme. Good prospects to become a working partner. Please apply with full bio-data.

### வெற்றிடங்கள்

1. Management Trainee: மெக்கானிக்கல் என்ஜினியரிங் சார்ந்த துறையில் விருப்புள்ள, தொழில்நுட்பக் கல்லூரிப் பயிற்சி பெற்ற, அல்லது பொறிமுறை வரைதலில் அல்லது A L. கணித பாடங்களில் சித்தியடைந்த 30 வயதுக்கு மேற்படாதவர்கள் எழுத்துமூலம் விண்ணப்பம் அனுப்பவும்.

2. Watcher: எங்கள் வாடிக்கை நிறுவனமொன்றுக்கு காவலாளி ஒருவரின் சேவை தேவை. வேலை யாழ்.நகரில். வயதெல்லை இல்லை. எழுத்துமூலம் விண்ணப்பிக்கவும்.

3. Canvassers: விளம்பரம் சேகரிப்போருக்கான இரு வெற்றிடங்கள் உள்ளன. திறமையுள்ளவர்கள் நல்ல வருவாய் பெறமுடியும். அத்துடன் விளம்பர ஏஜன்சிகளில் பணியாற்றிய அனுபவமுள்ள கலைஞர்களும் தொடர்பு கொள்க. முழுவிபரங்களுடன்எழுத்து மூலம் விண்ணப்பிக்கவும்.

### காணி

மன்னார் வீதியில் வவனியாவிலிருந்து 2ம் மைல் கல்லுக்கு அண்மையில் 5 ஏக்கர் மேட்டுநிலம் விற்பனைக்குள்ளது. மின்சார வசதி உண்டு. விவசாயத்துக்கோ. தொழிற்சாலை அமைக்கவோ ஏற்றது.

dyn ads

476, பிரதான வீதி, சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.

# ஈழநாடு
## வார மலர்
THE EELANADU VARAMALAR


## அந்தக் குதிரையால் ஆபத்து விளையுமாம்!

(கொழும்பு)

கொழும்பில் நடைபெறும் இந்து கோயில் வைபவம் ஒன்றுக்காக வெளிநாடொன்றிலிருந்து கொண்டுவரப்பட்ட குதிரையொன்று தொற்று நோய்த் தடுப்புசான்று பெறாமலே கொழும்பு நோய்த் தடுப்பு முகாமிலிருந்து அப்புறப்படுத்தப்பட்டுள்ளதாம்.

மேற்படி குதிரை இன்று கோயில் ஒன்றின் சமயநிகழ்ச்சிக்காகக் கொண்டுவரப்பட்டு கொழும்புத் தடுப்பு முகாமில் வைக்கப்பட்டிருந்ததாகவும், உயர்மட்ட அரசியல் பிரமுகர் ஒருவரின் செல்வாக்கின்பேரில் இக்குதிரை நோய்த்தடுப்பு சான்று பெறாமலே அகற்றப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகின்றது.

இதனால் மிருகங்களுக்கு மாத்திரமின்றி மனிதர்களுக்கும் அபாயகரமான நோய்கள் பரவலாம் என அஞ்சப்படுவதாகக் கொழும்பில் வெளியாகும் சில பத்திரிகைகள் பிரலாபித்துள்ளன. நாட்டில் இன்று மூளைக்காய்ச்சல் போன்ற தொற்று நோய்கள் பரவியிருப்பதற்கு மிருகங்களே காரணம் என்று கருதப்படும் வேளையில் இவ்வாறு குதிரையொன்று கொண்டுவரப்பட்டிருப்பது பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என அப்பத்திரிகைகள் அச்சம் வெளியிட்டுள்ளன.

இதேசமயம், கொழும்பில் அஸ்வமேதயாகம் ஒன்று நடத்தப்படுவதற்காக வெள்ளைக் குதிரையொன்று தருவிக்கப்படவிருப்பதாகவும் இந்த வைபவத்தில் பிரதேச அபிவிருத்தி அமைச்சர் திரு. எஸ். ராஜதுரை கலந்துகொள்ள விருப்பதாகவும் செய்திகள் வெளிவந்திருந்தமை தெரிந்ததே.

## பதற்றம் தணிந்தது

[அக்கரைப்பற்று]

நிந்தாவூரில் இரு சமூகத்தவருக்கிடையேஏற்பட்ட பிரச்னை குறித்து எழுந்த பதற்றநிலை பொத்துவில் முதலாவது எம். பி. ஜனாப் உதுமாலெப்பையின் தலையீட்டினால் தணிந்தது. [மா]

அப்பாவி மக்கள் படுகொலை—

## இலங்கை அரசுக்கு இந்தியா கவலை

(புதுடில்லி)

அண்மைக்காலமாக இலங்கையில் அப்பாவி தமிழ் மக்கள் ஆயுதப்படையினரால் கொலை செய்யப்படுவது குறித்து இந்தியா தனது ஆழ்ந்த கவலையைத் தெரிவித்துள்ளதுடன் இது குறித்து இலங்கை அரசின் கவனத்திற்கும் கொண்டுவந்துள்ளது.

இலங்கையில் ஆயுதப்படைகளைப் பலப்படுத்துவது குறித்தும் இந்தியா தமது கவலையைத் தெரிவித்துள்ளது.

இலங்கை அரசு தனது ஆயுதப் படைகளின் மோசமான நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த வேண்டும் என்றும் கேட்டுள்ளது. (ச)

## லலித் மறுப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்க முக்கிய பிரமுகரான கலாநிதி எஸ். ஏ. பாலசிங்கத்தின் சென்னை இல்லத்தில் இடம்பெற்ற குண்டுவெடிப்பு சம்பந்தமாக தமிழக பொலிஸாரால் ஏழுபேர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி கூறியுள்ளார்.

பாணந்துறையில் நேற்றுக் காலை நடைபெற்ற ''மகாபொல'' வைபவத்தில் கலந்துகொண்டு உரை நிகழ்த்தும் போதே அமைச்சர் லலித் இதனைக் கூறினார்.

சென்னை குண்டுவெடிப்புச் சம்பவத்தைத் தொடர்ந்து கலாநிதி பாலசிங்கம் விடுத்துள்ள அறிக்கையை மீண்டும் நிராகரித்த அவர்; ''கைது செய்யப்பட்டுள்ள அந்த ஏழு பேரும் தமிழ்தீவிரவாத இயக்கங்களைச் சேர்ந்தவர்களே'' என்றார்.

தீவிரவாத எதிர்ப்பு சம்பந்தமாக கருத்து வெளியிட்ட அமைச்சர் ''ஆயுதப் படையை வலுப்படுத்துதல், படையினருக்கு கூடுதலான ஆயுதங்களை வழங்குதல், சர்வதேச அபிப்பிராயத்தை தமக்கு சாதகமாக ஆக்கிக்கொள்ளுதல், தீவிரவாதத்தை வெற்றிகொள்வது என்று திடசங்கற்பம் பூணுதல் ஆகிய பல அடிப்படையான வழிவகைகளை அரசு கையாண்டு வருவதாகக் கூறினார். [ரா]

## கிரிக்கெட் டெஸ்ட் இந்தியா 431-1

மெல்போர்ன், டிச. 28

இந்தியத் துடுப்பாட்ட வீரரான டிலிப் வெங்சாகரினதும் காப்டன் கபில்தேவினது அபார ஆட்டத்தினால் இந்திய கிரிக்கெட் கோஷ்டி தனது முதலாவது இன்னிங்ஸில் 1 விக்கெட்டுகளை இழந்து 431 ஓட்டங்களைப் பெற்றது.

3 விக்கெட் இழப்புக்கு 187 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் 3நாள் ஆட்டத்தை ஆரம்பித்த இந்தியா ஆட்டநேர இறுதியில் 9 விக்கெட்டுக்களை இழந்து 431 ஓட்டங்களைப் பெற்றது.

முதல் இன்னிங்ஸில் ஆஸ்திரேலியா சகல விக்கெட்டுகளையும் இழந்து 265 ஓட்டங்களைப் பெற்றது.

## வீடியோ பார்த்தவர்களில் 9 பேர் விசாரணை

(கொழும்பு)

கல்முனைப் பகுதியில் ஒரு வீட்டில் வீடியோப்படம்பார்த்துக் கொண்டிருந்த 25பேரை அண்மையில் களுவாஞ்சிக்குடி அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர்.

விசாரணையின்பின்னர் கைது செய்யப்பட்டவர்களில் 16பேர் விடுதலைசெய்யப்பட்டுள்ளனர். இவர்களில் 9 பேர் மேல்விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்கள்.

இச் சம்பவத்தினால் கல்முனை பகுதியில் சிறிதளவு பதற்றம் நிலவியது. (பி)

## ஆயிரம் ரூபாய் கள்ளநோட்டுக்கள்

[கொழும்பு]

பொலநறுவைப்பகுதியில் ஆயிரம் ரூபா கள்ளநோட்டு மோசடி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. சுமார் ஒருலட்சத்து இருபதாயிரம் ரூபா பெறுமதியான ஆயிரம் ரூபா கள்ள நோட்டுக்களைக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கைப்பற்றியுள்ளனர்.

இதுதொடர்பாக சந்தேகத்தின்பேரில் மூன்று பேர் கைது செய்யப்பட்ட போது அவர்களிடம் ஆயிரம் ரூபா போலி நோட்டுக்களும் இருக்கக்காணப்பட்டன.

இம் மூவரும் பொலநறுவை நீதவான் கே. ஜீ. ஜீ. ஏ. டி. சில்வா முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளனர். [இ - பி]

## கருத்தரங்கு நிறைவு விழா

[யாழ்ப்பாணம்]

சர்வதேச சுதந்திர ஆசிரியர் சங்க சம்மேளனம், ப்ரெடரிக் ஈபேர்ட் மன்றம், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் போன்றவை இணைந்து நடத்தும் 'சமுதாயத்தில் ஆசிரியர் தொழிற்சங்கங்களின் தாக்கம்', 'ஆசிரிய தொழிற் சங்கச் செயற்பாடுகளில் பெண் ஆசிரியர்களின் பங்களிப்பு' தொடர்பான கருத்தரங்கு நிறைவு விழா நாளை திங்கட்கிழமை திரு. த. மகாசிவம் தலைமையில் வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கு விழாவில் முதன்மைவிருந்தினராக யாழ். பிரதம கல்வி அதிகாரி இ. சுந்தரலிங்கமும், சிறப்பு விருந்தினராக திரு. ஆ.க. மாணிக்கமும் கலந்துகொள்கிறார்கள்.


இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1985-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 29-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B10036/81. Eelanadu P. O. Box: 49, Telegram, Eelanadu, Telephone: 22389-24126.


## மரண அறிவித்தல்
### சின்னத்தம்பி சுப்பிரமணியம்

இணுவில் மஞ்சத்தடியை இருப்பிடமாகக் கொண்டவரும், முன்னாள் வவுனியா புகையிலை வர்த்தகருமான சின்னத்தம்பி சுப்பிரமணியம் 28-12-85 அன்று காலமாகி விட்டார். இவர் கண்மணியின் அன்புக் கணவரும், காலம் சென்ற செல்வரட்ணம், யோகநாதன், சிவலிங்கம் (சிறி துர்க்கா றேடிங் சென்றர், வவனியா) இராஜஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையும், லோகநாதன் (சவுதி அரேபியா) சகுந்தலாதேவி, புவனேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவர். அன்னாரின் பூதவுடல் இன்று 29-12-85 ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2 மணிக்கு தகனக் கிரியைக்காக இணுவில் சாரைக்கால் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும். (2686)

## மரண அறிவித்தல்
### திரு. இ. குணநாயகம்

மலர்வு: 6-10-1926 உதிர்வு: 27-12-1985

யாழ்ப்பாணம் பொலிஸ் அலுவலகப் பிரதம லிகிதரும், உரும்பிராயைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், காங்கேசன்துறைவாசியுமான திரு. இ. குணநாயகம் காலமானார். இவர் தில்லைநாயகி (ராணி) யின் அன்புக் கணவரும். கோசலை, மனோராகவன் (நடேஸ்வராக் கல்லூரி), தேமதுரன் (யூனியன் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற உரும்பிராய் இரத்தினம், தங்கமுத்து தம்பதிகளின் அன்புப் புதல்வரும், திரு. இ. இராசநாயகம், காலஞ்சென்ற திரு இ தம்பிராசா, திருமதிகள் சரஸ்வதி நடசிவாயம் லீலா சின்னத்தம்பி ஆகியோரின் சகோதரரும், திருமதிகள் வள்ளிநாயகி இராமலிங்கம், கோகுலநாயகி சிவசுப்பிரமணியம் (கோலாலம்பூர்), அகிலா ஜெயபாலன் (லண்டன்), விமலநாயகி, சிவகுருநாதன், திரு. சி. நவநீதன் (லண்டன்) ஆகியோரின்மைத்துனரும் ஆவார் அன்னாரது ஈமக்கிரியைகள் இன்று பிற்பகல் [29-12-85] 2 மணியளவில் காங்கேசன்துறையிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று. தகனக் கிரியைக்காக காங்கேசன்துறை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். தயவுசெய்து உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டிக் கொள்கிறோம். குடும்பத்தினர்.

''ராணி வில்லா'',

கல்லூரி வீதி, காங்கேசன்துறை. [2671]

## மரண அறிவித்தல்
### செல்வன்
### மயில்வாகனம் பார்த்திபராசன்

அளவெட்டியைச் சேர்ந்த மயில்வாகனம் கண்ணம்மா தம்பதிகளின் இளைய புதல்வன் செல்வன் பார்த்திபராசன் காலமானார். இவர் செந்தில்வாசன் (பொறியியலாளர், பெருந்தெருக்கள் திணைக்களம்), செல்வநேசன், சந்திரவதனா, விமலயோகினி ஆகியோரின் அருமைச் சகோதரருமாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று [29-12-1985] ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2 மணியளவில் அளவெட்டியில் நடைபெறும்.

தகவல்: த. மயில்வாகனம் (தரகர்)

செட்டிச்சோலை, அளவெட்டி. (2689)

## மரண அறிவித்தல்
### சபாபதி அருளம்பலம் (இராசமணி)

நல்லூர் 55, ஆடியபாதம் வீதியைச் சேர்ந்த இராசமணி என அழைக்கப்படும் சபாபதி அருளம்பலம் அவர்கள் 27-12-85 ந் திகதி வெள்ளிக்கிழமை காலமானார். அன்னார் பொன்னம்மாவின் அன்புக் கணவரும். செல்லச்சாமி (துறைமுக அதிகார சபை திருகோணமலை), தில்லைநாயகி, தவமணி, இராஜதுரை, புஷ்பமணி, இராஜரட்ணம் (சட்டப்பட்டதாரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், குமாரசாமி (இலிகிதர்), தவகணேசன் (மொழிபெயர்ப்பாளர்), மயில்வாகனம் [கூட்டுறவுத் திணைக்களம் மன்னார்], ஆசிரியைகள் புவனேஸ்வரி, ரூபராணி, பத்மாவதி ஆகியோரின் அன்பு மாமனுருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் அன்னாரது இல்லத்தில் (இன்று) 29-12-85 ஞாயிறு மு. ப. 10 மணியளவில் நடைபெற்று செம்மணி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தகவல்: அ. இராஜதுரை

[2682]

## மரண அறிவித்தல்
### ரி. எஸ். தொபியாஸ்

மாதகலைச் சேர்ந்த T. S. தொபியாஸ் 28-12-85-ல் காலமாகிவிட்டார்.

இவர் சிலாபத்துறையில் பிரபல வர்த்தகரும் அந்தோனியப்பிள்ளை (அரியரத்தினம்) அவர்களின் அன்புக் கணவரும், மாசிலாமணி, பரிபூரணம், காலஞ்சென்ற திரேசம்மா ஆகியோரின் அன்புச் சோதரரும், மேரிபிரான்சிஸ்கா, அல்பிறெட், மேரி இருதயலீலா, ஆகியோரின் அருமைத்தந்தையும். காலஞ்சென்ற லூயிஸ்பேடினன், இக்கினேசியஸ் கிறிஸ்ரி, அருமைராணி, செல்வநாதர் ஆகியோரின் அன்பு மாமனும், டிக்சன், ஜெனற், பெனற், இமக்கிளற், அல்பன், பற்றிமாநாயகி, யூபிறேசியா, மியூறின், குளோறின், செல்வதயான் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் பூதவுடல் 31-12-85 செவ்வாய்க்கிழமை காலை 8-30 மணிக்கு நல்லடக்கத்திற்காக மாதகல் புனித தோமையார் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (2688)